www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

16—31 மே'88

3 _ 13

விலை ரூ. 1

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




## வன்னியர் —'அரிசன' சாதி மோதலுக்கு சாதி சங்க ஓட்டுக்கட்சி தலைவர்கள் சதி!

படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்




அன்புள்ள ஆசிரியருக்கு,

◆ நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் பொறுப்பிலிருந்து கூட்டுறவுத் துறைக்கு ரேஷன் கடைகள் மாற்றப்பட்டாலும் 3 கிலோ முதல் 7 கிலோ வரையில் குறைத்து வழங்கி கொள்ளையடிக்கும் வாணிபக் கழகத்தின் செயல்பாடு தொடர்வது உண்மையே! ரேஷன் கடை ஊழலுக்கு அடிப்படை காரணத்தையும் பின்னணியையும் தெளிவாக விளக்கி மே 1-15 புதிய ஜனநாயகம் இதழ் வெளி வந்தமைக்கு புரட்சி வாழ்த்துக்கள்.

**ஊற்றங்கரை**
**சந்திரமோகன்**

◆ போஃபோர்ஸ் பீரங்கி ஊழலை மறைக்க ராஜீவ் ஆடிய நாடகத்தையும், அவரது விசுவாச எடுபிடி சங்கரானந்த் மற்றும் ஆயுதபேர தரகன் வின்சட்டா, சந்திரா சாமி ஆகியோரது அயோக்கியத் தனங்களையும் வெளிச்சத்துக்கு கொண்டு வந்த புதிய ஜனநாயகத்துக்கு புரட்சிகர வாழ்த்துக்கள். இந்த ஊழல் கும்பலை புதை குழிக்கு அனுப்புவது எப்போது?

**சுந்தர பெருமாள் கோயில்**
**புரட்சி காப்பியன்**

◆ புதிய ஜனநாயகம் ஏப்ரல் (16-30) '88 இதழ் படித்தேன். போலிக் கம்யூனிஸ்டு கட்சிகளைத் தவிர நாடாளுமன்ற எதிர்க்கட்சிகளான ஓட்டுக் கட்சிகள் அனைத்தும் பாசிச நேரு - இந்திரா - ராஜீவ் பாதையான வாரிசு முறை அரசியலைத்தான் பின்பற்றிக் கொண்டு வருகின்றன. பாசிச ராஜீவ் கும்பலை இந்தக் கும்பல் ஒருபோதும் வீழ்த்த முடியாது என்பதை தலையங்கம் தெளிவுபட விளக்கியது சிறப்பாக இருந்தது.

**ஊற்றங்கரை**
**அறிவுமணி**

◆ புதிய ஜனநாயகம் பற்றி இதற்கு முன் எனக்கு எதுவும் தெரியாது. எனது நண்பர் மூலம் தெரிந்து இந்த புத்தகத்தைப் படித்தேன். பிழைப்புவாத அரசியல்வாதிகளின் பித்தலாட்டங்கள், நிலப்பிரபு முதலாளிகளின் கொள்ளை, சுரண்டல்; மாணவர் - இளைஞர் சமுதாயத்தை சீரழிக்கும் ஆபாச சினிமாக்காரர்கள்; கள்ளச்சாராய வியாபாரிகள் இவர்களுக்குத் துணை போகும் காக்கிச் சட்டையவாளிகள் ஆகியோர்தான் உழைக்கும் மக்களின் பசி, பஞ்சம், வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், ஆகியவற்றுக்கு காரணம் என்பதை தெரிந்து கொண்டேன். உழைக்கும் மக்கள் இக்கொடுமைகளிலிருந்து விடுதலை பெறுவது புதிய ஜனநாயகப் புரட்சியின் மூலம் மட்டுமே சாத்தியம் என்பதை அறிந்து கொண்டேன். இப்புரட்சிப் போராட்டத்தில் எனது பங்கை செலுத்த உறுதியளிக்கிறேன்.

**கம்பம்**
**ராஜன்**

◆ புதிய ஜனநாயகம் 10வது இதழில் எழுத்து மிகவும் சிறியதாக உள்ளது. இன்னும் கொஞ்சம் பெரிய எழுத்தாக இருந்தால் விவசாயிகள் படிப்பதற்கு சுலபமாக இருக்கும். அட்டைப்படக் கட்டுவரை தலையங்கத்திற்கு அடுத்தபடியாக இருந்தால் சிறப்பாக இருக்கும். எழுத்துப் பிழையை தவிர்க்கவும். தாமதமாக வருவதை தவிர்த்து குறித்த நாட்களில் இதழ் எங்கள் கைக்கு கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

**உசிலம் பட்டி**
**வாசகர் வட்டம்**

◆ ஏப்ரல் (1-15)'88 புதிய ஜனநாயகம் படித்தேன். 'ஈழம் துரோகத்தை நோக்கி' என்ற கட்டுரையைப் பற்றி எமது கருத்துக்களை கீழே தருகிறேன். ஈழத் தமிழரின் விடுதலை 'இந்தியா பெற்றுத்தரும் என்று ஈழத்தமிழர்களோ விடுதலைப் புலிகளோ நம்பியிருக்கவில்லை. ஆனால், நிச்சயமாக துரோகம் செய்யாது என்றே எண்ணினோம். அதனால்தான் இந்த நிலை. ஈழத் தமிழர்களை படுகொலை செய்துவரும் பாசிச ராஜீவின் இந்த துரோகச் செயலை முறியடிப்பதற்காக விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியாகவும், ராணுவ ரீதியாகவும் எந்த உபாயங்களைக் கையாண்டாலும் அது தவறுமல்ல: துரோகமுமல்ல. ஆனால், பிளாட், ஈ.பி. ஆர்.எல்.எப் ஆகிய ஈழ துரோக கும்பல்கள் மாகாணசபை, தேர்தல், ஈழப் போராட்டத்தை மழுங்கடித்தல் என்ற நிலைகளில் ஜெயவர்த்தனாவுடன் பேச்சு வார்த்தை நடத்துவாக அறிகிறோம். துரோகம் எந்த வடிவில் வந்தாலும் மக்கள் சக்தியினால் உடைக்கப்படும்; தமிழீழ விடுதலை என்பது காலத்தின் கட்டாயம்; வரலாற்றின் நியதி!

**சுவிட்சர்லாந்து**
**இராஜன்**

◆ புதிய ஜனநாயகம் ஒவ்வொரு முறையும் வெளிவரும் போதும் துப்பாக்கித் தோட்டாக்களைப் போன்ற ஒரு போர்க்குணமிக்க பத்திரிக்கையாக வெளிவருகிறது. குறிப்பாக, நமது இதழில் சோவியத் திரிபுவாதிகளையும், அதன் அடிவருடிகளையும் தொங்குசதை நாடுகளின் சோசலிச முகமூடிகளை கிழிக்கும் வண்ணம் அடிக்கடி வெளியிட வேண்டும்.

ஆப்கான் அதிபர், திரிபுவாதி டாக்டர் நகிபுல்லா, ''மார்க்சியத்தின் மீதான நம்பிக்கையும், இஸ்லாத்தை அரசு மதமாக அங்கீரித்ததும் முரண்பாடல்லவா?'' என்ற நிருபர்களின் கேள்விக்கு பதிலளிக்கையில், ''இதில் எந்த முரண்பாடும் இல்லை; நாங்கள் உண்மைக்கு மதிப்புக் கொடுக்கிறோம்; நாங்கள் முஸ்லீம்கள் எங்களின் கலாச்சாரம் இஸ்லாமியக் கலாச்சாரம். இந்த உண்மையை இதுவரை உணராதது எங்களுடைய தவறு'' என்று வெட்கமில்லாமல் கூறினார். ஏப்ரல் 16-30 இதழில் வெளியான 'ஆக்கிரமிப்புப் படை விலகினால் அமைதி திரும்புமா?' என்ற கட்டுரையில் இதை வெளியிட்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

**சாத்தூர்**
**பாஸ்கரன்.**

◆ ஏப்ரல் 22-24ல் பாசிச ராஜீவின் சென்னை வருகையை எதிர்த்து மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் சார்பாக போஸ்டர் ஒட்டினோம். வழக்கமாக புதிய ஜனநாயகம் விளம்பர போஸ்டர் ஒட்டப்பட்ட இடத்தில் அதன் மேல் வேண்டுமென்றே காங்கிரசு குண்டர்கள் மாநாட்டு போஸ்டரை ஒட்டினர். இதை கேட்டபோது போலிசில் புகார் கொடுத்து எம்மை அழைத்து விசாரித்தனர். அடாவடித்தனத்தை எடுத்துச் சொன்னோம். வேறுவழியின்றி போலீசு 'சமரசம்' செய்து வைத்து இருந்தது. அன்று பகல் 11 மணிக்கு மீதியிருந்த போஸ்டர்களையும். மாமல்லபுரம் முழுவதும் ஒட்டினோம். என்னதான் அதிகாரத்தையும் போலீசையும் வைத்துக் கொண்டு காங்கிரசார் மிரட்டினாலும் உறுதியோடு செயல்பட்டால் நாம் எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை இதன் மூலம் பெற்றோம்.

**மாமல்லபுரம்**
**வாசகர் வட்டம்**

◆ புரட்சிகர புதிய ஜனநாயகத்தை எதிர்பாராத விதத்தில் சுவிஸ் நாட்டில் கண்டேன்; படித்தேன். உண்மையில் தங்களின் பேனாக்கள் மிகவும் கூர்மை வாய்ந்தவை என்பதை நிரூபித்துள்ளீர்கள். இப்படியான நேர்மை வாய்ந்த பத்திரிக்கையை இந்தியாவில் பார்ப்பது இதுவே முதல் தடவை. எந்த நாட்டு அரசாங்கமாக இருந்தாலும் மக்களுக்கு செய்யும் துரோகச் செயலை நீங்கள் தான் திரை கிழித்துக்காட்டுகிறீர்கள். புதிய ஜனநாயகத்துக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சுவிட்சர்லாந்து**
**எஸ்.கே மதியழகன்.**


படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

மூன்றாமாண்டு

13

16—31 மே'88

உள்நாடு
தனி இதழ் : ரூ. 1
ஆண்டு சந்தா : ரூ 24

வெளிநாடுகள்
(விமானத் தபாலில்)
தனி இதழ் : ரூ 6
ஆண்டு சந்தா : ரூ 144

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

# இரகசிய பேரங்கள்– இரகசிய ஒப்பந்தங்கள்!

இரகசிய பேரங்கள், சதிகள் மூலம் அரசியல் பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வுகாணவே முடியாது. பாசிஸ்டுகளின் முகத்தில் மாறிமாறி அறைவது போல பலமுறை இந்த உண்மை நிரூபிக்கப்பட்ட பின்னும், பாசிஸ்டுகள் பாடம் கற்றுக் கொள்ள வலுக் கட்டாயமாக மறுக்கிறார்கள். அகாலிகளைப் பிளவுபடுத்தி ராஜீவ்-லோங்கோவால் கையெழுத்திட்ட பஞ்சாப் ஒப்பந்தம் துப்பாக்கித் தோட்டாக்களால் துளைக்கப் பட்டுவிட்டது. அசாம், மிஜோ ஒப்பந்தங்கள் குற்றுயிரும் குலை உயிருமாகக் கிடக்கின்றன. பூடாசிங்- கெய்சிங் நடத்தும் கோர்க்காலாந்து பற்றிய இரகசிய பேரங்கள் 'குக்ரி'யினால் குத்திக் கிழிபடுகின்றன. ஆனாலும் பாசிஸ்டுகள் இரகசிய பேரங்களையும், சதிகளையும் தொடர்கிறார்கள்.

''ஜே.வி.பி.யினர் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு வன்முறையைக் கைவிடுவார்கள்; ஜே.வி.பி.க்கு எதிரான தடை நீக்கப்படுகிறது. பயங்கரவாத குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தவிர மற்றவர்கள் விடுதலை ஆவார்கள்''- இப்படி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக ஒரு ஜே.வி.பி.வக்கீலையும் ஒரு கிருத்துவப் பாதிரியையும் வைத்துக் கொண்டு பத்திரிக்கையாளர்களிடம் அறிவித்தார் லலித் அதுலத்முதலி. அடுத்த நாளே அப்படி ஒரு ஒப்பந்தம் ஏற்படவே இல்லை; நிபந்தனைகளை ஏற்கவும் இல்லை என்று மறுப்பறிக்கை விட்டார் ஜே.வி.பி.தலைவர் ரோஹண விஜயவீரா. இடைத்தரகராயிருந்த பாதிரியார் அயர்லாந்துக்குக் கம்பி நீட்டிவிட்டார். ஜே.வி.பி. மறுத்தாலும், மீண்டும் தடை விதிக்கப் போவதில்லை என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.

''இலங்கையின் வடக்குக் கிழக்கு மாநிலங்கள் முழுக் கட்டுப்பாட்டில் வந்துவிட்டன. ஏதோ கொஞ்சம் வன்முறை நீடித்தாலும், புலிகள் பங்கேற்காவிட்டாலும் விரைவில் தேர்தல் நடக்கும். இந்திய இராணுவம் கட்டங் கட்டமாக இலங்கையிலிருந்து வெளியேறும். இந்திய இராணுவ மந்திரி பந்த் விரைவில் கொழும்புபோய் ஜெயவர்த்தனேயுடன் விரிவாகப் பேசி அதைமுடிவு செய்வார்.'' என்று ராஜீவுடன் ஒப்பந்தம் செய்திருப்பதாக காமினி திசநாயகே பத்திரிக்கையாளர்களுக்குப் பேட்டியளித்துள்ளார்.

''48 மணி நேரத்துக்குப் போர் நிறுத்தம் செய்துவிட்டு இந்திய ராணுவம் பாசறைக்குள் இருக்கும். அப்போது புலிகள் ஆயுதங்களை ஒப்படைப்பார்கள். அமைக்கப்படும் இடைக்கால மாகாண சபையில் பாதி இடங்கள் புலிகளுக்கும், மீதி மற்ற அமைப்புகளுக்கும் ஒதுக்கப்படும். ஏறக்குறைய 18 கோடி ரூபாய் புனர்வாழ்வு நிதியளிக்கப்படும்'' என்கிற இரகசிய பேரம் புலிகளின் சில தலைவர்களுக்கும் ''ரா''வுக்கும் ஏற்பட்டிருப்பதாக மட்டக்களப்பில் இருந்து பத்திரிக்கைச் செய்தி கூறுகிறது. இந்த அடிப்படையில் விரைவில் ஒப்பந்தம் கையெழுத்தாகுமாம்!

பிடித்து வைத்திருந்த இந்திய சிப்பாயைப் புலிகள் விடுதலை செய்துள்ளனர்; புலிகளுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதாகவும், ஏதோ ஒரு மட்டத்தில் தொடர்பு நீடிப்பதாகவும் ராஜீவ் பலமுறை கூறியுள்ளார். புலிகளும் அதை மறுக்கவில்லை. ராணுவ ரீதியில் பலவீனமாக இருந்தாலும், அரசியல் ரீதியில் வலுவாக இருப்பதாகப் புலிகள் கூறுவது அவர்கள் நடத்தும் பேரத்தைக் குறிக்கிறது.

பேரங்கள், ஒப்பந்தங்கள் பற்றிய தகவல்கள் ஈழ விடுதலைக்கு எதிரான சக்திகளிடமிருந்தே வந்துள்ளன. ஆகவே உறுதி செய்ய முடியவில்லை. எவ்வாறாயினும் அடிப்படையான ஒரு கருத்தை வலியுறுத்துகிறோம். ஈழப் போராளி அமைப்புகள் ஒன்றுசேர்ந்து திம்பு பேச்சு வார்த்தையின்போது முன்வைத்த ஐந்து கோரிக்கைகள் தாம் சரியானவை; நியாயமானவை. ஈழத் தமிழர்களின் நலன்களை உறுதி செய்யக் கூடியவை. பகிரங்கமான முறையில் அவை ஏற்றுக் கொள்ளப்படுவதைத் தவிர வேறு எதுவும் ஈழ மக்களின் நலன்களை அடகுவைப்பதாகும். இரகசிய பேரங்கள், சதிகள் இரகசிய ஒப்பந்தங்கள் அனைத்தும் இந்திய, இலங்கை மக்களுக்கு எதிரானவை.

இந்திய ராணுவ ஆக்கிரமிப்பை ஆயுதந்தாங்கி எதிர்த்துப் போரிடும் காரணத்துக்காகத்தான் புரட்சிகர சக்திகள் விடுதலைப் புலிகளை ஆதரிக்கிறார்கள். ''ரா''வின் சதிகளைபற்றியும், ஈழ எதிர்ப்பு நடவடிக்கைகள் பற்றியும் வெகுதூரம் புலம்பிவிட்டு அவர்களுடனேயே புலிகள் இரகசிய பேரங்கள் நடத்துகிறார்கள்.சகபோராளிகளிடமும், புலிகள் மேற்கொள்ளும் பாசிச நடவடிக்கைகளைப் போலவே, இரகசிய பேரங்களையும் இரகசிய ஒப்பந்தங்களையும் திணிக்க முயலுவதையும் ஈழ மக்கள் எதிர்த்திட வேண்டும். ஈழ மக்கள் பெருமளவு உயிர்த்தியாகம் செய்ததும், இரத்தம் சிந்தியதும் சில குழுத் தலைவர்களின் சுயநலன்களை அடைவதற்காக அல்ல! ஈழ மக்களின்சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதற்கே என்பதை ஈழத் தமிழர்கள் தமது சமரசமற்ற

www.padippakam.com

# வன்னியர் — 'அரிசன' மோதலுக்கு சாதிய சங்க தலைவர்கள் சதி! ஓட்டுக்கட்சி தலைவர்கள் உடந்தை!!

வரவிருக்கும் தமிழக சட்டமன்றத் தேர்தலைப் புறக்கணிப்பது என்று டாக்டர் ராமதாஸ் தலைமையிலுள்ள வன்னியர் சங்கம் முடிவு செய்துள்ளது. தேர்தலுக்கு இன்னும் தேதி குறிப்பிடவில்லை. ஆனால் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரத்தை இப்போதே தொடங்கி விட்டது, வன்னியர் சங்கம். பட்டிதொட்டிகளில் எல்லாம் நள்ளிரவு வரை கிராமக் கூட்டங்கள் நடத்துகிறார்கள். குறிப்பாக வன்னியர் சங்கம் வலுவாக உள்ள தென் ஆற்காடு மாவட்டத்தில் இந்தப் பிரச்சாரம் நடந்து வருகிறது.

வரவிருக்கும் தேர்தலைக் கம்யூனிசப் புரட்சியாளர்களும் புறக்கணிக்கப் போகிறார்கள். ஆனால் இதற்கும் வன்னியர் சங்கம் தேர்தலைப் புறக்கணிப்பதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. இரண்டும் வேறு வேறானது. வேறுவேறான நோக்கங்களையும் தன்மைகளையும், வேறுவேறான புறக்கணிப்பு முறைகளையும் கொண்டவை.

தேர்தல் மூலம், நாடாளுமன்ற- சட்டமன்ற ஜனநாயகத்தின் கீழ் ஒருபோதும் உழைக்கும் மக்கள் சமூக, பொருளாதார, அரசியல் நீதியைப் பெற முடியாது; அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றாமல் உழைக்கும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது; தேர்தல் மூலம் உழைக்கும் மக்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது; புரட்சியின் மூலமே உழைக்கும் மக்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும்; தேர்தலில் பங்கேற்பது இதற்குப் பொருந்தாது என்பதால் கம்யூனிசப் புரட்சியாளர்கள் தேர்தலைப் புறக்கணிக்கிறார்கள்.

கம்யூனிசப் புரட்சியாளர்கள் தேர்தல் புறக்கணிப்புக்கான காரணங்களை விளக்கிப் பொதுக்கூட்டங்கள், கலைநிகழ்ச்சிகள், தெருமுனை- கிராமக்கூட்டங்கள், சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள்- இப்படிப் பலவழிகளில் பிரச்சாரம் செய்கிறார்கள். வீடு வீடாகவும், தனிநபராகவும் கூடப் பிரச்சாரம் செய்கிறார்கள். ஆனால் தேர்தலைப் புறக்கணிக்கலாமா இல்லையா என்பதை மக்கள் தாமே சுதந்திரமாக முடிவு செய்து செயல்படும்படி விட்டு விடுகிறார்கள். மக்கள் ஓட்டுப்போடப் போனால் கம்யூனிசப் புரட்சியாளர்கள் அவர்களைப் பலாத்காரமாகத் தடுப்பதில்லை. குறிப்பிட்ட பகுதியில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்தில் புரட்சிகரப் போராட்டங்களில் ஈடுபடும் போதுதான் கம்யூனிசப் புரட்சியாளர்கள் எதிரிகள் தேர்தலை நடத்துவதை முறியடிக்கும் முயற்சியில் இறங்குவார்கள். அதுவும் மக்கள் ஆதரவோடு மக்கள்திரள் நடவடிக்கையாகவே தேர்தல் புறக்கணிப்பை நிறைவேற்றுவார்கள்.

வரவிருக்கும் தேர்தலை சில கிராமத்து மக்களும் தாங்களாகவே புறக்கணிக்கக் கூடும். ஆனால் இதற்கும் வன்னியர் சங்கம் தேர்தலைப் புறக்கணிப்பதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை! இரண்டும் வேறுவேறானவை. வேறுவேறான புறக்கணிப்பு முறைகளையும் கொண்டிருக்கும்.

''சுதந்திரம் அடைந்தும், ஏழு-எட்டு முறை ஓட்டுப் போட்டும், பலமுறை மனுப் போட்டும்- மன்றாடியும் எங்கள் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படவில்லை; எங்கள் ஊருக்கு சாலை- போக்குவரத்து வசதிகள் இல்லை. குடிதண்ணீர்- பள்ளிக்கூட வசதிகள் இல்லை- எனவே தேர்தலைப் புறக்கணிக்கிறோம்'' என்று ஊர்கூடி ஓட்டுமொத்தமாக முடிவெடுத்துக் கட்டுக்கோப்பாக நிற்பார்கள். ''எங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால்தான் தேர்தலில் பங்கேற்போம்'' என்று கூறும் இந்தக் கிராமமக்களின் கோரிக்கைகள் சில சமயம் அரசால் ஏற்கப்படும். அவர்களும் புறக்கணிப்பைக் கைவிட்டுத் தேர்தலில் பங்கேற்கலாம்.

ஆனால் வன்னியர் சங்கம் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக முடிவு செய்து பிரச்சாரம் செய்து வருகிறதே இதன் நோக்கங்கள்- தன்மைகள் என்ன? இவர்கள் கடைபிடிக்கப்போகும் புறக்கணிப்பு முறைகள்- விளைவுகள் என்ன?

இது முக்கியமான பிரச்சனை. உழைக்கும் மக்களின் நலனில் அக்கறையுடைய புரட்சிகர, ஜனநாயக உணர்வுடைய அனைவரும் கவனஞ்செலுத்தவேண்டிய மிக முக்கியமான பிரச்சினை. சில ஓட்டுக்கட்சி அரசியல் தலைவர்கள், சாதிச் சங்கங்களின் தலைவர்கள், மற்றும் சில பிரபலமான பத்திரிக்கைகளின் சுயநலமிக்க செயல்களினால் உழைக்கும் மக்கள், குறிப்பாக வன்னியர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் மோதிக் கொண்டு ஏராளமாக உயிர்ப் பலியாகக் கூடிய அபாயகரமான அச்சுறுத்தும் பிரச்சினை!

''தமிழக மக்கள் தொகையில் 2 கோடிப் பேர் அதாவது 30 சதவிகிதத்தினர் வன்னியர்கள். ஆனாலும் எல்லாத் துறைகளிலும் ஒதுக்கப்பட்டு மிகவும் பின்தங்கிய நிலையில் வாழுகிறார்கள். எனவே வன்னியர்களுக்கு சமூகநீதி கிடைத்து முன்னேற வேண்டுமானால் மக்கள் தொகைக்கு ஏற்ப கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் இட ஒதுக்கீடு செய்யவேண்டும். அதாவது மத்திய அரசில் 2 சதவிகிதமும், மாநில அரசில் 20 சதவிகிதமும் வன்னியர்களுக்காக இடஒதுக்கீடு செய்யவேண்டும். இந்தக் கோரிக்கைக்காக 86 மே மாதம் ஒருநாள் சாலை மறியல் போராட்டம் நடத்தினோம். 86 நவம்பரில் ஒருநாள் ரயில் மறியல் போராட்டம் நடத்தினோம். 87 செப்டம்பரில் ஒருவாரம் தொடர் சாலை மறியல் போராட்டம் நடத்தினோம். இப்போது தேர்தல் புறக்கணிப்பு செய்கிறோம்.''

''தமிழ்நாட்டில் எங்களை ஆண்ட காங்கிரசு, தி.மு.க., அ.தி.மு.க ஆகிய மூன்று கட்சிகளிடமும் பிரச்சினையை வைத்துவிட்டோம். மூன்று கட்சிகளுமே எங்களைப் புறக்கணித்ததால் நாங்கள் எந்தக் கட்சிக்கு ஓட்டுப் போடமுடியும்? எங்களுடைய கோரிக்கை 40 வருஷப் பிரச்சினை இது. இனி எந்தக் கட்சிக்கும் நாங்கள் ஓட்டுப் போட முடியாது. அதனால், நாங்கள் இந்தத் தேர்தலைப் புறக்கணித்து, தேர்தலில் ஈடுபடாமல் எங்களுடைய அதிருப்தியை நாங்கள் உலகத்திற்குக் காட்டுகிறோம்.''

வரவிருக்கும் தேர்தலை வன்னியர் சங்கம் புறக்கணிப்பதற்கான நோக்கம் இது தானென்று கூறுகிறார் ராமதாஸ்.

''நாங்கள் தேர்தலைப் புறக்கணிக்கும் போது மற்றவர்கள் ஓட்டுப்போட விரும்பினால் அதைப்பற்றி எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஓட்டுப் போடுபவர்களைத் தடுப்பதோ, வன்முறையில் ஈடுபடுவதோ இல்லை என்று நாங்கள் முடிவு செய்திருக்கிறோம்!''

சமூகத்தில் பின்தங்கியவர்கள், வஞ்சிக்கப்பட்டவர்களின் தலைவர் தமது எதிர்ப்பை ஜனநாயக பூர்வமாக அதுவும் அமைதிவழியில் தெரிவிக்கப் போகிறார் என்பது போல ராமதாஸ் பேசுகிறார். ஆனால் அதேசமயம் வன்னியர் சங்கம்

ராமதாஸ்





படிப்பகம்

www.padippakam.com

நடத்தும் தேர்தல் புறக்கணிப்பு இயக்கம் அவ்வளவு ஜனநாயக பூர்வமாக, அமைதி வழியில் இருக்காது என்பதை மிகச் சூசக மாகச் சொல்லுகிறார்.

''மற்றவர்களைத் தடுக்க மாட்டோம். வன்முறையைக் தூண்டித் தடுக்க மாட் டோம். ஆனால், எங்களது பிரச்சாரங்கள் மூலமாக அவர்களை எங்களோடு கலந்து தேர்தலைப் புறக்கணிக்க நாங்கள் அணுகுகி றோம். இதை இப்பொழுதே நாங்கள் ஆரம் பித்துவிட்டோம்''

''பதட்டமான சூழ்நிலை வராமலேயே அமைதியான முறையிலேயே அவர்களை ஒப்புக்கொள்ள வைக்கமுடியும் என்ற நம் பிக்கை எங்களுக்கு இருக்கிறது''

ஆக, தமது அதிருப்தியைக் காட்டுவ தற்காக வன்னியர் சங்கத்தினர் மட்டும் தேர் தலைப் புறக்கணித்து ஒதுங்கியிருந்துவிட மாட்டார்கள். மற்ற சாதி மக்களையும் தேர்த லைப் புறக்கணிக்கும்படி ''பிரச்சாரங்கள் மூலமாக அணுகுவார்கள்'' இது நடைமு றையில் எப்படிப்பட்ட பிரச்சாரமாக இருக் கும்?

ஓட்டுப் போடுபவர்களைத் தடுப்பதோ, வன்முறையில் ஈடுபடுவதோ இல்லை என்று சங்கம் முடிவு செய்திருப்பதாக என் னதான் சொன்னாலும், வன்னியர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் தேர்தலைப் புறக்கணிக்கும்படி முதற்கட் டமாக சமூக ரீதியிலான நிர்பந்தத்தை உரு வாக்குவார்கள் என்று தெரிகிறது...

டாக்டர் ராமதாஸ் இதை மேலும் கொஞ் சம் தெளிவாகக் கோடிட்டுக் காட்டுகிறார். ''எங்களுடைய புறக்கணிப்பு தெளிவாகத் தெரியும். எப்படி என்றால் 100 தொகுதிக ளில் நாங்கள் அதிகமாக இருக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஒரு தொகு தியில் 120 கிராமங்கள் இருக்கிறது என்று வைத்துக் கொண்டால், 10 கிராமங்களைத் தவிர 110 கிராமங்களில் முழுமையாகத் தேர்தல் புறக்கணிப்பு செய்யமுடியும்''

ஆக, வன்னியர்கள் பெரும்பான் மையாக வாழும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு தொகுதியிலும் வன்னியர் சங்கத்தின் புறக்கணிப்பு தெளிவாகத் தெரி யும்படி செய்யப் போகிறார்கள்.

மேற்கண்டவை டாக்டர் ராமதாஸ் ''துக் ளக்'' பத்திரிக்கைக்கு கொஞ்சம் எச்சரிக்கை யோடு அடக்கிவாசித்த பேட்டியில் உள்ள கருத்துக்கள். ''ஜூனியர் விகடன்'' பத்தி ரிக்கைப் பேட்டியில் இன்னும் சற்றுக் காட்ட மாகவே கூறுகிறார், ''இன்றைக்குள்ள அரசி யல் சூழ்நிலையில் புத்தியுள்ள மக்கள் வோட்டுச் சாவடிக்குப் போகமாட்டார்கள்''.

''உங்கள் விசிட்டர்'' பத்திரிக்கைக்குக் கொடுத்த பேட்டியில் வெளிப்படை யாகவே சொல்லுகிறார் ராமதாஸ், ''தேர் தல் புறக்கணிப்பு ஒரு போராட்டம் போலவே நடக்கும்''.

ஆக, வன்னியர் சங்கம் தனது இட ஒதுக் கீடு கோரிக்கையை வலியுறுத்த, தனது சாதி பலத்தைக் காட்ட தேர்தலைப் புறக்கணிப் பது என்று முடிவு செய்துவிட்டது. மற்ற சாதி



எல். இளையபெருமாள்

மக்கள், வெவ்வேறு கட்சிகளில் உள்ள வன் னியர்களேகூட ஓட்டுப் போடுவார்களேயா னால் அது வன்னியர் சங்கத்தின் பலத்தைக் குறைத்துக் காட்டும், தனது கோரிக்கை யைப் பலவீனப்படுத்திவிடும் என்பதால் எப்படியாவது தடுப்பது என்றும் முடிவு செய்து விட்டது. இதைத்தான் ராமதாஸின் பேட்டிகள் சூசகமாகச் சொல்லுகின்றன.

ஓட்டுக்கட்சித் தலைவர்களைப்போல, சாதி சங்கத் தலைவரான ராமதாஸ் பிடிகொ டுக்காமல், சூசகமான முறையில் பேசி ஜன நாயகக் காவலனைப்போல அகிம்சா மூர்த் திபோல நடிக்கிறார். ஆனால் வன்னியர் சங்கம் நடத்தும் தேர்தல் புறக்கணிப்பு, பிரச் சாரக் கூட்டங்களில் நேரடியாகவே, அப்பட் டமாகவே சொல்லுகிறார்கள்

''தேர்தல் வரப்போகிறது என்று கூறிக் கொண்டு திரிகிறார்கள். தேர்தல் இப்போது நடக்கக் கூடாது. தேர்தலை அறிவிக்கக்கூ டிய அதிகாரம் இனமானக் காவலர் டாக்ட ரய்யாவுக்குத்தான் உண்டு'' என்று வன்னிய சங்கத்தின் மாநில துணைத் தலைவர் பேசுகி றார்.

''நாம் அழுத்தம் திருத்தமாகத் தேர்தலை முறியடிப்போம் என்று கவர்னரிடம் கூறி யுள்ளோம். தேர்தலைப் புறக்கணிப்பது வேறு, முறியடிப்பது வேறு தமிழ்நாட்டில் தேர்தல் நடப்பது கஷ்டம். வன்னியர் சங்கம் தேர்தலைப் புறக்கணித்தாலும், மற்ற சாதிக் காரர்களின் வோட்டுக்களை வாங்கி ஜெயித் துவிடலாம் என்று அரசியல் கட்சிகள்

சாதிவெறியூட்டப்பட்ட இளைஞர்கள்: வன்னியர் சங்கத் தலைவருக்குப் பாதுகாப்பு கொடுக்கும் மஞ்சள் பூனைகள்.



நினைத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் நடக்கப் போவது வேறு'' என்று வன்னியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் பேசுகிறார்.

மற்ற சாதிக்காரர்கள் ஓட்டுப் போடுவதை வன்னியர் சங்கத்தினர் அனுமதிக்கப் போவ தில்லை; முறியடிக்கப் போகிறார்கள்- என்ப தைப் பகிரங்கமாகவே கூறுகிறார்கள். ஏற்க னவே வன்னியர்கள் பெரும்பான்மையாக வாழும் கிராமங்களில் மற்ற அரசியல் கட்சிகளின் கொடிகளே பறக்கக்கூடாது என்று தடுக்கிறார்கள்.

''எங்கள் மக்கள் வாழும் இடங்களில் எங்கள் சங்கக் கொடியே போதும் என்று எங்கள் சமூக மக்கள் கருதுகிறார்கள். வன் னியர் வாழும் இடங்களில் 200 பேர் நாயுடு அல்லது மற்றவர்கள் இருந்தால், அவர்களு டன் கலந்து பேசி முடிவு செய்கிறோம்; எந் தப் பிரச்சினையாக இருந்தாலும் பேசியே தீர்த்துக் கொள்கிறோம்'' என்று பேட்டிய ளித்துள்ளார் ராமதாஸ்.

எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் பேசித் தீர்ப்பதாகவும், பிரச்சாரத்தின் மூலமாக மற்ற சாதியினரையும் தேர்தலைப் புறக்கணிக்கும்படி அணுகுவதாகவும் வன் னியர் சங்கத்தினர் கூறுகின்றனர். ஆனால் கிராமங்களில் மற்ற கொடிகள் பறக்கக்கூ டாது, தேர்தலை முறியடிப்பது என்கிற வன் னியர் சங்க முடிவு நடைமுறையில் சாதிக் கலவரமாகத்தான் முடியும்.

ஏற்கனவே வன்னியர் சங்கம் நடத்திய சாலை மறியல், ரயில் மறியல் போராட் டங்கள் அரசுக்கும், வெளியாருக்கும் எதிரா னவைதான். இருப்பினும் சென்ற ஆண்டு செப்டம்பரில் நடந்த சாலை மறியல் போராட்டம் பல கிராமங்களில் வன்னியர்- தாழ்த்தப்பட்ட மக்களுக்கிடையிலான சாதிக் கலவரமாகத் திரும்பியது. சில ஆயி ரம் தாழ்த்தப்பட்ட மக்களின் குடிசைகளும், சில நூறு வன்னியர் குடிசைகளும் எரிக்கப் பட்டன. தாழ்த்தப்பட்ட மக்கள் உயிரோடு கொளுத்தப்பட்டதாகவும், கற்பழிக்கப்பட் டதாகவும் வதந்திகள் பரவி இருசாதியினரி டையே பகைமைத்தீ மூண்டது.

**இந்த ஆண்டு ஜனவரியில் தாழ்த்தப் பட்ட மக்கள் தலைவர் என்று சொல்லிக் கொள்ளும் காங்கிரசு பிரமுகர் இளையபெ ருமாள் வன்னியர்களால் வெட்டிக் கொல் லப்பட்டதாக வதந்தி பரவியது. உடனடி யாகவே திருச்சி, தஞ்சை, தென்னாற்காடு மாவட்டங்களில் சாதிக் கலவரம் மூண்டது. தங்கள் தலைவர் கொல்லப்பட்டதாகக் கருதி ஒரு பிரிவு தாழ்த்தப்பட்ட மக்கள் பஸ்களை எரித்தனர்; சாலையோர மரங்களை வெட் டிச் சாய்த்தனர்; சிறுபாலங்கள்- நெடுஞ்சா லைகளைத் தகர்த்தனர். வன்னியர் வீடுக ளைத் தாக்கித் தீயிட்டனர்; பம்பு செட்டுக ளைத் தகர்த்தனர்.**

**வன்னியர்கள் திருப்பித் தாக்கி இதே போல சூறையாடுவதில் இறங்கினர். போலீஸ் துடியடி துப்பாக்கிச் சூடு நடந்து 3 வன்னியரும், 5 தாழ்த்தப்பட்டவரும் மாண்டு போயினர். ஒரு வதந்தி இவ் வளவு விபரீதமாக முடிந்தது! இதே வட்டா**

படிப்பகம்

www.padippakam.com

ரத்தில்தான் காட்டு மன்னார்குடி பகுதியில் ஓராண்டுக்கு முன்பு, தாழ்த்தப்பட்ட மக்கள் சாதி ஒடுக்குமுறை - தீண்டாமை ஆகியவற்றுக்கு எதிராக கோவில், சாவு, சடங்கு முதலியவற்றில் மோளமடிக்க மறுத்தபோது வன்னியர்கள் அவர்களைத் தாக்கினர். வீடுகளுக்குத் தீயிட்டுக் கொளுத்தினர். தாழ்த்தப்பட்டவர் ஒருவரைக் கொன்றனர்; துப்பாக்கிச் சூடு, தடியடி, சாதிக் கலவரம் நான்கு நாட்கள் நீடித்தது.

கல்வி அறிவும், சமூக விழிப்புணர்வும், ஒரு சிலராவது பொருளாதார முன்னேற்றமும் அடைவதை ஒட்டி தாழ்த்தப்பட்ட மக்கள் பழைய சாதிய ஒடுக்குமுறைகளுக்கு உட்பட மறுக்கின்றனர். ஆனால் சாதி அதிகாரத்தை இழக்க விரும்பாத "மேல்சாதி"க்காரர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது பயங்கரக் கலவரத்தைக் கட்டவிழ்த்துவிட்டு மீண்டும் அடக்கி ஒடுக்கி வைக்க முயல்கின்றனர். 1978 ஜூலையில், விழுப்புரம் நகரில் எல்லா மேல்சாதிக்காரர்களும் கூட்டணி சேர்ந்து தாழ்த்தப்பட்ட மக்களைத் தாக்கி 12 பேரைப் படுகொலை செய்த சம்பவம் இதற்கு தெளிவானதொரு உதாரணமாக இருந்தது.

ஏற்கனவே வளர்ந்துவரும் வன்னியர்-தாழ்த்தப்பட்ட மக்களிடையேயான சாதிப் பகைமையை, தற்போது தனி இட ஒதுக்கீடு கோரி வன்னியர் சங்கம் நடத்தும் போராட்டம் மற்றும் தேர்தல் புறக்கணிப்பு ஆகியவை சாதிக் கலவரமாக வெடிக்கும் அளவு கூர்மைப்படுத்துவனவாக இருக்கின்றன.

வேலை வாய்ப்புகள், இட ஒதுக்கீடுகள் மற்றும் பிற பொருளாதார, சமூகப் பிரச்சினைகளில் வன்னியர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் ஒருவரை ஒருவர் எதிரிகளாக கருதுகின்றனர். சுயநலமிக்க சாதி சங்கங்களின் தலைவர்கள் இத்தகைய கருத்தைத் திட்டமிட்டே உருவாக்குகின்றனர். அதற்கான அடிப்படையாகக் கிராமப்புற வன்னியர் தாழ்த்தப்பட்டவர் சமூகப் பொருளாதார வாழ்க்கை நிலைமை இருக்கிறது.

குறிப்பாக வடாற்காடு, தென்னாற்காடு, செங்கல்பட்டு, தர்மபுரி மாவட்டங்களில் இரண்டு சாதி மக்களும் ஏறக்குறைய சமமான தொகையில் வாழுகின்றனர். வன்னியர்களில் சிலர் நிலப்பிரபுக்களாகவும் பணக்கார விவசாயிகளாகவும் இருந்தாலும் பெரும்பாலான வன்னியர்கள் தாழ்த்தப்பட்ட மக்களைப் போலவே கூலி ஏழை விவசாயிகளாக உள்ளனர். 12 தாழ்த்தப்பட்ட மக்களைக் காவு கொண்ட சாதிக் கலவரம் நடந்த விழுப்புரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களைப் போலவே வன்னியர்களிலும் பெரும்பாலானவர்கள் ரிக்ஷா- கைவண்டி இழுக்கும், மூட்டை சுமக்கும் தொழிலாளிகளாகவும் பாடுபடுபவர்கள். இதே நிலைமைதான் இந்த மாவட்டங்களில் உள்ள சிறிய, பெரிய நகரங்களிலும் உள்ளது.

இருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக முன்னேற்றம் "மேல்சாதி" என்கிற தமது சமூக அந்தஸ்தையும், கௌரவத்தையும், அதிகாரத்தையும் பாதிக்கும் என்று



யாதவர் முன்னணி ராமன் யாதவ்

பொதுவாக அனைத்துப் பிரிவு வன்னியர்களும் கருதுகிறார்கள். அதெல்லாம் நிலப்பிரபுக்களாகவும், சிறு முதலாளிகளாகவும், பணக்கார விவசாயிகளாகவும், அரசு அதிகாரிகளாகவும் உள்ள வன்னியர்களுக்குத்தான். அவர்களுக்குச் சமமான சமூக அந்தஸ்தோ, கௌரவமோ, அதிகாரமோ பெரும்பான்மை உழைக்கும் மக்களான வன்னியர்களுக்குக் கிடையாது என்பதை இவர்கள் உணரவில்லை.

பெருகிவரும் கிராமப்புற வேலையில்லாத் திண்டாட்டத்தால் பாதிக்கப்படும் உழைக்கும் மக்களான வன்னியர்- தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு எந்த வகையிலும் வாழ வழி செய்யவில்லை. கல்வி மற்றும் சமூக ரீதியில் பின்தங்கிய மக்களுக்கு இட ஒதுக்கீடு செய்வதன் மூலம் சமவாய்ப்பளித்து முன்னேற்றப் போவதாகச் சொன்னார்கள். ஆனால் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் ஓட்டுப் பொறுக்கும் நோக்கத்தோடு பல செல்வாக்குமிக்க சாதிகளையும் பிற்படுத்தப்பட்டவையாக்கின. எனவே உண்மையில் பின்தங்கிய சாதிகளுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டது. எனவே சில சாதிகள் மக்கள் தொகைக்கேற்ப தனித்தனி இட ஒதுக்கீடுகள்

தமிழ்நாடு தேவர் பேரவை நிறுவனரான டாக்டர். வீ. ராமகிருஷ்ணன்



கோருகின்றன. இப்படியும் செய்ய முடியாது; ஏனெனில், நூற்றுக்கணக்கான சாதிகள் இருப்பதால் மிக மிகச் சிறுபான்மையினரான சாதிகளுக்கு இட ஒதுக்கீடே செய்ய முடியாமற் போய்விடும்.

எனவே இட ஒதுக்கீடு முறையானது சமூக முரண்பாடுகளைத் தீர்க்கவும், சம வாய்ப்புகள் அளிக்கவும் தவறிவிட்டது. அதைவிட முக்கியமாக சாதி ரீதியிலான சங்கங்கள் வளர்ந்து சாதிக் கலவரங்களுக்கு வித்தூன்றப்பட்டுவிட்டது.

வன்னியர் சங்க கோரிக்கையை முறியடிப்பதற்காக எல்லா சாதி சங்கங்களின் கருத்தும் கேட்டு முடிவு செய்வதாக நாடகமாடத் தொடங்கினார் எம்.ஜி.ஆர். 94 சாதி சங்கங்களைச் கூப்பிட்டு விருந்து கொடுத்து குறைகேட்டு காலத்தைக் கழித்துவிட்டு அவரும் காலமாகிப் போனார்.

இப்போது தேர்தலைப் புறக்கணிப்பதாக வன்னியர் சங்கம் முடிவு செய்து பிரச்சாரத்தை ஆரம்பித்தவுடன் மற்றபிற சாதிச் சங்கங்களை உசுப்பிடும் வேலையை. ஓட்டுக் கட்சிகள் துவங்கிவிட்டன. "தேவர் பேரவை" என்கிற பெயரில் ஒருவரும், "யாதவர் முன்னணி" என்கிற பெயரில் மற்றொருவரும் கிளம்பியுள்ளனர். முக்குலத்தோர் புறக்கணிக்கப்பட்டதாக அவரும், யாதவர்கள் ஒதுக்கப்பட்டதாக இவரும் அறிக்கைவிட்டுப் பேட்டி கொடுத்துள்ளனர். இவர்கள் இருவருமே வன்னியர் சங்கம் தேர்தலைப் புறக்கணிப்பதைக் கடுமையாக எதிர்க்கின்றனர். தேர்தலைப் புறக்கணிப்பதா வேண்டாமா என்கிற சச்சரவில் இப்போது சாதிச் சங்கங்கள் குதித்துள்ளன. யாதவர் முன்னணியும், தேவர் பேரவையும் பெரும்பாலும் தென் மாவட்டங்களில்தான் உள்ளன. வன்னியர் பெரும்பான்மையாக வாழும். வட மாவட்டங்களில் தற்செயலாக இவை இல்லை. இருந்திருந்தால் சாதி மோதலுக்கு மேலும் கூடுதலான வாய்ப்பிருந்திருக்கும்.

"தேர்தலைப் புறக்கணிப்பது என்ற முடிவைக் கொஞ்சம் கூட மாற்ற மாட்டோம். நூற்றுக்கு நூறு மாறவே மாட்டோம்" என்று அறுதியிட்டுக் கூறுகிறார் ராமதாஸ். சட்டம் போடக்கூடிய அதிகாரமுள்ள ராஜீவ் அரசாங்கம் அவர்களது பிரச்சினையைத் தீர்த்து வைத்தால் தேர்தலில் பங் கேற்கலாம் என்று கூறுகிறார்.

முன்பு விவசாயிகள் சங்கத் தலைவர் நாராயணசாமியிடம் பேரம் பேசுவதற்கு ஓட்டுக் கட்சித் தலைவர்கள் படையெடுத்ததைப் போல ராமதாசுடன் தூது அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். வன்னியர் சங்கத்தின் கோரிக்கைகளை ஏற்பதாகவும், லட்சக்கணக்கில் பணம் தருவதாகவும் சில ஓட்டுக் கட்சிகள் பேரம் பேசுவதாக கூறுகிறார் ராமதாஸ். வாக்குறுதிகளை நம்பியோ பணத்திற்கு ஆசைப்பட்டோ சங்கத் தலைமை தேர்தல் புறக்கணிப்பைக் கைவிடுமானால், வழக்கமான கூத்துகளோடு முடிந்துவிடும்.

எதிர்கால அரசியல் சுய நலனைக் கருதி பணத்தை மறுத்தும், வாக்குறுதியை நிராக



படிப்பகம்

www.padippakam.com

ரித்தும் தேர்தலைப் புறக்கணிப்பதில் சங்கத் தலைமை உறுதியாக நிற்குமானால் வடமா வட்டங்களில் குறிப்பாக வன்னியர் - தாழ்த்தப்பட்டவர் சாதிக்கலவரம் நடப்ப தற்கான அபாயம் நிச்சயமாகிவிடும். வன்னிய சங்கத்தினர் கட்டுப்பாட்டோடு தேர்தலைப் புறக்கணித்து விடும்போது வட மாவட்டங்களில் அடுத்துப் பெரும்பான்மையினரான தாழ்த்தப்பட் மக்களைத்தான் ஓட்டுக்கட்சிகள் நம்பி இருக்கும். தாழ்த்தப் பட்ட மக்களது தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டு பலபிழைப்பு வாதத் தலைவர்கள் பல அமைப்புகளை நடத்துகிறார்கள். இந்தத் தலைவர்களை விலைக்கு வாங்குவதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களது ஆதரவைப் பெற்றுவிட முடியும் என்று ஓட்டுக் கட்சிகள் நம்புகின்றன.

வன்னியர் சங்கம் நடத்தும் தேர்தல் புறக்கணிப்பை முறியடித்துத் தங்களுக்கு ஓட்டுபோடும்படி தாழ்த்தப்பட்ட மக்களை வன்னியர்களுடன் மோதும்படி எல்லா ஓட்டுக் கட்சிகளுமே தூண்டிவிடும். தாழ்த்தப் பட்ட மக்கள் ஓட்டுப் போடுவதே தமது சங்கக் கோரிக்கையை முறியடிக்கும், தமது சாதிக்கு எதிரான நடவடிக்கை என்பதாக வன்னியர்களை சங்க தலைமை தூண்டிவிடும். விளைவாக ஏராளமான தாழ்த்தப்பட்ட — வன்னிய உழைக்கும் மக்கள் பலியாவார்கள்.

ஓட்டுப் பொறுக்கி ஆட்சியைப் பிடிக்கும் நோக்கத்தோடு எத்தகைய கொலைகாரச் சதியிலும் ஈடுபடக் கூடியவர்கள் இந்த அர கட்சிகள் இதற்கு முப்பதாண்டுகளுக்கு முனனரே ஒரு முன்`உதாரணமும் உண்டு. .1957 செப்டம்பரில் முதுகுளத்தூரில் நடந்த இடைத் தேர்தலில் முக்குலத்தோரின் கட்சியாகிய பார்வார்டு பிளாக்கும் காங்கிரசும் மோதின. முத்தராமலிங்கத் தேவரின் தலைமையிலான முக்குலத்தோர் அங்கே பெரும்பான்மை சாதியினர் - கட்டுக்கோப்பாக இருந்து பார்வார்டு பிளாக்கை வெற்றிபெறச் செய்தனர்.

சாதி அரசியல் நடத்துவதில் கைதேர்ந்தவரான காமராஜர் நாடார்களையும் அந்தப் பகுதி தாழ்த்தப்பட்ட மக்களாகிய பள்ளர்களையும் முக்குலத்தோருக்கு எதிராகத் தூண்டி விட்டார். அதே சமயம் மாவட்டக் கலெக்டரைக் கொண்டு சாதிகளின் சமரச மாநாடு கூட நடத்தினார். மாநாடு முடிந்த சில தினங்களிலேயே சாதிக்கலவரம் மூண்டு இருதரப்பிலும் பலர் படுகொலை செய்யப்பட்டனர். அறுபது பேர் மாண்டதாக அரசு அறிவித்தது. நூறுக்கும் மேலானவர் பலியானதாக பார்வார்டு பிளாக் தலைவர்கள் கூறின ர்.

கீழ்த்தூவல் கிராமத்தில் தொடங்கி ஏழு இடங்களிலும் போலீசு துப்பாக்கி சூடு நடத்தி பலரைச் சுட்டு பொசுக்கினர். போலீசு மந்திரியாக இருந்த பக்தவச்சலம் இடைத்தேர்தல் பிரச்சாரத்துக்குப் போன போதே காங்கிரசு தோற்றால் கடும் விளைவு ஏற்படும் என்று எச்சரித்திருந்தார். பிறகு தோல்வியுற்ற காங்கிரசார் சாதிக் கலவரத்தை மூட்டி கொலை காரச் சதியை நடத்திக் காட்டினர்.

காங்கிரசு - ஜெயலலிதா அ.தி.மு.க. தொடர்ந்து ராமதாசுடன் பேரம் பேசிக் கொண்டிருக்கின்றன. ஜானகி அ.தி.மு.கவும் முயன்றது; ஆனால் பலிக்கவில்லை. கருணாநிதி தி.மு.க. தனது முதல் எதிரி என்று ராமதாஸ் அறிவித்துள்ளார். எனவே தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் பிழைப்புவாதத் தலைவர்களை எல்லா ஓட்டு கட்சிகளும் நிச்சயம் அணுகவே செய்யும். மக்களின் உயிர் மீது துளியும் அக்கறை இல்லாத ஓட்டுக் கட்சிகள் அவர்களைப் பலியிடத் தயங்க மாட்டார்கள்.

சாதி - மத வகுப்புக் கலவரங்கள் அவ்வப்பொழுது வெடித்தாலும் வட நாட்டில் காண்பதைப் போல நிரந்தரமான வியாதியாகத் தமிழகத்தில் இதுவரை வேரூன்றவில்லை. விழுப்புரம், பேரணம்பட்டு, ராஜபாளையம், புளியங்குடி, சாதிக் கலவரங்கள், மண்டைக்காடு மதக் கலவரங்கள் நடந்தன. அவற்றையும் மிஞ்சிவிடும் சாதிக் கலவரம் வெடிப்பதற்கான எரிமலையாக வட மாவட்டங்களில் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றது. தாழ்த்தப்பட்ட மக்கள் - வன்னியர் ஆகிய இருசாதிகளிலும் பெரும்பான்மையினர் உழைக்கும் மக்கள். ஒரு சில ஓட்டுக் கட்சித் தலைவர்கள், பிழைப்புவாதத் தலைவர்கள், சாதி சங்கத் தலைவர்களின் சுயநல சதிகளுக்கு இவர்கள் பலியாகக் கூடாது.எச்சரிக்கையாக இருந்து முறியடிக்க வேண்டும். தேர்தல் புறக்கணிப்போ, பங்கேற்போ அவரவர் விருப்பத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும். அதிலே வன்முறையோ, நிர்பந்தமோ கூடாது என்கிற கட்டுப்பாட்டை, உறுதியை உழைக்கும் மக்கள், குறிப்பாக இளைஞர்கள் மேற்கொள்ள வேண்டும். சாதிக் கலவரங்களைத் தூண்டும் நபர்களைப் பிடித்துத் தண்டிக்கவும், தலைவர்களை அம்பலப்படுத்தவும் வேண்டும்.

ஆர்.கே.



## மே நாள் அணிவகுப்பு- அறைக் கூட்டம்- பொதுக் கூட்டங்கள்

* திருவையாறு ஒன்றியத்தைச் சார்ந்த விவசாயிகள் விடுதலை முன்னணியின் சார்பாக வரகூர் கிராமத்தில் மே தினம் சிறப்பாக நடந்தது. தியாகிகளுக்கு வீரவணக்கத்துடன் 50க்கும் மேற்பட்ட கிராம உழைக்கும் மக்கள் கூடி, விண்ணதிர முழக்கத்துடன் வி.வி.மு. கொடியேற்றப்பட்டது. மே தினத்தைப் பற்றியும் இன்றைய அரசியல் சூழ்நிலை பற்றியும் உழைக்கும் வர்க்கத்தின் கடமையைப் பற்றியும் தோழர் ஜெயசீலன் உரையாற்றினார்.

* சமயநல்லூர் புதியஜனநாயக வாசகர் வட்டம் சார்பில் மே தின அறைக்கூட்டம் நடத்தப்பட்டது. மே தினத்தன்று மாலை 5 மணிக்குத் துவங்கிய இக்கூட்டத்தில் மே தினத்தைப் பற்றியும் பாட்டாளி வர்க்கத்தின் கடமையைப் பற்றியும் தோழர்கள் சிறப்பாக உரையாற்றினர். பங்கேற்ற தோழர்கள் உத்வேகத்தோடு மே தின சபதமேற்றனர்.

* திருவோணம் ஒன்றியத்தைச் சார்ந்த விவசாயிகள் விடுதலை முன்னணி சார்பில் ஊரணிபுரத்தில் மே 3-ம் தேதி அன்று ஊர்வலமும், வி.வி.மு கொடியேற்று விழாவும், ராஜீவ் சென்னை வருகையையொட்டி முன்னெச்சரிக்கை என்ற பெயரில் தோழர்கள் கைது செய்யப்பட்டதை கண்டித்து பொதுக் கூட்டமும் நடைபெற்றது. செங்கொடிகள் அசைந்தாடஊர்வலம் கடைவீதி வழியாக விண்ணதிர முழக்கத்தோடு வந்தது. ஊர்வல முடிவில் வீரவணக்க முழக்கத்ினூடே வி.வி.மு கொடியை தோழர் இராம துரை மாணிக்கம் ஏற்றிவைத்தார். பின்னர், தோழர் காமராஜ் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் குருமூர்த்தி, நடராஜன், மாது, இராம துரை மாணிக்கம் ஆகியோர் மே தினத்தைப் பற்றியும், பாசிச அபாயத்தை முறியடிக்க மே தினத்தில் சபதமேற்கும் வகையிலும் சிறப்புரை ஆற்றினர். சுமார் 500 பேர் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பித்தனர்.

* சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் போராட்ட நாளான மே தினத்தன்று சென்னை மக்கள் கலை இலக்கியக் கழகம் சார்பாக ஆர்ப்பாட்ட ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நடைபெற்றது. செங்கொடிகள் விண்ணில் உயர சென்னை ஐ.சி.எஃப். பஸ் நிலையத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு வில்லிவாக்கம் பஸ் நிலையத்தைச் சென்றடைந்தது. 59 வது அரசியல் சட்டத்திருத்தத்தை எதிர்த்தும், ஈழ ஆக்கிரமிப்புக்கெதிராகவும், இந்தியக் கொலை வெறி இராணுவத்தின் அக்கிரமங்களை அம்பலப்படுத்தியும் விண்ணதிர கோஷங்கள் ஊர்வலத்தில் எழுப்பபப்பட்டன.

பொதுக் கூட்டத்தில், புதிய ஜனநாயகம் ஆசிரியர் தோழர் மதியழகனும், மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் செயலர் தோழர் மருதையனும் சிறப்புரையாற்றினர். கூட்டம் புரட்சிகர கலை நிகழ்ச்சியுடன் நிறைவடைந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# இந்துஜாக்கள்

## சொந்த நாட்டைச் சூறையாடும் பாசிஸ்டுகளின் பங்காளிகள்!



இந்துஜாக்கள் — சமீப காலமாக பத்திரிக்கைகளில் பரபரப்பாகவும் பிரபலமாகவும் அடிப்படும் ஆயுதபேரத் தரகர்கள். போபர்ஸ் பீரங்கி பேர ஊழலிலும், ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல் பேர ஊழலிலும் இடைத்தரகர்களாகச் செயல்பட்ட ராஜீவின் பினாமிகள். தங்கள் வலைப் பின்னல் கம்பெனிகள் மூலம் உலகெங்கும் விரிவடைந்துள்ள 'தொழிலதிபர்கள்'! கடத்தல்காரர்கள், ஆயுத பேரத் தரகர்கள், ரகசிய உலகப் பேர்வழிகளின் சொர்க்க பூமியாகத் திகழும் பகாமாஸ், பனாமா, பெர்முடா, லைபீரியா முதலான நாடுகளில் விபரங்களைக் கண்டறிய முடியாத ரகசிய வங்கிக் கணக்குகளில் கோடிக்கணக்கில் குவித்து வைத்துள்ள வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள். வெளிநாடுகளில் வாழும் பணக்கார இந்தியர்களிலேயே முதலிடம் வகிக்குமளவுக்கு ஆண்டுக்கு 14,000 கோடி ரூபாய்க்கு வரவு செலவு காட்டும் பெரும் தரகு முதலாளிகள். இத்தனைக்கும் இந்துஜாக்கள் எங்கேயும் தொழிற்சாலை தொடங்கி பொருளுற்பத்தி செய்வதில்லை.

ரோல்ஸ் ராய்ஸ் சொகுசுக் கார்கள், தனி ஜெட் விமானம், லண்டனில் மிகப் பெரிய பங்களா, இதுதவிர பம்பாயிலும், தெற்கு பிரான்சிலும் கடற்கரையை ஒட்டி ஆடம்பர மாளிகைகள், சுவிஸ் நாட்டில் ஆல்ப்ஸ் மலையில் விடுமுறைக் கால வீடுகள், வைரம், வைடூரியம், தங்க ஆபரணங்கள், ஆடம்பரத் திருமணங்கள், பகட்டான வாழ்க்கை என்று நவீன மகராஜாக்களாக வலம் வரும் இந்துஜாக்களைப் பார்த்து கொட்டை போட்ட தொழில் முதலாளிகளே அதிசயித்துப் போகின்றனர்.

70களில் துவக்கத்தில் வெறும் 40 கோடியளவுக்கு சொத்துக்களைக் கொண்டிருந்த இந்துஜா குடும்பம் பத்தாண்டுகளுக்குள் பூதாகரமாக முன்னேறிவிட்டது. இன்று இந்துஜாக்களின் சொத்து மதிப்பு 2,000 கோடி ரூபாயுக்கும் மேலிருக்கும் என்று கருதப்படுகிறது. தரகுப் பெரு முதலாளிகளான டாட்டா, பிர்லாக்களின் மொத்த சொத்து மதிப்பு கூட 1000 கோடியைத் தாண்டாது. ஏராளமான வரி ஏய்ப்பு, கள்ளக் கணக்கு, மோசடி, தில்லுமுல்லுகள் செய்தும் கூட முன்னேற முடியாத இந்தியப் பெரு முதலாளிகளில் ஒரு பிரிவினர் இந்துஜாக்களின் அசுரத்தனமான வளர்ச்சியைக் கண்டு பிரமித்துப் போய் நிற்கின்றனர். மற்றொரு பிரிவினரோ இந்தியாவில் முதலீடு செய்ய இறங்கியுள்ள இந்துஜாக்களைக் கண்டு பொறாமையால் வெதும்பிக் குதிக்கின்றனர்.

ஏற்றுமதி — இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த இந்துஜாக்களால் குறுகிய காலத்திலேயே குபேரர்களாக முடிந்தது எப்படி? உலகெங்கும் 43 நகரங்களில் 21 வர்த்தகத் தரகுக் கம்பெனிகளைக் கொண்டு உலோகங்கள், எண்ணெய், உரங்கள் முதலானவற்றை சர்வதேச அளவில் வர்த்தகம் செய்வதன் மூலம் தாங்கள் முன்னேறியுள்ளதாக இந்துஜாக்கள் ஒரு பேட்டியில் குறிப்பிடுகின்றனர். ஆனால் இதன் மூலம் மட்டுமே இந்துஜாக்கள் முன்னேறியிருக்க முடியுமா? ஏற்கனவே கொட்டை போட்ட வர்த்தகத் தரகர்களோடு போட்டி போட்டுக் கொண்டு குறுகிய காலத்திற்குள் இந்துஜாக்கள் அபரிதமாக வளர்ந்ததாகக் கூறுவது கேழ்வரகில் நெய் வடிந்த கதைதான்! ஆயுத பேரத் தரகுத் தொழில்! இன்றைய உலகில் குறுக்கு வழியில் குறுகிய காலத்திலேயே கோடி கோடியாகச் சுருட்டுவதற்கான சுலபமான தொழில். மூன்றாம் உலக நாடுகளின் சர்வாதிகாரிகள் ஆயுதக் கொள்ளையின் மூலம் சொந்த நாட்டைச் சூறையாடுவதற்கு கமிஷன் ஏஜெண்டுகளாக இந்துஜாக்கள் செயல்பட்டதன் மூலம், தமது தகப்பனார் 50 ஆண்டுகளாகச் சேகரித்த சொத்துக்களை விடப் பல மடங்கு அதிகமாக பத்தாண்டுகளில் சம்பாதித்தனர்.

ஏற்கனவே தமது தந்தை காலத்திலிருந்தே ஈரானுடன் வர்த்தக உறவு கொண்டிருந்த இந்துஜாக்கள், அமெரிக்க அடிவருடியும் ஈரானின் சர்வாதிகாரியுமான மன்னர் ஷா ஆட்சிக் காலத்தில் தான் ஆயுத பேரத் தரகர்களாக முன்னேறினர். 1973ல் பெட்ரோல் விலையேற்றத்தின் காரணமாக ஈரானும் பிற வளை குடா நாடுகளும் கொழுத்த லாபமடைந்தன. ஈரானைச் சூறையாடிய மன்னர் ஷா இந்த லாபத்தை அன்னிய தொழில்நுட்ப இறக்குமதிக்கும் ஆயுதக் கொள்ளைக்கும் அள்ளி இறைத்தார். அப்போது இந்துஜாக்கள்தான் இடைத்தரகர்களாகச் செயல்பட்டனர். ஒவ்வொரு பேரத்திலும் குறைந்தது பத்து சதவீதம் கமிஷன் பெற்று கொள்ளையடித்தனர். கடுகளவு முதலீடு; லாபமோ கடலளவு! தொழிற்சாலை இல்லை; தொழிலாளர் பிரச்சினையில்லை; பொருளாதார ஏற்ற இறக்கங்களுக்குகேற்ப தொழில் பாதிக்குமோ என்ற கவலையுமில்லை. கமிஷனில் இருநாட்டுத் தலைவர்களுக்கும் கணிசமான பங்கு கொடுக்கப்படுவதால், மாட்டிக் கொள்ள வேண்டிய பிரச்சினையும் இல்லை.

தரகர்கள் வழக்கமாகக் கையாளும் தந்திரத்தையே இந்துஜாக்களும் பின்பற்றுகின்றனர். உலகின் எல்லா பெரிய மனிதர்களும் நாடுகளின் அதிபர்களும் தங்களுக்கு நெருக்கம் என்று காட்டிக்கொள்ளும் தந்திரம்தான் அது. ரகசிய உலகப் பேர்வழி சந்திரா சாமி இதற்கென தனியே போட்டோ ஆல்பத்தை வைத்துக் கொண்டு தொழில் செய்கின்றார் என்றால் இந்துஜாக்கள் லண்

### சங்கம் பிறந்த கதை

இந்துஜாக்கள் தமது வர்த்தகத் தரகு நிறுவனம் ஒன்றுக்கு 'சங்கம் லிமிடெட்' என்று பெயர் சூட்டியுள்ளதற்கான காரணம் சுவாரசியமானது. இந்துஜாக்கள், ஈரானின் சர்வாதிகாரி ஷா ஆட்சிக் காலத்தில் செல்வாக்கோடு இருந்தபோது, இந்தி திரைப்படங்களை பார்சி மொழியில் டப்பிங் செய்து அவற்றை ஈரான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் திரையிடும் தொழிலைச் செய்து வந்தனர். இதில் 'சங்கம்' என்ற திரைப்படம் ஈரானின் பல அரங்குகளில் 100 நாட்களுக்கு மேல் ஓடி இந்துஜாக்களுக்கு கொழுத்த லாபத்தை வாரிக் கொடுத்தது. அதன் காரணமாக தங்களது நிறுவனம் ஒன்றிற்கு சங்கம் லிமிடெட் என்று பெயர் சூட்டியுள்ளனர். இப்போது போபர்ஸ் பீரங்கி பேரத்தில் இந்துஜாக்களுக்கு 'சங்கம் லிமிடெட்' கம்பெனி பெயரில்தான் தரகுத் தொகை கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தித் திரப்படங்களை வாங்கி வெளிநாடுகளில் திரையிட்டு வந்த இந்துஜாக்கள் இன்று இந்தி திரைப்படங்களுக்கே நிதியுதவி செய்கின்றனர். குறிப்பாக, ராஜீவின் கூட்டாளியும் அந்நியச் செலாவணி மோசடியில் புகழ் பெற்றவருமான அமிதாப்பச்சன் படங்களுக்கு நிதியுதவி செய்வது இந்துஜாக்கள் தான்! அதற்கீடாக அமிதாப்பச்சன் இந்தியாவிலுள்ள இந்துஜா அறக்கட்டளைக்கு ஏராளமான 'நன்கொடை'யும் அளித்துள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com

# அபூர்வசகோதரர்கள்!

நான்கு சகோதரர்களைக் கொண்ட இந்துஜா குடும்பத்தில் சிறீசந்த் இந்துஜா மூத்தவர். இக்குடும்பத்தின் தொழில் முன்னேற்றத்துக்கு கண்ணும், காதும் மூளையுமாக இருப்பவர் இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா, சுவிஸ் என்று தினமும் பறந்து கொண்டிருப்பவர். அவர் அறியாத இந்திய — உலக அரசியல் தலைவர்கள், அதிபர்களே இல்லை.

இரண்டாமவர் கோபிசந்த், ஈரானில் இந்துஜாகளின் தொழிலைக் கவனித்து வந்தவர். ஈரானில் 70களில் புரட்சி வெடித்து சர்வாதிகாரி ஷா நாட்டை விட்டுத் தப்பியோடியதும், அவர் லண்டனுக்கு வந்து 'காட்கோ' என்ற எண்ணெய் வர்த்தகத் தரகு நிறுவனத்தை நடத்தி வருபவர்.

மூன்றாமவரான பிரகாஷ் சுவிஸ் நாட்டில்



இந்துஜா குடும்பம்
சிறீசந்த், கோபிசந்த், பிரகாஷ்,
அசோக் இந்துஜாக்கள்

அமாஸ் எஸ்.ஏ. என்ற தரகு கம்பெனியை நிர்வகித்து வருகிறார். கடைசியானவரான அசோக் பம்பாயிலிருந்து கொண்டு சினிமா நிதி முதலீட்டு விவகாரங்களையும் இந்துஜா அறக்கட்டளை மருத்துவமனையையும் நிர்வகித்து வருகிறார்.

இந்த அபூர்வ சகோதரர்களின் ஒற்றுமையை வேறெந்த தொழில் குடும்பத்திலும் காண முடியாது. தங்கள் தொழிலைப் பற்றியோ வர்த்தகத் தொடர்பு பற்றியோ சொல்லி வைத்தாற் போல யாருமே வாய் திறப்பதில்லை. 'ஒருவேளை ரகசிய உலகத் தொழில் என்பதால் இப்படி நடக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. எவ்வளவோ முயன்றும்கூட விபரங்களைச் சேகரிக்க முடியவில்லை' என்கிறது, இந்துஜாக்களைப் பற்றி முதன் முதலாகஅம்பலப்படுத்திய 'போர்ப்ஸ்' என்கிற அமெரிக்கப் பத்திரிக்கை.

டன் மன்ஹாட்டனிலுள்ள தமது ஆடம்பர அலுவலகத்தில் அவற்றை ஆளுயரப் படங்களாக மாட்டி வைத்துள்ளார். ஈரானின் ஷா, பிரிட்டிஷ் பிரதமர் தாட்சர், முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் எட்வர்ட் ஹீத், இந்திரா — ராஜீவ் காந்திகள், அன்னை தெரசா முதலானோர் படங்கள் அவரது அலுவலக அறையை அலங்கரிக்கின்றனர்.

வெறுமனே சுயவிளம்பரத்திற்காக மட்டுமல்ல, உண்மையில் இந்துஜாக்களின் அலுவலக அறையை அலங்கரிக்கும் படங்களிலுள்ளவர்கள் இந்துஜாக்கள் மூலம் முன்னேறியுள்ளனர். அவர்களின் தயவில் இந்துஜாக்களும் முன்னேறினர். இத்தகைய இந்திய — உலக நாட்டுத் தலைவர்களை வளைத்துப் போட்டுவிட்ட இந்துஜாக்களுக்கு இந்நாடுகளின் அதிகார வர்க்க — ராணுவ கும்பல்களையும் வளைத்துப் போடுவது ஒன்றும் சிரமமில்லை.

முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் எட்வர்ட் ஹீத் இங்கிலாந்தில் ஒரு அறக்கட்டளை நிறுவ இந்துஜாக்களுக்கு உதவி செய்துள்ளார். முன்னாள் பிரிட்டிஷ் தூதரும், புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவருமான ஒரு முக்கிய பிரமுகர் இந்துஜாக்களுக்காக ரகசிய உலக வேலைகளைச் செய்துள்ளார். அமெரிக்க கொலைகார உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.வின் முன்னாள் டைரக்டர் ரிச்சர்ட் ஹெல்ம்ஸ் இவர்களது ஆலோசகராகச் செயல்பட்டுள்ளார். இந்திய விமானப் படையின் முன்னாள் தளபதி ஓ.பி மெஹ்ரா இந்துஜாக்களின் விளையாட்டு வீரர்களின் நலநிதி நிறுவனத்தை நிர்வகித்து வந்துள்ளார். முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் ஏ.பி. வெங்கடேசுவரன் டெல்லியிலுள்ள இந்துஜா அறக்கட்டளைக்குத் தலைவராக உள்ளார். ஓய்வு பெற்ற அதிகாரிகளை தமது தொழில் நிறுவனங்களில் கௌரவமான வேலை போட்டுத் தருவது என்பது இந்துஜாக்களின் வியாபாரத் தந்திரம். அதன் மூலம் அதிகார வர்க்கத்துடன் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு தமது கமிஷன் ஏஜெண்டு வேலையைத் திறமையாக சாதித்துக் கொள்வது அவர்களது வாடிக்கை. இடைத்தரகர்களாக இந்துஜாக்கள் செயல்பட்ட ஜெர்மன் நீர்மூழ்கி கப்பல் பேர ஒப்பந்தம் கையெழுத்தானதும், டெல்லியிலுள்ள ஓபராய் ஷெராடன் எனும்

# நட்புறவு ஒப்பந்தமா? நாட்டைச சூறையாட பேரமா?

ஈரானுக்கும் இந்தியாவுக்குமிடையே நட்புறவை வளர்த்ததாக முன்பு இந்துஜாக்கள் பெருமைப்பட்டுக் கொள்வதுண்டு. ஆனால் ஈரான் உதவியுடன் தொடங்கப்பட்ட குதிரேமுக் இரும்புத்தாது திட்ட ஊழல் விவகாரம் கிளம்பியதும் பெருமையில் உரிமை கொள்ளவே அஞ்சினர்.

பாசிச அன்னை இந்திராவின் அவசரநிலைக் காட்டாட்சியின் போது ஈரானுடன் இந்திய அரசு மூன்று ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது. அதில் ஒன்றுதான் கர்நாடகத்தில் உள்ள குதிரேமுக் இரும்புத்தாது திட்டம். இத்திட்டத்தை முன்னேற்ற ஈரான் 630 கோடி ரூபாய் நிதியுதவி செய்வதென உடன்பாடாகியது. இந்த ஒப்பந்தம் உருவாக இடைத் தரகர்களாக செயல்பட்டது இந்துஜாக்கள்தான்.

வெளிநாடுகளில் வாழ்ந்தாலும் தாய்நாட்டின் மீது பற்றுகொண்டு இந்தியாவை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல பேருதவி செய்த இந்துஜாக்களின் சேவைக்காக இந்திரா அரசு 11 கோடி ரூபாய் கமிஷன் கொடுத்தது. இதை நேரிடையாக கொடுத்தால் அம்பலப்பட்டுப் போவோம் என்பதால் இந்திரா அரசின் வெளியுறவுச் செயலாளர்கள் மூலம் 'சிறப்பு ராஜாங்கச் செலவுக்காக' என்று கணக்கு காட்டப்பட்டு, ரிசர்வ் வங்கியிலிருந்து இரண்டு தவணைகளில் தொகை பெறப்பட்டு, இந்திராவின் விசுவாச உளவுத்துறை 'ரா'வின் அன்றைய தலைவர் சங்கரன் நாயர் பெயரில் காசோலையாக மாற்றப்பட்டு, அவர் மூலம் சுவிஸ் வங்கியிலுள்ள இந்துஜாக்களின் ரகசிய கணக்கில் போடப்பட்டன.

இந்தக் குதிரேமுக் கமிஷன் ஊழல் விவகாரம் இந்திராவின் பாசிச ஆட்சிக் காலத்தில் மூடி மறைக்கப்பட்டு பின்னர் அரியணை ஏறிய ஜனதா ஆட்சிக் காலத்தில் மெதுவாக பத்திரிக்கைகளில் கசியத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து உன்னி கிருஷ்ணன் என்ற எம்.பி. இது பற்றி பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார். கமிஷன் தொகை 11 கோடியல்ல; அதைவிட அதிகமானது என்றும் சுவிஸ் வங்கியில் போடப்பட்ட கமிஷன் தொகையில் ஒருபகுதி இந்திராவுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் குற்றம் சாட்டினார்.

ஆனால் ஜனதா அரசு இதைப் பெரிதுபடுத்தவில்லை. இந்துஜாகள், ஜனதா கட்சியினருக்கும் கமிஷன் கொடுத்து வாயடைத்தார்களோ என்னவோ! ஜனதா அரசும் கமிஷன் எதுவும் தரப்படவில்லை என்று சாதித்து வழக்கம் போல இந்த விவகாரத்தை இழுத்தடித்து நீர்த்துப் போகச் செய்துவிட்டது. இந்துஜாக்களும் எங்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று சாதித்தனர். ஈரான் அரசும் இது பற்றி வாய்திறக்க மறுத்துவிட்டது.

ஏதோ இரு மூன்றாம் உலக நாடுகள் பரஸ்பரம் ஒத்துழைத்துக் கொண்டு முன்னேற ஒப்பந்தம் போட்டுக் கொண்டதாகத்தான் பாமர மக்கள் கருதுவார்கள். ஆனால் சர்வாதிகாரிகளால் ஆட்டிப்படைக்கப்படும் இரு நாடுகளுக்கிடையே தரகர்களால்தான் ஒப்பந்தம் உருவாக்கப்படுகிறது. அதன் மூலம் இரு நாடுகளின் சர்வாதிகாரிகளும் சொந்த நாட்டைச் சூறையாடி ரகசிய வங்கிகளில் பணத்தைக் குவிக்கின்றனர் என்பதே உண்மை. இப்படி பாசிச இந்திரா — ராஜீவ் கும்பல்கள் எத்தனை ஒப்பந்தங்கள் போட்டு கொள்ளையடித்தனவோ, புரோக்கர்களுக்கே வெளிச்சம்!

www.padippakam.com

ஐந்து நட்சத்திர ஓட்டலில் காங்கிரசு பெருச்சாளிகளுக்கும் அதிகார வர்க்க, ராணுவ அதிகாரிகளுக்கும் இந்துஜாக்கள் சீமைச் சாராய விருந்து கொடுத்த நிகழ்ச்சி இதற்கு எடுப்பான உதாரணம்.

இத்தகைய தரகுத் தொழிலின் மூலம் அரசியல் தலைவர்களை எல்லாம் தம் பாக்கெட்டில் இந்துஜாக்கள் வைத்துள்ளனர். பிரிட்டின் பிரதமர் தாட்சர் கடந்த ஆண்டு இவர்கள் வீட்டுப் பண்டிகைக்கு விருந்தினராக கலந்து கொண்டார். அதற்கு கைமாறாக இந்துஜாக்கள் 'டோரி' கட்சியின் வளர்ச்சிக்காக லட்சக்கணக்கில் நன்கொடை அளித்தனர். இங்கிலாந்து பிரதமர் மட்டுமல்ல, இந்தியப் பிரதமர்களும் அரசியல் தலைவர்களும் அதிகார வர்க்கத்தினரும் கூட இந்துஜாக்களின் பாசவலையில் சிக்கியுள்ளனர். பாராளுமன்ற சபாநாயகர் பலராம் ஜாக்கர், தமிழக கவர்னர் அலெக்சாண்டர், மத்திய மந்திரி நரசிம்மராவ், முன்னாள் ஜனாதிபதி ஜெயில்சிங், கர்நாடக முதல்வர் ஹெக்டே, மொரார்ஜியின் மகன் காந்தி தேசாய் முதலான பலரும் இந்துஜாக்களுக்கு வேண்டப்பட்ட மரியாதைக்குரியவர்கள். இவர்கள் மட்டுமல்ல, இந்திய அரசியல் தலைவர்கள் யாரும் லண்டனுக்கு வரும் போது அவர்களது அங்காடிச் செலவுகளுக்குப் பொறுப்பேற்பது இந்துஜாக்கள் தான்!

இந்துஜாக்கள் இந்திராகாந்தியின் பினாமியாகச் செயல்பட்ட அதே விசுவாசத்தோடு அவரது குலக்கொழுந்து ராஜீவுக்கும் பினாமியாகச் செயல்பட்டு சுவிஸ் வங்கியில் தாமரையை மலரச் செய்துள்ளார்கள். அதன் விளைவாக வெளிநாட்டில் வாழும் இந்தியர்களாக இந்துஜாக்கள் மிகச் சுலபமாக அசோக் லேலண்டு நிறுவனத்தில் பெரும் பங்குகளை வாங்கியுள்ளனர். இதோடு



பல கோடி ரூபாய் செலவில் தம் மகளுக்கு ஆடம்பரத் திருமணம் நடத்தும் இந்துஜாக்கள்.

டாடாக்கள் வெளிநாடுகளில் நிறுவியுள்ள ஓட்டல்களுக்கு கடனுதவி செய்து அதன் இயக்குனர் குழுவிலும் அங்கம் வகிக்கும் இந்துஜாக்கள் இப்போது இந்தியாவிலுள்ள தாய்க் கம்பெனியான டாடா நிறுவனத்திலும் இடம் கேட்கிறார்கள். இந்திராவின் ஆட்சிக் காலத்தில் கொடிகட்டிப் பறந்த வெளிநாட்டில் வாழும் இந்தியரான சுவராஜ் பால் கூட இந்த அளவுக்குத் 'திறமையாக' முதலீடு செய்ய முடியவில்லை. ராஜீவின் பரிசுத்த ஆட்சியில் அவருக்கும் ராஜீவுக்கும் நெருக்கம் குறைந்துவிட்டது. அந்த வெறுப்பில் இந்துஜாக்களைப் பற்றி புழுங்கித் தள்ளுகிறார் சுவராஜ்பால்.

சுவராஜ் பால் மட்டுமின்றி, இந்தியத் தொழிற்துறைக்கு திடீர் பேரரசனாக வந்திருக்கும் இந்துஜாக்களை பழம் பெரும் தரகு முதலாளிகளால் கூட ஒன்றும் செய்ய முடியவில்லை. அதிகாரத்தை ஏந்திச் சுழற்றும் பாசிச ராஜீவ் கும்பலே இந்துஜாக்களின் பாக்கெட்டில் இருக்கும் போது என்ன செய்ய முடியும்? நாட்டின் தலைவிதியை அரசியல் கட்சிகளும் தலைவர்களும் தீர்மானிக்கிறார்கள் என்று நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மாண்பைப் பற்றி முதலாளித்துவ சித்தாந்தவாதிகள் பீற்றிக் கொள்கிறார்கள். ஆனால் ஆயுத பேரத் தரகு முதலாளிகளாலும் ரகசிய உலகப் பேர்வழிகளாலும்தான் அது தீர்மானிக்கப்படுகிறது என்பதை மீண்டும் நிரூபிக்க இந்துஜாக்கள் இலக்கண சுத்தமாகத் திகழ்கிறார்கள்.

மனோகரன்.

# இந்தியத் துறைமுகங்களில் ஏகாதிபத்தியப் போர்க் கப்பல்கள்!

ஜெயவர்த்தனேயுடன் ராஜீவ் ஒப்பந்தம் போட்டபோது, இலங்கையை இந்தியா ஆக்கிரமித்தபோது, ஈழத்தமிழர் மீது போர் தொடுத்தபோது — தெற்கு ஆசிய பிராந்திய நலன்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் என்றனர்; திரிகோணமலை துறைமுகத்தை இந்தியாவுக்கு எதிராக அமெரிக்க வல்லரசு பயன்படுத்துவதை முறியடிப்பதற்காக என்றனர்; இந்துமா கடலில் வல்லரசுகள் போட்டியிடுவது பிராந்திய அமைதியைக் குலைக்கிறது. அதைத் தடுப்பதற்காக என்றனர் போலிக்கம்யூனிஸ்டுகளும், துரோகிகளாகிப் போன ஈழப் போராளிகள் உட்பட முற்போக்கு வேடதாரிகள்.

ஆனால் மூன்று மாதங்களுக்கு முன்பு, வளைகுடா போரில் ஈடுபட்டுள்ள அமெரிக்க் கடற்படைக் கப்பல்கள் இந்தியத் துறைமுகத்துக்கு வந்தது. கடற்படை வீரர்கள் ஓய்வெடுக்கவும் ''உல்லாசமாக'' இருக்கவும் வந்ததாகச் சொன்னார்கள் ''அமெரிக்கக் கடற்படையை எப்படி அனுமதிக்கலாம்?'' என்று கேட்டுக் நாடாளுமன்றத்தில் கூச்சல் போட்டார்கள் போலிக்கம்யூனிஸ்டுகள் ''ஏற்கனவே நடப்பதுதான்; வழக்கமானதுதான்!'' என்று திமிரோடு பதில் சொன்னது ஏகாதிபத்திய எடுபிடி அரசு.

வளைகுடா போரில் சம்பந்தப்படும் ரஷியக் கடற்படைக் கப்பல்கள் இரண்டு இந்த மாதம் பம்பாய் துறைமுகத்துக்கு வந்தது. துறைமுக அதிகாரிகளைக் கொஞ்சமும் மதியாது திடீரென்று வந்து, திடீரென்று புறப்பட்டுப்போயின அவற்றின் நடமாட்டத்தைக் கண்டு கொள்ள வேண்டாமென்று இந்தியக் கடற்படை கூறிவிட்டது. நீர்மூழ்கிகளைத் தாக்கும் ஏவுகணைகளும், நிலக் கண்ணிவெடிகள் தூவும் தளவாடங்களும், அணுஆயுத ஏவு கணைகளும், விமானத்தைத் தாக்கும் ஏவுகணைகளும் அந்தக் கப்பல்களில் இருந்தன. வழக்கமான ''ஓய்வு, உல்லாசத்துக்காக'' கூட கடற்படை துருப்புக்கள் நகருக்குள் வரவில்லை. அதாவது யுத்தப் பணிகளுக்காகவே அவை வந்திருப்பது தெளிவாயின.

அமெரிக்க, ரஷியக் கப்பல்கள் மட்டுமல்ல பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு கடற்படை கப்பல்களும் சமீப காலங்களில் பம்பாய் துறைமுகத்துக்கு வந்துபோகின்றன. ரஷ்யக் கப்பலைப் போன்று ஆயுதந் தாங்கியது பிரிட்டிஷ் கப்பல்; பிரெஞ்சுக் கப்பலோ விமானந் தாங்கிக் கப்பல்.

தேசபக்தி பேசிக்கொண்டே இந்திய ஏகாதிபத்தியத்தை ஏகாதிபத்தியங்களுக்கு அடகு வைக்கிறது பாசிச ராஜீவ் கும்பல். இந்து மாகடலை அமைதி மண்டலமாக்கும்படி கோரிக்கொண்டே ஏகாதிபத்தியங்களின் யுத்தகளமாக்குகிறது பாசிச ராஜீவ் கும்பல் — இதைத் தான் முற்போக்கு வெளிநாட்டுக்கு கொள்கை என்று போலிக் கம்யூனிஸ்டுகள் புகழ்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் சார்பாக வெளிவரும் ''உண்மை'' பத்திரிக்கையின் மே முதல் இதழில் ''மார்க்சிய — லெனினிய குழுக்களுக்கு ஒரு அறை கூவல்'' என்ற அட்டைக் கட்டுரையை ''ராவணன்'' என்பவர் எழுதியுள்ளார். அதிலேயே ஓடுகாலிகளான ''கேடயம்'' கும்பலின் பதிலையும், அதற்கு ''ராவணனின்'' மறுப்பையும் வெளியிட்டுள்ளனர்.

மார்க்சிய — லெனினியக் குழுக்கள் வெறுமனே புரட்சி பேசிக் கொண்டிருப்பதாக ராவணன் கேலி செய்கிறார். மார்க்சிய — லெனினியக் குழுக்கள் ஒரு ஆயுதப் புரட்சிக்காக போராடி வருவதை இவர்கள் வேண்டுமானால் மறைக்க முயலலாம். இந்திய மக்களும், எதிரிகளும் அறிவர். ஒன்று சொல்ல விரும்புகிறோம். '' ஆறு மாதத்தில் புரட்சி வெடிக்கும்'', '' மூன்று மாதத்தில் தமிழகம் கிளர்ந்தெழும்'' ''ஒரு மாதத்தில் புயல் வீசும்'' என்று வீரமணி அடிக்கும் வெற்றுச் சவடால்களை மயிலாடுதுறை ராமதாஸ் தொகுத்து துண்டறிக்கையாக வெளியிட்டுள்ளார், பார்த்து, படித்து ரசித்து விட்டு மற்றவர்களைக் குறை சொல்லும்படி கோருகிறோம்.

35 குழுக்களாக மார்க்சிய —லெனினிய இயக்கம் பிளவுண்டு கிடப்பதாக கேலி செய்கிறார் ராவணன். வாதத்துக்கு ஏற்றுக் கொள்வோம். இவ்வளவு பெரிய நாட்டில் கருத்து வேறுபாடு காரணமாக 35 குழுக்கள் உள்ளன. பற்றி எங்களைத் தொடர்ந்து கேலி செய்து வந்த போலிக் கம்யூனிஸ்டு கட்சிகள் இன்று எத்தனை குழுக்களாக பிளந்து போனது தெரியுமா? பெரியார் இயல் இன விடுதலை பேசும் திராவிட இயக்கம் இன்று பல குழுக்களாகத் தான் உள்ளது. மறந்து போனதா?

மார்க்சிய — லெனினியக் குழுக்கள் ஏதோ நெருக்கடியினால் திடீரென்று தேசிய இனப் பிரச்சினையைப் பற்றிப் பேசுவதாக ராவணன் குற்றஞ்சாட்டுகிறார். போலிக் கம்யூனிஸ்டுகள் புறக்கணித்த, தவறான அணுகுமுறை கொண்டிருந்த தேசிய இனப் பிரச்சினையில் மார்க்சிய லெனினியக் கட்சி தோன்றியபோதிருந்தேஇதே நிலைப்பாடு தான் கொண்டிருந்தது. நெருக்கடிகளுக்காக இலட்சியத்தைக் கைவிடும் மரபு திராவிட இயக்கத்துக்குத்தான் உண்டே தவிர மார்க்சிய — லெனினிய இயக்கத்துக்குக் கிடையாது. சில கேள்விகள்.

தமிழகத்தில் மார்க்சிய — லெனினியக் கட்சி தோன்றி வேறூன்றத் துவங்கியதும் திராவிட இயக்கம் நீடித்திருப்பதற்கான நியாயமான அடிப்படைகள் தகரத் துவங்கி விட்டன. அதற்கு முக்கியக் காரணம் பார்ப்பனீயத்திலும் இந்திய தேசியத்திலும், நாடாளுமன்ற சாக்கடையிலும் சிக்கிக் கொண்டு போலிக் கம்யூனிஸ்டுகள் செய்து வந்த தவறுகளை மறுதலித்து மார்க்சிய — லெனினியக் கட்சி புரட்சிப் பாதையை மேற்கொண்டது. மற்றொரு முக்கிய காரணம் திராவிட இயக்கம் பகுத்தறிவு, மொழி, இனப்பிரச்சினைகளைக் கைவிட்டு

# ''உண்மை'' ஏட்டிற்கு ஒரு சவால்!

பிழைப்பு வாதிகளின் பிடியில் சிக்கிக் கொண்டது.

✱ பழைமை, பிற்போக்கு, மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் போராடி பகுத்தறிவுக் கொள்கைகளைப் பின்பற்றுவது, பிரச்சாரம் செய்வது.

✱ சாதி, மத ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடுவது சாதிகளை ஒழிப்பதற்கான முறைகளில் புரட்சிகர அமைப்புகளை கட்டி செயல்படுவது. மத வெறியை, குறிப்பாக ஆர்.எஸ்.எஸ். இந்துமத — பார்ப்பணீயத்தை எதிர்த்துப் போராடுவது.

✱ ஒடுக்கப்படும் எல்லா தேசிய இனங்களும் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை ஏற்றுப் போராடுவது. இன ஒடுக்கு முறைகளை எதிர்த்து போராடுவது.

✱ இந்தி மொழித்திணிப்பை எதிர்ப்பது. இந்தி, ஆங்கிலம் இரண்டையுமே ஆட்சி மொழியாக் கொள்ள முடியாது. எல்லா தேசிய இனங்களின் மொழிகளையும் ஆட்சி மொழிகளாவதற்காகப் போராடுவது.

— இவை கடந்த அறுபது ஆண்டுகளாகப் போலிக் கம்யூனிஸ்டுகள் செய்யத் தவறிய பணிகள். மார்க்சிய — லெனினியக் கட்சி தோன்றிய (1969) அதற்குப் பின் உறுதியாகச் செய்து வரும் பணிகள். இன்னும் சொல்வதானால் போலிக் கம்யூனிஸ்டுக் கட்சிகளில் இருந்து மார்க்சிய — லெனினியக் கட்சி பிளவுப்பட்டதற்கான காரணங்களில் இவையும் அடங்கும்.

மார்க்சிய — லெனினியக் கட்சி மேற்கொண்ட புரட்சிப்பாதையில் இவையும் அடங்கியிருப்பதால் திராவிட இயக்கம் உட்பட பல அமைப்புகளில் இருந்த இளைஞர்கள் — மாணவர்கள் பலரும் சேர்ந்து மார்க்சிய — லெனினிய இயக்கத்தை உருவாக்கி வளர்த்தார்கள்.

அது மட்டுமல்ல திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளாயிருந்த பகுத்தறிவு, சாதி, மத, இன, மொழிப் பிரச்சினைகளில் திராவிட இயக்கம் எவ்வாறு அறிவியல் பூர்வமற்ற கண்ணோட்டங்களைக் கொண்டிருக்கிறது என்பதையும் மார்க்சிய லெனினியக் கட்சி நிரூபித்தது.

✱ திராவிட இயக்கத்தின் பகுத்தறிவு மார்க்சு — ஏங்கல்ஸ் வகுத்தளித்த இயக்கஇயல் பொருள் முதல் வாத அடிப்படையிலானது அல்ல. இங்கர்சால் போன்ற முதலாளித்துவ அறிஞர்களின் மாறாநிலை பொருள் முதல் வாத அடிப்படையிலானது.

✱ சாதி ஒழிப்புக்காக போராடுவதைக் குறைத்துக் கொண்டு பிறகு கைவிட்டு பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கான இடஒதுக்கீடு கோருவதற்கானதாக மட்டும் திராவிட இயக்கம் சுருங்கிப் போய் விட்டது.

✱ திராவிடர் — ஆரியர் என்கிற அடிப்படையிலான இனங்களாகப் பார்ப்பது வர்ண இன (RACE)ப் பிரிவினையாகும். வர்ண இனங்கள் (RACES) ஒன்று கலந்து நவீன முதலாளித்துவ உற்பத்தியின் அடிப்படையில் உருவாகும் தேசிய இனங்கள் (NATIONAL ITIES) என்பது முற்றிலும் வேறானது. பொதுவான மொழி, பொதுவான நிலப்பகுதி, பொதுவான பொருளாதாரம், பொதுவான பண்பாடு அடிப்படையில் உருவாகும் மக்கள் தொகுதியினரைக் குறிக்கிறது. வர்ண இன ரீதியில் தேசிய இனப் பிரச்சினையை அணுகுவது பிற்போக்கானது. அதுமட்டுமல்ல, தேசிய இனப் பிரச்சினைக்காக, தேசிய இன சுயநிர்ணய உரிமைக்காக போராடுவதை திராவிட இயக்கம் கைவிட்டுவிட்டது. நடைமுறையில் அதற்காக எதுவுமே கிடையாது. இந்திய நாடெங்கும் ஒடுக்கப் படுவதற்கெதிராக




படிப்பகம்

www.padippakam.com

போராடும் நாகா, மிஜோ, குக்கி, காஷ்மீர் தேசிய இனங்களுக்காக திராவிட இயக்கம் ஒரு போதும் குரல் கொடுத்தது கிடையாது.

✱ மார்க்சிய — லெனினிய வாதிகளுக்கு மத நம்பிக்கை கிடையாது. அதற்கு எதிராகப் பகுத்தறிவு, நாத்திகப் பிரசாரம் செய்ய வேண்டும். இந்து மதத்திலுள்ள பார்ப்பனீய வர்ணாசிரம — சாதியப் பிரிவுகளை ஒழிக்கப் போராட வேண்டும். ஆனால் திராவிட இயக்கத்தினர் கருதுவது போல மதத்தை உடனடியாக ஒழித்துவிட முடியாது. அதாவது கடவுள் நம்பிக்கை என்கிற அரூபமான மத நம்பிக்கையை இந்தக் காலக் கட்டத்தில் முற்றாக ஒழித்துவிட முடியாது. அது நீடித்திருப்பதற்கான பொருளாதார அடிப்படையை அழிப்பதன் மூலமே சாத்தியம். பிரச்சாரத்தினால் மட்டுமே மதத்தை ஒழித்துவிட முடியாது.

✱ இந்தித் திணிப்பை எதிர்த்தாலும் எல்லா தேசிய இன மொழிகளையும் ஆட்சி மொழியாக்குவதற்கான போராட்டத்தை திராவிட இயக்கம் நடத்துவதில்லை. அதற்கு மாறாக, ஆங்கிலம் நீடிப்பதை ஆதரிக்கிறது.

மார்க்சிய — லெனினியக் கட்சியின் அறிவியல் பூர்வமான இந்த அணுகுமுறையையும், திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளைக் கைவிட்டு ''இந்திய தேசியத் தோடு'' அதன் தலைவர்கள் சமரசம் செய்து கொண்டு பிழைப்பு வாதிகளாக சீரழிந்து போனதையும் கண்டார்கள் திராவிட இயக்கத்திலிருந்த இளைஞர்கள்.

அதன் விளைவாக இரண்டு போக்குகள் எழுந்தன. ஒன்று, திராவிட இயக்கம் எழுப்பிய பகுத்தறிவு, சாதி, மத, இன, மொழிப்பிரச்சினைகளுக்கு புதிய ஜனநாயகப் புரட்சிப் பாதையில் ஓர் அங்கமாகக் கொண்டு தீர்க்க முடியும் என்று நம்பிக்கை கொண்ட இளைஞர்கள் மார்க்சிய — லெனினிய இயக்கத்தில் இணைந்தார்கள்.

மற்றொரு பிரிவினர் அந்த அளவு உரத் தயாராய் இல்லாதவர்கள். 'ஆரம்ப கால பெரியாரின், அல்லது வீரமணி சிதைப்பதற்கு முந்திய பெரியாரின் கொள்கைகளை அம்பலப்படுத்துகிறோம்'' என்றும் மார்க்சியம் — லெனினியம் — மாவோ சிந்தனை — ''பெரியாரியம்'' ஆகியவற்றைப் பிரயோகித்து இன விடுதலைக்குப் பாடுபடப் போகிறோம் என்றும் கூறிக்கொண்டார்கள். இவர்கள் பல பத்துக் குழுக்களாக உள்ளனர். இடையில், மார்க்சீய — லெனினியக் கட்சியில் ஏற்பட்ட இடது தீவிரவாத நடைமுறைத் தவறுகள், பின்னடைவுகள், பிளவுகளுக்குத் தாக்குப் பிடித்து உறுதியாக நிற்க முடியாமல் சீரழிந்து போன சிலரும் இப்படிப் பட்ட இன விடுதலைக் குழுக்களில் சேர்ந்தனர்.

ஆக, கடந்த இருபது ஆண்டுகளில் தமிழக இளைஞர்களிடையே கண்ட இந்தப் போக்குகள் திராவிட இயக்கம் குறிப்பாக, திராவிடர் கழகம் நீடித்திருப்பதற்கான நியாயமான அடிப்படைகளைத் தகர்த்து விட்டன. எனவே திராவிட இயக்கத்துக்குள் புதிதாக வரும் இளைஞர்கள் கூட ஒன்று மார்க்சிய — லெனினிய இயக்கத்துக்கு வந்து விடுகிறார்கள். ஒரு சிலர் '' இன விடுதலை'' குழுக்களில் சேருகிறார்கள். திராவிடர் கழகம் தன்னைத் தக்க வைத்துக் கொள்வதற்கான முயற்சியில் இருக்கிறது. அதன் விளைவுதான் '' மார்க்சிய — லெனினியக் குழுக்களுக் கு ஒரு அறைகூவல்''

அதுவும் விநோதமான ஒரு கூட்டு முயற்சியில் வெளிவருகிறது. பெரியாரின் சொத்துக்களை மட்டுமே வரித்துக் கொண்டுள்ள வீரமணி, திராவிடர் கழகத்தை அழிவில் இருந்து காப்பாற்றிக் கொள்வதற்காக பழைய கொள்கைகளுக்கே புதிய, மார்க்சிய — லெனினிய சாயம் பூசிக் கொள்ள வேண்டியுள்ளது. மேலே சொன்ன 'இன விடுதலை' குழுக்கள், நபர்கள், வீரமணியிடம் சிக்கியுள்ள வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறனர். எனவே இன விடுதலையை எப்போதோ கைவிட்ட அதிகார பூர்வ திராவிடர் கழகம் (குறிப்பாக வீரமணியும்) மார்க்சிய - லெனினியக் கட்சியின்தாக்கத்தால்.''இன விடுதலை' உணர்வு பெற்று அதே சமயம் அந்தக் குறுகிய வட்டத்திற்குள் இருந்து வெளிவர இயலாத, விரும்பாத குழுக்கள், நபர்கள் கூட்டுச் சேர்ந்து இங்கே''ராவணன்''களாகி மார்க்சிய லெனினியக் குழுக்களுக்கு அறைகூவல் விடுகிறார்கள்.

அவர்களது அறைகூவலை, சவாலை ஏற்பதற்கு முன்பு ஒரு கேள்வி: திராவிடர் கழகம், அதன் பொதுச் செயலாளர் என்கிற முறையில் ''பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமைதான் எங்கள் இலட்சியம்'' என்று அதிகாரபூர்வமாக அறிவித்துப் போராடத்தயாரா? இந்திய நாட்டில் நடக்கும் காஷ்மீர், நகா, மிஜோ, போன்ற தேசிய இன விடுதலை இயக்கங்களின் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையை ஆதரிப்பதாக அறிவிக்கத் தயாரா?

இல்லையானால்,

''இனவிடுதலை''யில் அக்கறையுடைய வராய் இருந்தால் ''ராவணன்''கள் திராவிடர் கழகத்திலிருந்து விலகி சுய நிர்ணய உரிமைப் புதிய ஜனநாயகப் புரட்சியின் ஒரு அங்கமாகக் கொண்டுள்ள மார்க்சிய லெனினிய இயக்கத்தை ஆதரிக்கத் தயாரா? குறைந்த பட்சம், '' இன விடுதலை'' குழுக்களில் சேர்ந்து அதற்காகப் போராடுவாரா?

இரண்டுமே இல்லாமல் முரண்பட்ட நிலைப்பாடுகளுடைய வீரமணிகளும், ராவணன்களும் சந்தர்ப்பவாதக் கூட்டு சேர்ந்து விடும் அறை கூவல்களை மார்க்சிய — லெனினியக் குழுக்கள் எப்படி ஏற்க முடியும். வீரமணிகளுக்கோ பெரியார்சேர்த்து வைத்துள்ள சொத்துக்களை அனுபவிப்பது தான் முக்கியம். ராவணன்களுக்கோ திராவிடர் கழகப் போர்வையில் புகுந்து கொண்டு தமது தோலைப் பாதுகாத்து கெள்வதுதான் முக்கியம் ''இன விடுதலை' என்பது இருவருக்குமே அவசியமான வெறும் சவடால் தான்!

—ஆசிரியர் குழு,
புதிய ஜனநாயகம்.



# உரிமைக்குப் போராடும் ஓட்டல் தொழிலாளிகள்



கிராமப்புறங்கள் வறட்சியின் கோரப்பிடியில் சிக்கிச் சீரழிய, வாழவழியற்ற நடுத்தர மற்றும் கூலி ஏழைகள் நகர்புறங்களை நோக்கிப் படையெடுக்கின்றனர். இவர்களில் பலருக்கு - குறிப்பாக இளைஞர்களுக்கு ஒரே புகலிடமாக இருப்பது ஓட்டல் வேலை. உண்ண உணவின்றி, தங்க இடமின்றி வேலை தேடிவரும் இவர்களை 'அடிமாடு'கள் மாதிரி குறைந்த விலைக்கு விலைபேசி அவர்களின் உழைப்பை சுரண்டிக் கொழுக்கின்றனர், ஓட்டல் முதலாளிகள்.

காலம் காலமாக நடந்துவரும் இவ்உழைப்பு சுரண்டல், சமீபகாலங்களில் மிகவும் பரவலாகி உள்ளது. 'நேர்மையாளர்' கவர்னர் அலெக்சாண்டரின் ஆட்சியிலோ இக்கொடுமை கேட்பாரற்று ஆழமாக வேரூன்றி வருகிறது. தொழிலாளர்களை அடக்கி ஒடுக்க அதிகாரவர்க்க போலீசின் ஆதரவு ஓட்டல் முதலாளிகளுக்குத் தாராளமாகக் கிடைக்கிறது.

**சாந்தி விஹார்:** சென்னை- திருவல்லிக்கேணி, புரசைவாக்கம், கொத்தவால் சாவடி போன்ற வர்த்தக, வியாபார மையங்களில் இருக்கும் சங்கிலித்தொடர் ஓட்டல் முதலாளிதான், சாந்தி விஹார் ஓட்டலுக்கும் உடமையாளர். சென்னை- மயிலாப்பூர் லஸ் முனையிலுள்ள இவ்ஓட்டலில் 76 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் தங்களுக்கான தொழிற்சங்கத்தை உருவாக்கிக் கொண்டனர். அச்சமயத்தில், அங்கு பணிபுரிந்த 200 தொழிலாளர்களில் 7 பேர் மட்டுமே நிரந்தர ஊழியர்கள். சங்கத்தை உடைக்க 35 தொழிலாளர்களை சிறுகச்சிறுக வேலை நீக்கம் செய்தது நிர்வாகம். இதை எதிர்த்து தொழிலாளர்கள் 6 மாத காலம் தொடர்ந்து போராடினர். இறுதியில் போராட்டம் வெற்றி பெற்று மொத்தம் 93 தொழிலாளிகள் நிரந்தரம் செய்யப்பட்டனர். தொழிலாளர்களின் பல கோரிக்கைகள் வெற்றி பெற்றன.

மூக்குடைப்பட்ட நிர்வாகம் '78ல் 'ஓட்டலைப் புதுபிக்கப் போகிறோம்' என்ற பெய

படிப்பகம்

www.padippakam.com

ரில் நிரந்தரமற்ற தொழிலாளிகளில் 80 பேரை நிரந்தரமாக வீட்டுக்கு அனுப்பியது. '83ல் மீண்டும் 30 பேரை வேலையிலிருந்து நீக்கியது நிர்வாகம். சங்கம், ஏற்க மறுத்து போராடியது. கதவடைப்பு செய்தது நிர்வாகம். அந்த ஓட்டலில் கட்டிடத் தொழிலில் ஈடுபட்டிருந்த கட்டிடத் தொழிலாளர் சங்கம், 'போராடும் ஓட்டல் தொழிலாளர்களுக்கு ஆதரவாக வேலை நிறுத்தம் செய்யப் போகிறோம்' என அறிக்கை வெளியிட்டதால் 10 நாளில் கதவடைப்பு நீக்கப்பட்டு எல்லா தொழிலாளர்களும் வேலையில் சேர்க்கப்பட்டனர். '87ல் தீபாவளிக்கு தர வேண்டிய போனஸ் 2 மாதத்திற்கும் மேலாக தரப்படவில்லை. 'ஏன்?' எனக் கேட்டவுடன் திடீரென இருநாள் கதவடைப்பு செய்து தொழிலாளர்களை மிரட்டியது நிர்வாகம். சங்கம், இதையும் போராட்டத்தின் மூலம் முறியடித்தது.

**உணவுப் பண்டங்களின் விலையோ எட்டாத உயரத்தில், தொழிலாளர்களுக்கு சம்பளமோ அதள பாதாளத்தில்**

பிற ஓட்டல்களில் 'சோலாபூரி' ரூபாய் 4க்கு விற்கையில், சாந்தி விஹாரில் 10 ரூபாய். இதற்கும் கூட்டம் கிடந்து அலை மோதும். இதிலிருந்தே தொழிலாளர்களின் கைத்திறனையும், முதலாளியின் லாபத்தையும் காணலாம். ஆனால் லாபவெறி கொண்ட நிர்வாகமோ, 'ஓட்டல் நட்டத்தில் நடக்கிறது' எனக்காரணம் கூறி தொழிலாளர்கள் வாங்கும் அற்ப சம்பளத்தையும் குறைத்துக் கொள்ள வேண்டும் என்றும், சப்ளையர்கள் வாங்கும் 'டிப்ஸி'லும் பங்கு வேண்டும் என்றும் வெட்கம் இல்லாமல் இரண்டு கோரிக்கைகளை தொழிலாளர்கள் முன்வைத்தது. இதற்கு உடன்பட மறுத்தால் ஓட்டலை இழுத்து மூடிவிடப் போவதாக மிரட்டியது. இதற்காக தொழிற் தகராறு எழுப்பி லேபர் கமிஷனிடம் வாதாடியது நிர்வாகம். நிர்வாகத்தின் லாபவெறியைக் கண்டு பீதியடைந்த லேபர் கமிஷ்னர், 'டிப்ஸி'ல் பங்குக் கேட்கும் முதலாளியின் வரலாறு காணாத கோரிக்கையை மட்டும் திரும்பபெற்றுக் கொள்ளுமாறு கெஞ்சிய தற்கு சம்மதித்த நிர்வாகம் சம்பளத்தை குறைத்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையில் விடாப்பிடியாக இருந்தது. பலஆண்டு காலம் வேலை செய்யும் 'சப்ளை'யருக்கு கொடுக்கும் சம்பளமோ மாதம் ரூபாய் 230தான். இதைச் சுட்டிக் காட்டி தொழிலாளர்கள் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கும் போதே, ஓட்டலை சட்டவிரோதமாக இழுத்து மூடியது நிர்வாகம். மார்ச் மாதம் 28ந் தேதி இழுத்து மூடப்பட்ட ஓட்டல் இன்றளவும் திறக்கப்படவில்லை. நட்டம் என கோர்ட்டுக்கு போன நிர்வாகம் இப்போது ஓட்டலை நவீனப்படுத்தும் வேலையில் மும்முரமாக இறங்கி விட்டது.

தொழிலாளர்கள், நிர்வாகம் தம்மிடம் பிடித்தம் செய்து, இரண்டு ஆண்டு காலமாக கட்டப்படாத காப்பீட்டு நிதி, ஆறுமாதமாக செலுத்தப்படாத வைப்புநிதி முதலியவற்றை உரிய கணக்கில் செலுத்த வேண்டும், மீண்டும் ஓட்டலை திறக்க வேண்டும் என தொடர்ச்சியாக போராட்டத்தில் இறங்கியுள்ளனர். போராடும் தொழிலாளர்கள் பொதுமக்களிடம் உண்டியல் ஏந்தி கஞ்சி காய்ச்சிக் குடித்துவிட்டு போராட்டத்தை தொடர்கின்றனர்.

கதவடைப்பு செய்யப்பட்டவுடன், சங்கத்தின் சார்பில் 4.4.88 அன்று கவர்னரிடமே நேரிடையாக மனு தரப்பட்டது; தொழிலாளர் நல உரிமைக்குழு சார்பில் கவர்னர் மாளிகைக்கு ஊர்வலமும் நடத்தப்பட்டது. இன்றுவரை நடவடிக்கை இல்லை. காங்கிரசுக்கு ஓட்டுப் பொறுக்க கவர்னர் மும்முரமாக அலைவதால் நேரமின்றிப் போய் விட்டது போலும்?

**சுதா ஓட்டல்**

சென்னையின் இதயமான- வர்த்தக மையம் தம்புசெட்டித் தெருவிலுள்ள சீனிவாச பவன், சங்கர் பவன் என்ற ஏ.சி. ஓட்டல்களுக்கு முதலாளியாக இருக்கும் பாஸ்கர் பட் என்பவன்தான் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் இருக்கும் சுதா ஓட்டலுக்கும் முதலாளி சாந்தி விஹார் ஓட்டல் கொடுமைதான் இங்கும்.

## காங்கிரசின் 40 ஆண்டு சாதனை

பாசிச ராஜீவ் கும்பல் 21ம் நூற்றாண்டைப் பற்றி கனவு கண்டு கொண்டிருக்கும்போது, நாடு 16ம் நூற்றாண்டை நோக்கி வேகமாகப் பின்னோக்கி சென்று கொண்டிருக்கிறது. கடந்த பத்தாண்டுகளில் படிப்பறிவற்றோர் எண்ணிக்கை 30 கோடியிலிருந்து 42.5 கோடியாக உயர்ந்துவிட்டது. 15 வயதிலிருந்து 35 வயதுக்குட்பட்ட கல்வியறிவற்றோர் எண்ணிக்கை மட்டும் 1991ல் 11 கோடியாக இருக்கும். கடந்த நான்கு தலைமுறையாக எழுத்தறிவின்மையைப் போக்க அரசு எடுத்த முயற்சிகளுக்கு சாதகமான விளைவுகள் ஏற்படவில்லை. 1951க்கும் '81க்கும் இடைப்பட்ட காலத்தில் கற்றோர் எண்ணிக்கை 16.7 லிருந்து 36 சதவீதமாக உயர்ந்துள்ள போதிலும் மக்கள்தொகைப் பெருக்கத்தை ஒப்பிடும்போது இது மிக அற்பமானது என்ற அதிர்ச்சியூட்டும் தகவலை அரசே வெளியிட்டுள்ளது.



இந்த அவல நிலையைப் போக்கி, கல்விக்கண் திறக்கும் கருணாமூர்த்தியாக தன்னைக் காட்டிக் கொள்ள மே 3ந் தேதியன்று பாசிச ராஜீவ் தேசிய கல்வி இயக்கம் (NLM) என்ற பெயரில் ஒரு புதிய திட்டத்தைத் துவக்கியுள்ளார். இத்திட்டப்படி அடுத்த ஏழாண்டுகளுக்குள் 8 கோடிப் பேருக்கு கல்வி புகட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கம்ப்யூட்டர்களை வைத்துக் கொண்டு கணக்கு போடும் ராஜீவின் சமஸ்தானத்தில் கல்வியறிவற்ற மக்கள் வெறும் அ,ஆ மட்டும் படித்தால் அவமானமாக இருக்குமே! எனவே நவீன விஞ்ஞான முறையில் செயல்பூர்வமான கல்வி புகட்ட முடிவு செய்துள்ளார்.

இதன்படி, 4 அல்லது 5 கிராமங்களுக்கு ஒரு மையமாக, ஏறத்தாழ 5000 மக்களுக்கு கல்வி புகட்டும் வகையில் ஜனசிக்ஷன் நிலையங்கள் (JSN) அமைக்கப்படும். ஒரு நூலகம்- வாசகசாலை, விவாத அரங்கம் முதலானவற்றைக் கொண்டதாக இக்கல்வி நிலையங்கள் நிறுவப்படும். இதோடு அதிநவீன முறையில் எலக்ட்ரானிக் வீடியோக்கள் மூலம் கல்வி புகட்டவும் ஏற்பாடாகியுள்ளது. லட்சக்கணக்கான கிராமங்களில் மறுமலர்ச்சியை உருவாக்குவதற்காக 550 கோடி ரூபாய்களை ஒதுக்க ராஜீவ் அரசு தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே ஜனதா ஆட்சிக் காலத்தில் துவக்கப்பட்ட முதியோர் கல்வித் திட்டம் (AEP) தன்னார்வக் குழுக்களின் பொறுப்பில் விடப்பட்டதால் முறையாகச் செயல்படவில்லையாம். எனவே அரசே இத்திட்டத்தை ஏற்று நடத்தப் போகிறதாம். வேறு எதற்காக? காங்கிரஸ் குண்டர்களுக்கு வேலை வாய்ப்புக்கான புதிய ஏற்பாடு செய்து தருவதற்குத்தான்!

உடைந்த கூரையும் கரும்பலகை கூட இல்லாமலும் ஓராசிரியரை மட்டும் கொண்டுள்ள லட்சக்கணக்கான ஆரம்பப் பள்ளிகளை சீர்படுத்த வக்கில்லையாம்; கல்வியறிவின்மையைப் போக்க அதிநவீன திட்டமாம்! வெட்கக் கேடு!

படிப்பகம்

www.padippakam.com

25 ஆண்டுகளாக இங்கு வேலை செய்து வரும் ஸ்டோர் கீப்பர் சம்பளம் ரூபாய் 250 மட்டுமே. இங்கு பணிபுரியும் 100க்கும் மேற்பட்ட தொழிலாளர்களில் 25 பேர் மட்டுமே நிரந்தர ஊழியர்கள்.

வீட்டுப்படி, சம்பள உயர்வு என அடிப்படைத் தேவைக்காக கோரிக்கை வைத்த தொழிலாளர்களுடன் பேச்சு வார்த்தை நாடகம் ஆடிக்கொண்டே முன்னறிவிப்பு இன்றி ஓட்டலை மூடியது நிர்வாகம். சட்டத்திலிருந்து தப்பிக்க, ஓட்டல் பழுதுப் பார்க்கப்படுகிறது என போர்டு எழுதி வைத்துவிட்டு, நவீனப்படுத்தி தற்போது 'விரைவில் திறக்கப்படும்' என விளம்பரமும் செய்கிறது. அதே நேரத்தில் ஓட்டல் பழுதுபார்க்கப்படுகிறது, என்ற பல்லவியை திரும்பத் திரும்ப பாடி தொழிலாளர்களை லேபர் கமிஷ்னரிடமிருந்து லேபர் கோர்ட்டுக்கு என இழுத்தடித்துக் கொண்டிருக்கிறான் முதலாளி பாஸ்கர்பட்.

தொழிலாளர்களின் கடின உழைப்பினால் மட்டுமே பலகோடி ரூபாய் சொத்துக்களுக்கு அதிபதியான பாஸ்கர் பட் போராடும் தொழிலாளர்களை ஓட்டலில் தங்கவும் விடாமல் விரட்டியடித்துள்ளான். அருகில் உள்ள எப் 2 போலீசு நிலைய எஸ்.ஐ. பாலசுப்பிரமணியம் தலைமையிலான போலீசு ரௌடி கும்பலை ஏவி தொழிலாளர்களின் அறையில் 2.5.88 அன்று நள்ளிரவு புகுந்து அவர்களின் சொற்ப உடைமைகளை வீதியில் வீசியெறிந்து வெறியாட்டம் போட்டுள்ளான்.

மே தினத்தன்று தொழிலாளர்கள் கொடியேற்றுவதற்குக்கூட தடைவிதித்து அவர்களை விரட்டியடித்துள்ளது போலீசு ரௌடிக் கூட்டம்.

'கவர்னரின் ஆலோசகர் பத்மநாபனைத் தெரியும், போலீசு கமிஷ்னர் துரையைத் தெரியும். புது லைசென்ஸ் வாங்கி இதே இடத்தில் ஓட்டல் நடத்துவேன். தடுப்பவர்களை குண்டர்கள் சட்டத்தில் ஜெயிலுக்கு அனுப்புவேன்' என எக்காளமிட்டு திரிகிறான் முதலாளி.

நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தங்களுக்குள் சங்கம் வைத்துக்கொண்டு போராடும் இடத்திலேயே தொழிலாளர்களுக்கு இந்த கதி என்றால், சில பத்து தொழிலாளர்களை வைத்துக்கொண்டு வேலை வாங்கும் சிறு ஓட்டல் முதலாளிகளோ தம் கீழ் வேலை செய்யும் தொழிலாளர்களை நாயினும் கேடாக மதிக்கின்றனர்.

அற்ப கூலி, அடிமை வாழ்வு, ஓய்வு ஒழிச்சல் அற்ற வேலை என்று மிதிபடும் ஓட்டல் தொழிலாளர்கள் உறுதியாக போராடினாலும் உதிரியாக இருக்கும்வரை பயனேதும் இல்லை. அதுமட்டுமல்ல, எதிரிக்கு எதிரான போராட்டத்தில் வழமையான போராட்ட முறைகளுக்கு மாறாக 'கெரோ' போன்ற எதிரிக்கு உடனடி நெருக்கடி கொடுக்கும் போராட்ட முறைகளுக்கு மாறுவதோடு, அதில் ஊன்றி நிற்க புரட்சிகர அரசியலால் ஆயுத பாணியாவதும் முழு முதல் தேவையாகும்.

## ஓட்டுக் கட்சிகளின் யோக்கியதை பாரீர்!
## போலிக் கம்யூனிஸ்டுகளின் முகவிலாசம் பாரீர்!


வேலைபெறுவதை அடிப்படை உரிமையாக்கும்படியும், வேலை வாய்ப்பில்லாதவர்க்கு ஈட்டுத்தொகை நிவாரணம் கொடுக்கும்படியும் கோரும் தனிநபர் மசோதா ஒன்று இந்தமாதம் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கும் ஓட்டெடுப்புக்கும் வந்தது. வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்போம் என்று வாக்குறுதி கொடுத்து ஓட்டுப் பொறுக்கிய அனைத்து அரசியல் கட்சிகளும் அப்போது தமது யோக்கியதைகளை வெளிச்சம் போட்டுக் காட்டி கொண்டன.

சபை உறுப்பினர்கள் 545 பேரில் 81 பேர்தான் வந்திருந்தனர். மறைமலைநகர் மாநாட்டில் "வறுமையை ஒழிப்போம்", வேலையில்லாமையை ஒழிப்போம்!" என்று முழக்கமிட்ட காங்கிரசின் அரசில் 74 பேர் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தனர். தீர்மானத்தை முன்மொழிந்த ஜனதா உறுப்பினர் தம்பன்தாமஸே சபைக்கு வரவில்லை. ஒரு ஜனதா, ஒரு "மார்க்சிஸ்டு" கட்சி உறுப்பினர் உட்பட மூன்றே எதிர்க்கட்சியினர்தான் சபையில் இருந்தனர். அவர்களோடு போட்டிக் காங்கிரசும் சேர்ந்து ஏழு பேர்தான் மசோதாவை ஆதரித்து வாக்களித்தனர்.

ஊர் ஊராகப் பொதுக்கூட்டங்கள், மாநாடுகள் நடத்தி, தட்டிகளிலும் சுவர்களிலும் எழுதி போலிகம்யூனிஸ்டுகள் நிறைவேற்றும் தீர்மானம் "வேலை இல்லோருக்கு நிவாரணம் கொடு! வேலைபெறுவதை அடிப்படை உரிமையாக்கு!" என்பதுதான். ஆனால் இதே கோரிக்கையை சட்டமாக்கும் தனிநபர் மசோதா வந்தபோது ஒரே ஒருத்தர்தான் சபையில் இருந்தார் அவரும் தூங்கியவாக இருந்தாரோ என்னவோ!

"மசோதா தோற்றுப்போகும் என்பது உறுதியாகத் தெரியும் எனவே போகவில்லை" என்று கூட போலிக் கம்யூனிஸ்டுகள் மழுப்புவார்கள். மற்ற சட்டங்கள் மட்டும் இவர்கள் விரும்பம் போலவா நிறைவேறுகின்றன?

இதுதான் ஓட்டுக்கட்சிகளின் யோக்கியதை! இதுதான் போலிக் கம்யூனிஸ்டுகளின் முகவிலாசம்! இளைஞர்களே, புரட்சிகர அணிகளே புரிந்து கொள்ளுங்கள், இந்தப் போலிகளை!



படிப்பகம்

www.padippakam.com

# உரிமை மீறல்கள் போலீஸ் அக்கிரமங்கள்

சர்வதேச பொது மன்னிப்பு நிறுவனம் - உலகின் பல்வேறு நாடுகளிலும் நடக்கும் மனித உரிமை மீறுதல்களுக்கு எதிராகச் செயல்படும் அமைப்பு. ஜனநாயக உணர்வுடைய பல நாட்டு 'அறிஞர்கள்' பங்கேற்கின்றனர். இந்த சர்வதேசப் பொது மன்னிப்பு நிறுவனம் இந்தியாவிலிருந்து பல புகார்களைப் பெற்றுள்ளது. இந்திய சமூகத்தின் கீழ் நிலையிலுள்ளவர்கள் குறிப்பாக தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் இந்தியப் போலீசு மற்றும் பிற அதிகாரிகளால் சட்ட விரோதமாகக் கைது செய்து சிறையிலடைக்கப் படுகிறார்கள்; அநாகரிகமாக நடத்தப்பட்டு சித்திரவதைக்கு ஆளாகிறார்கள்; பலர் இரகசியமாகக் கொல்லப்படுகிறார்கள். இவை போன்ற ஏராளமான புகார்கள் சர்வதேச பொதுமன்னிப்பு நிறுவனத்திடம் போய்க் குவிகின்றன.

அப்படிக் குவியும் புகார்களில் இரண்டை முக்கியமாக அந்நிறுவனம் எடுத்துக் காட்டியிருக்கிறது. ஒன்று 1986 இல் குஜராத் போலீசு மிருகத்தனமான முறையில் ஒரு மலைவாழ் பழங்குடிப் பெண்ணைக் கற்பழித்த வழக்கு. மற்றொன்று 1987 இல் ராஜஸ்தான் போலீசு வெறியர்கள் ஒன்பது மலைவாழ் பழங்குடித் தலைவர்களைச் சித்திரவதை செய்த வழக்கு.



போலீசு வெறியர்களால் கற்பழிக்கப் பட்ட பீகார் பராரியா கிராமத்துப் பெண்கள்

1986, ஜனவரி 5 ந்தேதி — குஜராத் — பரூச் மாவட்டம் தேவிதேவ் கிராமத்திலிருந்த குந்த பெண் ராம்ஜி என்ற பெண்ணை போலீசார் இழுத்துப் போனார்கள். அவளது வீட்டிலிருந்து ஒரு உறவினரைக் கடத்திய வழக்கு சம்பந்தமாக விசாரிப்பதற்காக என்று சொன்னார்கள். ஒரு பெரிய மக்கள் கூட்டத்தின் முன்னே அவளை நிர்வாணமாக நிறுத்தினார்கள். இதைப்போலீசுசே ஒப்புக் கொண்டது. பிறகு சாக்பாரா நகர போலீசு நிலையத்துக்கு முன்பே ஒரு போலீசு லாரியில் வைத்து பல போலீசாரும் கற்பழித்தனர். மீண்டும் போலீசு நிலையத்துக்குள் இழுத்துப் போய் தாக்கிக் கற்பழித்தனர். இரண்டு நாட்களக்குப் பிறகு அவளை விடுவித்தனர்.

பிறகு குற்றத்தை மறைக்கும், மறுக்கும் வேலையில் இறங்கினர். ராஜ்பிப்லா, போலீசு நிலையத்துக்கு போய் மருத்துவ பரிசோதனை செய்யும்படி கோரிய போது மருந்துவர் மறுத்து விட்டார். தனியார் மருத்துவர் சோதித்தார். ஆனால் கற்பழிப்புக் குற்றத்தைப் போலீசு மறுத்து விட்டது. ஒரு வாரத்துக்குப் பிறகு கற்பழிப்புப் புகார் கொடுக்கப்போன குந்தபெண்ணைப் பிடித்து வைத்துக் கொண்டு புகாரை மறுத்து வாக்கு மூலமளிக்கும்படி நிர்பந்தித்து மீண்டும் கற்பழிப்பதாக மிரட்டிக் கையொப்பம் வாங்கிக் கொண்டனர்.

ஒரு சேவை நிறுவனம் உச்ச நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தது. புகாருக்கான தடயங்கள் ஆதாரங்கள் இருப்பதாகவும், வழக்கை விசாரிக்கும்படியும் சி.பி.ஐ — மத்திய புலனாய்வுத் துறைக்கு உத்திரவிடப்பட்டது. மூன்று மாதங்களுக்குப் பிறகு 6 போலீசாரை கைது செய்த சி.பி.ஐ சட்ட நுணுக்கங்களைக் காட்டி பிணையில் விடுவித்தது. உச்சநீதி மன்றமே ஒரு கமிஷன் அமைத்தது. 584 சாட்சியங்களை விசாரித்த கமிஷன் எட்டு போலீசாரும், இரண்டு மருத்துவர்களும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்று அறிக்கை கொடுத்தது ஆனால் இதுவரை குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை.

1987 ஆகஸ்டு 14ந் தேதி ராஜஸ்தான் துங்கார்பூர் நகரில் பல்லாயிரம் மலைவாழ் மக்கள் கூடினர். வறட்சி நிவாரண பணிகளின் பற்றாக்குறை, முறைகேடுகளை எதிர்த்தும், குறைந்த பட்ச கூலி கேட்டும் ஆர்பாட்டம் செய்வதற்காகக் கூடினர். அவர்களை வழிமறித்த போலீசார் தடியடி நடத்தி துரத்தினர். அவர்களின் ஒன்பது தலைவர்களை மட்டும் கைது செய்தனர். தம்போளா போலீசு நிலையத்துக்கு இழுத்துப்போய் இரண்டு நாட்கள் காட்டு மிராண்டித்தனமாக சித்திரவதை செய்தனர். மூன்று போலீசு நிலையங்களின் அதிகாரிகள் முன்னின்று தாக்குதல் நடத்தி குரூர இன்பம் கண்டுள்ளனர். பல்வேறு பொய்க்குற்றங்கள் சாட்டப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். வழக்கில் ஆதாரம் இல்லை என உச்சநீதி மன்றம் அவர்களை விடுதலை செய்தது.

சித்திரவதைகள் பற்றி என்ன ஆனது என்று கேட்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு சர்வதேசப் பொதுமன்னிப்பு நிறுவனம் ராஜஸ்தான் முதல் மந்திரிக்கு எழுதியது. பதிலில்லை. பத்து மாதங்களுக்குப் பிறகு மீண்டும் எழுதி விசாரித்ததுஇப்போதும் பதிலில்லை. இவை மட்டுமல்ல, இன்னும் ஏராளமான போலீசு நிலையச் சித்திரவதைகள், கற்பழிப்புகள், படுகொலைகள் பற்றி பல மாநில மத்திய அரசுகளுக்கு சர்வதேசப் பொது மன்னிப்பு நிறுவனம் எழுதியுள்ளது.

சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபைப் பிரகடனத்தில் இந்தியா கையொப்பமிட்டுள்ளது. 1977 ஐ.நா. சபை தீர்மானத்தை முன்மொழிந்த நாடுகளில் ஒன்று இந்தியா. சித்திரவதைக்கெதிரான ஐக்கியநாடுகள் சபை சிறப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டு சண்டப்பிரசண்டம் செய்த நாடு இந்தியா. பாலஸ்தீனத்தில் யூத மதவெறியர்களும், தென் ஆப்பிரிக்காவில் வெள்ளை நிற வெறியர்களும் செய்யும் காட்டு மிராண்டித்தனங்களை எதிர்த்து பெருங்கூச்சல்போடும் நாடு இந்தியா.

இந்தியா முழுவதும் நடக்கும் பல ஆயிரம் போலீசு நிலையக் கற்பழிப்புகள் பற்றி புகார்கள் ஒவ்வொரு ஆண்டும் வருவதாக சர்வதேசப் பொது மன்னிப்பு நிறுவனம் கூறுகிறது. குஜராத் - குந்தா பெண்ணைப் போலவே மிருகத்தனமாக நடந்தது பாக்பாத் மாயா தியாகி விவகாரம். பட்டப் பகலில் பாக்பாத் நகரில் கணவனையும், உறவினரையும் சுட்டுக் கொன்ற போலீசு 8 மாத கர்ப்பிணியான மாயாதியாகியை நிர்வாணமாக்கி நகர வீதியில் இழுத்துப் போய், மறைவிடத்தில் போலீசு கம்பால் குத்தி சித்திரவதை செய்து, பலர் கற்பழித்தனர். எட்டாண்டுக்கு பிறகு கீழ்நிலைப் போலீசார் ஆறுபேர்க்கு கோர்ட் மரண தண்டனை விதித்தது(!). தண்டனை கடுமையானது என்று கூறி மேல் முறையீடு செய்துள்ளது. பிரதான குற்றவாளியான போலீஸ் உயர்அதிகாரி மீது வழக்கே இல்லை. அவன் மற்றொரு பெண்ணைக் கற்பழித்து விட்டு தற்காலிக வேலை நீக்கம் பெற்று ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறான்.

இப்படி ஏராளமான வழக்குகள். இரண்டு மாதங்களுக்கு முன்பு பீகாரிலும், சென்றமாதம் அசாமிலும் பல போலீசார் கும்பலாகப் போய் கிராமப் பெண்களைக் கற்பழித்தனர். இந்திய போலீசு நிலையங்கள் கொலை கொட்டடிகளாக சித்திரவதைக் கூடங்களாக கற்பழிப்பு மாளிகைகளாக மாறிவிட்டன ஏராளமான கறுப்புச் சட்டங்களை இயற்றி ஆளும் பாசிச ராஜீவ் கும்பலே அவர்களை ஊக்குவிக்கிறது. இவர்களிடம் மனித உரிமைகளை எதிர்பார்க்க முடியாது! இவர்களையே ஒழித்துக் கட்டுவதன் மூலம்தான் மனித உரிமைகளை நிலை நாட்ட முடியும்!



படிப்பகம்

www.padippakam.com

குளவிக் கூடடைக் கலைத்து விளையாடும் குரங்கு போல பாசிச ராஜீவ் கும்பல் மீண்டும் பொற்கோவிலை முற்றுகையிட்டு சீக்கியத் தீவிரவாதிகளுக்கு எதிராகப் போர் நடத்திக் கொண்டிருக்கிறது. இந்தப்போரின் மூலம் சீக்கியத் தீவிரவாதிகளை வென்று அடக்கி ஒடுக்கிவிட முடியும், குறைந்த பட்சம் சீக்கிய மதவெறி பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த முடியும். அதன் மூலம் பஞ்சாப் பிரச்சினையைத் தீர்த்து விட முடியும் என்று கருதினால் அது முட்டாள் தனமானது. அப்படிக் கருதி முன்பு எடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் பஞ்சாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதில் பன்மடங்கு பெருக்கவே செய்தன.

முன்பு ''மிதவாத'', சீக்கிய அகாலிகளைப் பிளவுபடுத்தி பேரம் பேசி பஞ்சாப் பிரச்சினையைத் தீர்க்க முயன்ற ராஜீவ் கும்பல் தோற்றுப் போனது. இடையே அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டு, கறுப்புச் சட்டங்களையும், பாசிசப் படைத் தலைவன் ரெபைரோ — ரே கும்பலை ஏவிவிட்டு ஒடுக்க முயன்று தோற்றுப் போனது. கடைசியாக ''தீவிரவாத' சீக்கிய மத வெறியர்களைப் பிளவுப் படுத்தி பேரம் பேசி ஒரு ஒப்பந்தத்துக்கு வர முயன்று அதிலும் தோற்றுப் போனது.

இப்போது தனது சிறப்புக் காவல் அதிரடிப்படையை அதிநவீன ஆயுதங்களுடன் ஏவி பொற்கோவிலை முற்றுகையிட்டு பயங்கரவாதிகளை வேட்டையாடுகிறது, பாசிச ராஜீவ் கும்பல். இந்தச்சண்டையில் பொற்கோவிலுக்குள் சிக்கியுள்ள பயங்கரவாதிகளை வேண்டுமானால் ஒழிப்பதில் வெற்றி பெறலாம் ஆனால் குளவிக் கூட்டைக் கலைப்பதன் விளைவாக பஞ்சாபிலும் சுற்றியுள்ள மாநிலங்களிலும் பயங்கரவாத நடவடிக்கைகள் — பழிக்குப் பழிவாங்கும் நோக்கத்தோடு அதிகரிக்கும். அரசு பயங்கரவாதத்துக்கும் சீக்கிய மதவெறி பயங்கர வாதத்துக்கும் இடையே சிக்கி மேலும் பல சிவிலியன்கள் பலியாவார்கள்.

பஞ்சாப் பிரச்சினை தீராமல் இப்படி நீடித்துக் கொண்டே போவது, பாசிச ராஜீவ் கும்பலுக்கு வேறொரு வகையிலும் வசதியாக இருக்கிறது. உள்நாட்டு நெருக்கடிகள் முற்றும் போதெல்லாம் பாகிஸ்தான் — சீனாவுக்கு எதிராக தேசிய வெறியை தூண்டி திசை திருப்புவதை ராஜீவ் கும்பல் வழக்கமாகக் கொண்டிருந்தது. இப்போது ஈழப்பிரச்சினையையும் பஞ்சாப் பிரச்சினையையும் அதற்குப் பயன்படுத்துகிறது. குறிப்பாக ஆயுத பேர ஊழல்களில் பாசிச ராஜீவ் கும்பலின் கிரிமினல் குற்றங்கள் ஆனிந்தரமாக நிரூபிக்கப்பட்டு அம்பலமாகியுள்ளது. இதிலிருந்து தப்பிப்பதற்காக பஞ்சாப் பிரச்சினையை மீண்டும் கிளறிவிடுகிறது. கடந்த நான்கு மாதங்களில் பஞ்சாபில் சீக்கிய பயங்கரவாத நடவடிக்கைகள் பன்மடங்கு பெருகிப் போனதை ஒரு முகாந்திரமாக பாசிச ராஜீவ் கும்பல் காட்டுகிறது. ஆனால் இந்திய உளவுப் படையான ''ரா'' பஞ்சாப் பிரச்சினையில் புகுந்து பல சதி வேலைகளைச் செய்து கிளறிவிடுவது இப்போது வெளியாகியுள்ளது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சியம் பாசிச ராஜீவ் கும்பல் முட்டாள்தனமாக ஒரு பெரிய பாறாங்கல்லைத் தூக்கி எதிரிகள் மீது வீச முயலுகிறது. அது தன் காலின் மீதே போட்டுக் கொள்ளும்!

# உளவுப்படை ''ரா''

## சீக்கிய பயங்கரவாதிகளுக்கு ஆயுத உதவி!

சீக்கிய தீவிரவாதிகளிடமிருந்து கைப்பற்றியதாகக் கூறப்படும் ராக்கெட்- ஏவுகணை இந்திய உளவுப்படை இறக்குமதி செய்து ஒருபிரிவு சீக்கியத் தீவிரவாதக் குழுவுக்குக் கொடுத்ததாகக் கூறப்படும் ராக்கெட்டும் இதே ரகம்தான். ஏவுகணையைத் தூக்கிக் காட்டும் இவரைத்தான்-மத்திய ரிசர்வ் போலீஸ் படை துணைத் தலைமை அதிகாரி எஸ்.எஸ்.விர்க்- பொற்கோவிலிருந்து சீக்கியத் தீவிரவாதிகள் கட்டு கன்னம்- தாடையைப் பிய்த்துவிட்டனர்.



வங்கிக் கொள்ளை, வாகனப் பறிப்பு, அப்பாவி மக்கள் படுகொலை என்று அட்டூழியங்களைப் புரிந்து வரும் சீக்கியத் தீவிரவாதிகள் இப்போது ஏவுகணைகளைக் கொண்டு தாக்கத் துணிந்து விட்டார்கள் என்ற செய்தியைக் கேட்டு நாடே அதிர்ச்சியடைந்தது. மதவெறி பயங்கரவாதிகள் இவ்வளவு கொடூரமானவர்கள் என்றால் அவர்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்து நாட்டைத் துண்டாட சதி செய்யும் அன்னிய சக்திகள் எத்தகைய பயங்கரவாதிகள் என்று நாடே பொருமியது. ஆனால் சீக்கிய தீவிரவாதிகளில் ஒரு எடுபிடி கும்பலுக்கு ஏவுகணைகளையும் ஆயுதங்களையும் கொடுத்ததே இந்திய உளவுத்துறை 'ரா' (RAW) தான் என்ற உண்மை இப்போது வெளியாகி, இரத்த வெறிபிடித்த 'ரா'வின் கோர முகம் அம்பலப்படத் தொடங்கியுள்ளது.

கடந்த் ஆண்டு நவம்பர் 19ம் நாள், டெல்லி சர்வதேச விமான நிலையத்தில் ஐ.சி.452 என்ற இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் தரையில் இறங்கியது. பயணிகள் இறங்கிய சிறிது நேரத்தில் பார்சல் சாமான்கள் இறக்கப்பட்டன. ஒரு மரப்பெட்டியை விமான நிலைய ஊழியர்கள் இறக்கும் போது அதிலிருந்து துப்பாக்கி ரவைகள் சிதறின. அதிர்ச்சியடைந்த ஊழியர்கள் உடனே விமான நிலையக் காவலர்களிடம் தெரிவித்தனர். காவலர்களின் மேற்பார்வையில் ஒரே முகவரிக்கு வந்த இத்தகைய 23 பெட்டிகளும் பாதுகாப்பான இடத்துக்கு அகற்றப் பட்டன.

பின்னர் அப்பெட்டிகள் உடைக்கப்படாமலேயே விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரி நியோகி முன்னிலையில் எக்ஸ்- ரே முறையில் சோதிக்கப்பட்டது. அத்தனைப் பெட்டிகளிலும் துப்பாக்கிக் குண்டுகளும் ஏவுகணைகளும், தரையிலிருந்து வானோக்கிப் பாயும் ஏவுகணைத் தாங்கிகளும் இருந்தன.

இவை தீவிரவாதிகள் கடத்தி வந்துள்ள ஆயுதங்கள் என்றும் அதைக் கைப்பற்றிய பெருமை தம்மையே சாரும் என்றும் ஒரு பக்கம் பாதுகாப்பு அதிகாரிகளும் மறு பக்கம் சுங்க அதிகாரிகளும் உரிமை கொண்டாடிக் கொண்டிருந்தனர். இதற்கிடையே 'ரா'வின் உளவாளி ஒருவர் விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரி நியோகியைச் சந்தித்து, இவை அரசாங்கத்தின் சொத்து என்றும், இந்த விவகாரத்தைப் பரிசீலிக்க உளவுத்துறை நிறுவனமான 'ரா'வுக்கே உரிமையுள்ளது என்றும் கூறி பிரித்து சோதனையிடுவதற்கு முன்பே அவற்றை எடுத்துச் சென்று விட்டார்.

விமான நிலையச் சரக்குப் பதிவேட்டில் இந்தப் பெட்டிகள் 20ந் தேதி கிடங்குக்கு வந்ததாகவும், ஆப்கான் தலைநகர் காபூலிலிருந்து தொலைத் தொடர்பு இயக்குனர் அனுப்பியதாகவும், அப்பெட்டிகளில் தொலைத் தொடர்பு சாதனங்கள் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றை டெல்லி சன்சார் பவனிலுள்ள தொலைத் தொடர்பு இயக்குனருக்கு அனுப்பியுள்

படிப்பகம்

www.padippakam.com

ளதாக பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் சன்சார் பவனில் தொலைத் தொடர்பு அமைச்சகம் உள்ளதே தவிர இயக்குனர் என்ற பொறுப்பில் அதிகாரிகள் யாருமில்லை. அப்படியானால் காபூலிலிருந்து ரகசியமாக உளவுத்துறை 'ரா' ஆயுதங்களைக் கடத்தி வந்ததில் சந்தேகமேயில்லை.

நவீன ஏவுகணைகளும் குண்டுகளும் இந்திய ராணுவத்திடம் இருக்கும்போது உளவுத்துறை நிறுவனம் அவற்றை ரகசியமாக ஆப்கானிலிருந்து கடத்திவர வேண்டிய அவசியம் என்ன? அதுவும் ரஷிய முத்திரை பொறித்த குண்டுகளையும் ஏவுகணைகளையும் ரகசியமாகக் கடத்தி வர வேண்டிய அவசியம் என்ன?

ஈழ விடுதலை இயக்கங்களைச் சீர்குலைத்து வரும் 'ரா' இவற்றை ஈழப் போராளிகளுக்கு ரகசியமாகக் கொடுத்திருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் கடந்த நவம்பருக்குப் பிறகு விடுதலைப் புலிகளுக்கும் இந்திய ஆக்கிரமிப்புப் படைக்குமிடையே உக்கிரமான மோதல்கள் நிகழ்ந்துள்ளது. மறுபுறம் ஈழத் துரோக 'போராளி' குழுக்களுக்கும் கொடுத்திருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் இத்துரோகக் குழுக்கள் எதுவும் ராக்கெட்டுகளை வைத்து தாக்கியதாக இது வரை செய்தி இல்லை.

நிச்சயமாக, சந்தேகத்திற்கிடமின்றி இது சீக்கிய தீவிராவாதிகளில் ஒரு கும்பலுக்கு ரகசியமாக 'ரா'வினால் கொடுக்கப்பட்டுள்ளது. இதை உறுதிப்படுத்தும் வகையில் இந்த ஏவுகணைகள் ஆப்கானிலிருந்து ரகசியமாக வந்திறங்கிய அடுத்த இருமாதங்களில் சீக்கிய தீவிரவாதிகள் ஏவுகணைகளைக் கொண்டு தாக்கத் தொடங்கினர்.

கடந்த மார்ச் 21 அன்று பாக்வாராவின் விஸ்வகர்மா கோவிலில் மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் இரண்டு கம்பெனிகள் முகாமிட்டு உறங்கிக் கொண்டிருந்த போது தான் நள்ளிரவில் முதன்முதலாக இந்த ராக்கெட்டுகள் வந்து தாக்கியது. அதுவும் போலீஸாரைக் குறிவைத்துத் தாக்காமல் கோயில் சுற்றுச்சுவர் மீதுதான் ஏவப்பட்டது. தாக்கத் துணிந்தவர்கள் போலீஸாரைத் தாக்காமல் சுற்றுச் சுவரை ஏன் தகர்க்க வேண்டும் என்பது அப்போது மர்மமாகவே இருந்தது. ஒருவேளை தீவிரவாதிகள் பீதியூட்டுவதற்காக இப்படிச் செய்திருக்கலாம் என்றே பலரும் கருதினர்.

ஆனால், அதற்கடுத்த நாளே சொல்லி வைத்தாற்போல, 59வது அரசியல் திருத்தச் சட்டமும் பஞ்சாபில் அவசரநிலை ஆட்சியும் அறிவிக்கப்பட்டது. அடுத்து, ஏற்கனவே தீர்மானித்தபடி சதி நாடகத்தின் காட்சிகள் விறுவிறுப்பாக அரங்கேறத் தொடங்கியது. கடந்த ஏப்ரல் 20-ம் தேதியன்று குர்தாஸ்பூர் மாவட்டத்தில், தரையிலிருந்து விமானத்தைத் தாக்கும் 16 ஏவுகணைகள் தீவிரவாதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டன. அடுத்த இரு நாட்களில் பரித்கோட் மாவட்டத்தில் மேலும் 4 ஏவுகணைகளை போலீசார் கைப்பற்றியதாக செய்தி வந்தது.



இந்திய அரசுப்படை பொற்கோவிலைச் சுற்றி வளைத்து சீக்கியத் தீவிரவாதிகளுடன் நடத்தும் சண்டையில் சிக்கிய சீக்கியர் தனது வயோதிகத் தாய்யை முதுகில் சுமந்து கண்களில் வெறுப்பு உமிழ வெளியேறுகிறார்

பாசிச ராஜீவ் கும்பலும் அதன் விசுவாச உளவுப் படையான 'ரா'வும் அரங்கேற்றி வரும் இச்சதித் திட்டத்தின் நோக்கம் மிகத் தெளிவானது.

ரஷிய முத்திரை பெற்ற ஏவுகணைகள் என்றால் அவை ஆப்கானில் ரஷிய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடும் முஜாஹிதின் கொரில்லாக்களால் கைப்பற்றப்பட்டவையாக இருக்க வேண்டும்; முஜாஹிதின்களுக்கு பாகிஸ்தான் புகலிடம் கொடுக்கிறது; எனவே பாகிஸ்தான், ஆப்கான் கொரில்லாக்களிடமிருந்து இந்த ஆயுதங்களை சீக்கியத் தீவிரவாதிகளுக்குக் கொடுத்து நாட்டை துண்டாட சதி செய்கிறது என்று பாகிஸ்தான் மீது பழியைப் போடலாம்.

மறுபுறம், சீக்கிய தீவிரவாதிகள் ஏவுகணைகளை வைத்துத் தாக்குமளவுக்கு முன்னேறி விட்டார்கள்; எனவே பயங்கரவாதத்தை ஒழிக்க கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறிக் கொண்டு பாசிச அடக்குமுறையை நியாயப்படுத்தலாம்.

அதேசமயம், முன்னேற்பாடாக தாமே ரகசியமாக கொடுத்த ஆயுதங்களை தாங்களே 'தேடிக் கண்டுபிடித்து', பயங்கரவாதிகளின் முதுகெலும்பை முறித்து விட்டதாகவும், சட்டம்- ஒழுங்கு சீரடைந்து பஞ்சாபில் அமைதி திரும்புவதாகவும் பம்மாத்து செய்யலாம்.

இப்படி ஒரே கல்லில் கொத்துக் கொத்தாக மாங்காய்களை வீழ்த்தும் திட்டத்தை நிறைவேற்றத்தான் சீக்கியத் தீவிரவாதிகளில் ஒரு எடுபிடி கும்பலுக்கு ரகசியமாக ஆயுதங்களைக் கொடுத்துள்ளது 'ரா'. ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் ஒரு சில பயங்கரவாதச் செயல்களுக்கு தாங்கள் பொறுப்பில்லை; அரசு எங்கள் மீது வீணாகப் பழி சுமத்துகிறது என்று சீக்கிய தீவிரவாதிகள் கூறி வந்துள்ளனர். இதன்படி பார்த்தால், 'ரா' வினால் ஊட்டி வளர்க்கப்படும் இச்சதிகார பயங்கரவாதக் கும்பல் நீண்டகாலமாகவே இயங்கி வருகிறது என்பது தெளிவாகிறது.

இத்தனையும் இப்போது 'இந்தியன் போஸ்ட்' லண்டனின் 'அப்சர்வர்' முதலான பத்திரிக்கைகளில் வெளிவந்து நாறுகிறது. அதைத் தொடர்ந்து 'பாகிஸ்தான் டைம்ஸ்' பத்திரிக்கையிலும் இந்தச் சதி வெளிவந்து பாகிஸ்தானில் சந்தி சிரிக்கிறது.

ஆனாலும் இந்த தேச விரோத மக்கள் மக்கள் விரோத சதியை எதிர்க்க எந்தக் கட்சிக்கும் எலும்பில்லை. இத்தகவல்களைச் சேகரித்து எழுதிய இந்தியன் போஸ்ட் பத்திரிக்கையாளர் திரேன் பகத் சில எதிர்கட்சி எம்.பி.க்களையும் பிரபல பத்திரிக்கைகளையும் நேரில் சந்தித்து இத்தேச விரோதச் செயலை அம்பலப்படுத்தக் கோரியும்கூட 'தேச நலன்' கருதி யாருமே முன்வரவில்லை.

உளவுத் துறையின் சதிச் செயலைப் பற்றி பத்திரிக்கையில் எழுதினாலோ, பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினாலோ தேசவிரோதி என்று அரசால் முத்திரை குத்தப்பட்டு அவமானப்பட நேரிடும் என்பதைவிட, அரசின் இப்பயங்கரவாத சதியை நியாயப்படுத்த வேண்டும் என்பதே இவர்களின் நிலைப்பாடாக இருக்கிறது. சில எதிர்க்கட்சிகள் பாராளுமன்ற விதிகளுக்குட்பட்டு இந்த விவகாரத்தைப் பற்றி எப்படி கேள்வி எழுப்பலாம் என்று ஆராய்ந்து கொண்டிருக்

படிப்பகம்

www.padippakam.com

கின்றன. கவன ஈர்ப்பு தீர்மானம் மூலம் இப்பிரச்சினையைக் கிளப்பினால் சர்வாதிகார சபாநாயகர் திடலடியாக மறுப்பார்; வேறு சந்தர்ப்பத்தில் கேள்வி எழுப்பினால் அறிக்கை பூர்வமான ஆதாரத்தைக் காட்டு என்று வாயடைத்து விடுவார்; எனவே பஞ்சாபில் ஜனாதிபதி ஆட்சியை நீட்டிப்பதற்கான விவாதம் வரும்போது கிளப்பலாம் என்று கொக்கு தலையில் வெண்ணெய் வைத்து பிடிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளன.

பத்திரிக்கைகளின், எதிர்க்கட்சிகளின் துரோகத்தோடு 'தேச நலனுக்காக' பாசிச ராஜீவ் கும்பலின் சதி வேகமாக அரங்கேறி வருகிறது. தேசத்தை, குறிப்பாக பஞ்சாபை இன்னுமொரு நெருக்கடிக்குள் தள்ளுவதற்கான ராணுவ நடவடிக்கையில் இறங்க ராஜீவ் கும்பல் தயாராகி வருவதையே இவை சுட்டிக் காட்டுகின்றன. இதை நாடும் மக்களும் அறிந்து கொள்ளும் உரிமையைக் கூட தட்டிப் பறித்து உளவுத் துறையின் மூலம் ரகசிய சதியாக அதை அரங்கேற்றி வருகிறது பாசிசிச கும்பல்.

மக்களுக்குத் தெரியாமல், மக்களிடமிருந்து இரட்டடிப்பு செய்யப்பட்ட எந்த செயலுக்கும் நாடும் மக்களும் பொறுப்பேற்க முடியாது. நாட்டையும் மக்களையும் பேரழிவில் தள்ளிவிட்டு தனது அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்ள பாசிச ராஜீவ் கும்பல் செய்யும் சதிச் செயல்களுக்கு குடிமக்கள் யாரும் துணைபோக முடியாது. மக்களும் புரட்சியாளர்களும் எச்சரிக்கையுடனிருந்து பாசிச கும்பலின் தேச விரோத மக்கள் விரோத எத்தனிப்புகளை முறியடிக்க வேண்டிய தருணமிது.

— மனோகரன்

# இரண்டுபக்கமும் இடிபடும் பத்திரிக்கையாளர்

இருதலைக் கொள்ளி எறும்பாக பஞ்சாப் பத்திரிக்கையாளர்கள் பரிதவிக்கிறார்கள். உண்மையை எழுதினால் அரச பயங்கரவாதிகளுக்கு அது தேசவிரோதமாகத் தெரிகிறது. மதவெறி பயங்கரவாதிகளுக்கு அது மதக் கோட்பாடுகளை இழிவுப்படுத்துவதாகத் தெரிகிறது. சீக்கிய பயங்கரவாதிகளோ ஆயுதங்களைக் காட்டி மிரட்டுகிறார்கள். அரச பயங்கரவாதிகளோ பாசிசக் கருப்புச் சட்டங்களைக் காட்டி மிரட்டுகின்றனர். சீக்கியத் தீவிரவாதிகள் பத்திரிக்கையாளர்களுக்கு மிரட்டல் கடிதங்களை எழுதி அச்சுறுத்துகிறார்கள். அதே உத்தியைக் கையாண்டு பத்திரிக்கையாளர்களின் குடுபத்தாரைக் கைது செய்து அரசு மிரட்டுகிறது.

கடந்த ஏப்ரல் 13 அன்று யு.என்.ஐ. செய்தியாளர் குல்தீப் சிங் அரோரா தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு விரோதமாக அவர் ரகசியமாக சீக்கிய தீவிரவாதிகளைச் சந்தித்து செய்தி சேகரித்தார் என்பதுதான் குற்றச்சாட்டு. இதோடு சமீபத்தில் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட சீக்கிய தலைமை மதகுரு ரோடே, தனது பேட்டியில் காலிஸ்தானைத் தவிர வேறு பேச்சுக்கே இடமில்லை என்று கூறியதாக தவறாக செய்தி கொடுத்தார் என்பது இன்னொரு குற்றச்சாட்டு.

இந்த அற்பக் காரணங்களுக்காகவா தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும்? பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தி இருந்தால் இதுவரை நூற்றுக்கணக்கான பத்திரிக்கையாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருப்பர். ஏனெனில் சீக்கிய பயங்கரவாதிகளைச் சந்தித்து செய்தி சேகரிக்காத பத்திரிக்கையாளர்களே இல்லை. அரோராவைக் கைது செய்ததன் மூலம் பத்திரிக்கையாளர்களை அச்சுறுத்திப் பணிய வைக்கவே அரசு முயற்சிக்கிறது என்று சாடுகின்றனர் பஞ்சாப் பத்திரிக்கையாளர்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்து சிறையிடப்பட்டுள்ள யு.என்.ஐ. செய்தியாளர் அரோரா.



''பயங்கரவாத்தை ஒழிக்க வக்கற்ற அரசு பஞ்சாபில் சட்டம் ஒழுங்கு சீரடைந்து வருகிறது என்று நாங்கள் எழுத வேண்டுமென்று எதிர்பார்க்கிறது. மறுபுறம், சீக்கிய தீவிரவாதிகள் தங்களது பேட்டியின் இறுதியில் அடிக்குறிப்பாக, இதை சுருக்கவோ வெட்டவோ செய்தால் கடுமையான தண்டனை கிடைக்கும் என்று மிரட்டுகின்றனர். இதை வெறும் மிரட்டலாக் கருத முடியாது'' என்கிறார் ஒரு பத்திரிக்கையாளர்.

உண்மைதான்! கடந்த ஏழாண்டுகளில் 6 பத்திரிக்கையாளர்கள் சீக்கியத் தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். பத்துக்கும் மேற்பட்டோர் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளனர். 'பஞ்சாப் கேசரி' பத்திரிக்கையின் ஆசிரியர் லாலா ஜகத் நாராயணன் 1981ல் தீவிரவாதிகளால் கொல்லப்படார். அவரது பணியைத் தொடர்ந்து மேற்கொண்ட அவரது மகன் ரமேஷ் சந்தர் மூன்றாண்டுகளுக்குப் பிறகு கொல்லப்பட்டார். 'ப்ரீதலரி' என்ற இலக்கிய இதழின் ஆசிரியர் சுமீத் சிங் பிப்ரவரி '84ல் பயங்கரவாதிகளின் இலக்குக்குப் பலியானார். 'அகாலி பத்திரிக்கா' செய்தியாளர் கியானி ஜெகத் சிங்கும், அமான் குமாரும் அடுத்த இரு ஆண்டுகளில் படுகொலை செய்யப்பட்டனர். கடந்த ஆண்டில் 'பஞ்சாப் கேசரி' செய்தியாளர் நரேந்திர பால்சிங் சுட்டுக் கொல்லப்பட்டார். ஹிந்த் சமாச்சார் நிருபர் கமலேஷ் பயங்கரவாதிகளால் கோரமான முறையில் தாக்கப்பட்டு 9 மாதகாலமாக மருத்துவமனையில் கிடக்கிறார்.

அதே சமயம் போலீசாரின் அட்டூழியங்களைப் பற்றியும் கேள்வி கேட்க முடியாத நிலைமை. ஈராண்டுகளுக்கு முன் செய்தியாளரும் புகைப்படக்காரருமான பல்பீர்சிங் சக்கு போலீசாரால் அடித்து நொறுக்கப்பட்டார். பின்னர் பி.டி.ஐ நிருபர்களும் 'திட்ரிப்யூன்' பத்திரிக்கை நிருபர்களும் எல்லைப் பாதுகாப்பு படையினரால் பொற்கோவிலருகே மிருகத்தனமாக தாக்கப்பட்டனர். தன்னை போலீசார் கைது செய்ய உத்தேசித்துள்ளதை அறிந்த 'திட்ரிப்யூன்' நிருபர் தல்பீர்சிங் 1984ல் தலைமறைவாகி விட்டார். ஆனாலும் அவரது குடும்பத்தாரை அடுத்தடுத்து கைது செய்து அரசு மிரட்டி வருகிறது. சமீபத்தில், ஏப்ரல் இறுதியில் பத்திரிக்கையாளரும் மனித உரிமைக்கான செயல் வீரருமான சுக்தேவ் சிங், 59வது அரசியல் சட்டத்திற்கு எதிராக மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டம் செய்தற்காக கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப் பட்டுள்ளார்.



போலீசாரால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்ட பல்பீர் சிங் சக்கு.



சீக்கிய தீவிரவாதிகளால் தாக்கப்பட்டு கிடக்கும் பத்திரிக்கையாளர் கமலேஷ்.

மொத்தத்தில் பஞ்சாபில் என்ன நடக்கிறது என்பதை நாட்டுக்கும் மக்களுக்கும் தெரிவிக்க முடியாத நிலையில் இருவகை பயங்கவாதிகளின் பிடியில் பஞ்சாப் பத்திரிக்கையாளர்கள் சிக்கி கொண்டுள்ளனர். பஞ்சாப் பற்றிய உண்மைகளை மக்கள் அறிந்து கொள்ளும் உரிமையும் இருவகை பயங்கரவதிகளால் பறிக்கப்பட்டுவிட்டது. பஞ்சாபில் பத்திரிக்கையாளர்கள் மீதான அடக்குமுறை, நாட்டில் பத்திரிக்கை சுதந்திரம் நிலவுவதாகக் கூறுவது அப்பட்டமான கேலிக் கூத்து என்பதை மீண்டும் நிரூபித்துக் காட்டுகின்றன.

அடக்குமுறைக்குள்ளான பஞ்சாப் பத்திரிக்கையாளர்கள், அனைத்து பத்திரிக்கையைாளர்களையும் அணிதிரட்டிக் கொண்டு பத்திரிக்கைச் சுதந்திரத்தைப் பெறுவதற்கான போராட்டத்தில் இறங்குவதைத் தவிர வேறுவழியில்லை. அரசு பயங்கரவாதம், சீக்கிய மத வெறி பயங்கரவாதம் — இரண்டுக்கும் எதிராகப் போராடி வரும் புரட்சிகர சக்திகளுடன் ஐக்கியப் படாமல் இது சாத்தியமுமில்லை.

குமார்

படிப்பகம்

www.padippakam.com

# எங்கும் கருப்புப் பூனைகள்!



ராஜீவ் "தண்டி" யாத்திரை போனால் கூடவே தண்ட யாத்திரை போகும் கருப்புப் பூனைகள்

நாடாளுமன்ற நாய்ச்சண்டையில் பெருங் கூச்சாலைக் கிளப்பிக் கொண்டிருக்கும் போதே ஆளும் கட்சிகளும் எதிர்கட்சிகளும் ஒன்றுபட்டு ஒரே குரலாக ஒரு சட்டத்தை இயற்றியுள்ளன. பிரதமருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் நெருக்கமாக இருந்து பாதுகாப்புக் கொடுக்கும் சிறப்புக் காவற்படை சட்டம் நிறைவேற்றியுள்ளன. பிரதமரின் பாதுகாப்புப் பிரச்சினை ஆயிற்றே! யாரும் மாற்றுக் கருத்துச் சொன்னால் "துரோகி, தேசவிரோதி" பட்டம் கிடைக்கும் என்று அஞ்சி மெய்யடக்கி வாய்பொத்தி இருந்தன.

இதுவரை பலபடைப்பிரிவுகளில் இருந்து பொருக்கி எடுக்கப்பட்ட தனிப்பயிற்சி பெற்ற தேசிய காவற்படை (என்.எஸ்.ஜி.)யின் பொறுப்பில் முக்கியப் பிரமுகர்களின் பாதுகாப்புப் பணி இருந்தது. "கருப்புபூனைகள்" என்றழைக்கப்பட்ட அதிரடிப்படை இப்போது பிரதமருக்கும் அவரது குடும்பத்தாற்கும் வேண்டி "சிறப்பு காவற்படை (எஸ்.பி.ஜி.) அமைக்கப்படுகிறது.

இதன்படி "நல்ல நோக்கத்துடன்" எஸ்.பி.ஜி. படையின் கூட்டத்துக்குப்புறம்பாக ஏதாவது செய்தாலோ, செய்ததாக சொல்லப்பட்டாலோ, அவர்கள்மீது வழக்குத் தொடுக்கப்படவோ, தண்டிக்கவோ முடியாது. மத்திய மாநில அரசுகள், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள எல்லா அதிகாரத்துறைகளும் எஸ்.பி.ஜி. யோடு ஒத்துழைக்க வேண்டும் அதாவது அதன் கட்டளைக்கு கீழ்படிய வேண்டும். அரசாங்க முன்அனுமதியின்றி, முழுக்க முழுக்க சமூக, பொழுதுபோக்கு, மத நிறுவனங்கள் தவிர வேறு எந்த அமைப்பிலும் நிறுவனத்திலும் எஸ்.பி.ஜி. படையினர் சேரக்கூடாது. முழுக்க முழுக்க கலை, இலக்கியம், விஞ்ஞானத்தன்மை உடையவை தவிர வேறு வெளியீடுகள் மற்றும் பத்திரிக்கைகளோடு எவ்வித தொடர்பும் கொள்ளக்கூடாது.

1985 ஏப்ரலில் இருந்தே எஸ்.பி.ஜி. படை அமைக்கப்பட்ட இயங்கிவருகிறது. அதிஉயர்ந்த லட்சிய நோக்குடைய திறமைசாலிகளான நபர்களைப் பொறுக்கி எடுத்து உருவாக்கப்பட்டது என்கிறார் பிரதமரின் எடுபிடி மந்திரி சிதம்பரம். 1985 —86ல் 4.68 கோடி ரூபாயும், 1986 —87இல் 3.70 கோடி ரூபாயும் இதற்காக செலவாயின. பிரதமர் பயங்கரவாதிகளிடமிருந்து அதிகபட்ச ஆபத்துக்கு இலக்காகி இருப்பதாலும், எஸ்.பி.ஜி.க்கு சட்டபூர்வப் பாதுகாப்புக் கொடுக்கவும் இந்தச் சட்டம் கொண்டு வருவதாக மந்திரி கூறுகிறார்.

இரண்டு காரணங்களுக்காக இந்த சிறப்புக் காவற்படை சட்டம் கொண்டுவரப்படுகிறது. பிரதமரின் பாகாப்பு என்கிற பெயரில் கருப்பூனைகள் நாடெங்கும் நடத்தும் அக்கிரமங்கள் கடும் வெறுப்பையும் ஆத்திரத்தையும் கிளப்பியுள்ளன. சொந்த நாட்டைச் சூரையாடிய மார்கோஸ், குவாலியர், ஷா முதல் இடி அமீன் வரை எல்லா பாசிச சர்வாதிகாரிகளையும் போல அரசியல் எதிரிகளுக்கு எதிராக ஏவிட ராஜீவ் கும்பலுக்குத் தேவையான அதிரடிப்படையை உருவாக்குவது.

பிரதமரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்கிற பெயரில் "கருப்புப் பூனைகள்" செய்யும் அட்டகாசம் மிதமிஞ்சிப் போய்விட்டது. பிரதமர் ஒரு இடத்துக்கு வருகிறார் என்றால் ஐம்பது கிலோ மீட்டர் சுற்றளவுக்கு சோதனையிடப்படுகிறது, குடியிருப்போர்கள் துன்புறுத்தப் படுகிறார்கள். கடைகண்ணிகள் இடிக்கப்படுகின்றன. போக்குவரத்துகள் நிறுத்தப்படுகின்றன. எதிர்கட்சி இளைஞர்கள் கைது செய்யப்படுகின்றனர். ஆயுத சோதனைக்கு பிறகுதான் மந்திரிகள், எம்.பி.களே அனுமதிக்கப்படுகிறார்கள். பத்திரிக்கை புகைப்படக்காரர்களின் காமிராவைக்கூட தரையைப் பார்த்து "கிளிக்" செய்யும்படி நிர்பந்திக்கிறார்கள். இந்தமாதம் டெல்லிப் போலீசாரையே தாக்கி அடித்தன "கருப்புப்பூனைகள்".

பிரதமரின் பாதுகாப்புக்கு மட்டும் அவை செயல்படப் போவதில்லை என்பது உறுதி. இந்திய உளவுப்படையின் "ரா" எப்படி ஈழ விரோத, மக்கள் விரோத வேலைகளைச் செய்து வருகிறது என்பது ஏற்கனவே அம்பலப்பட்டு வருகிறது. இப்போது சீக்கியத் தீவிரவாதிகளுக்கு எதிராக நடக்கும் பொற்கோவில் சண்டையில் மத்திய ரிசர்வ் போலீஸ் படையினர் என்ற போர்மையில் "கருப்புப்பூனைகள்" ஈடுபட்டுள்ளன. "டெலிஸ்கோப்" பொறுத்தப்பட்டு கிட்டத்தட்ட 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இலக்குகளைத் தாக்கும் அதிநவீன துப்பாக்கிகளை வைத்துக் கொண்டு சீக்கியத் தீவிரவாதிகளைச் சுட்டுத்தள்ளுகின்றன. "கருப்புப்பூனைகள்" சீக்கிய தீவிரவாதிகள் குறிவைக்கப் பயன்படும் தடுப்புச்சுவர் பொந்துகளுக்கே 'டெலிஸ்கோப்'மூலம் குறி வைத்து தாக்கித் தகர்க்கின்றன கருப்புப் பூனைகள். இலட்லரும், ஷாவும், மார்கோசும், இடி அமீனும் தமது அரசியல் எதிரிகளுக்கு எதிராக அதிரடிப்படைகளை ஏவி சதி, கொலைகளில் ஈடுபட்டனர். ஆயுதபேர ஊழல்கள் உட்பட தமது குற்றங்களை மறைக்க நீதிபதிகளையும், உளவுப் படைகளையும் பயன்படுத்தும் பாசிச ராஜீவ் காந்தி கும்பல் இந்த அதிரடிப்படையை அரசியல் எதிரிகளுக்கு எதிராக ஏவிடத் தயங்காது.!

காற்றில் இலை அசைந்தால்கூட அஞ்சி நடுநடுங்குகிறது பாசிச ராஜீவ் கும்பல். குண்டுதுளைக்காத காரும், மேடையும், கோட்டுமாகத்தான் வெளியே வருகிறது. ராஜீவ் "தண்டி" யாத்திரை போனால் கூடவே தலைப்பாகை கட்டிக் கொண்டு "தண்ட" "யாத்திரை போகின்றன "கருப்புப் பூனைகள்". ராஜீவ் காங்கிரசு மாநாட்டிற்குப் போனால் கூடவே கதர்குல்லாய் போட்டுக் கொண்டு திண்டுகள் மீது சாய்ந்திருக்கின்றன "கருப்புப்பூனைகள்" ராஜீவ் "சுதந்திரம்" ஓட்டம் ஓடினால் கூடவே விளையாட்டு உடையில் ஓடுகின்றன "கருப்புப்பூனைகள்" வேடிக்கை,வெட்கக்கேடு! ஆனாலும் குற்றவாளியைத் தண்டனையிலிருந்து எத்தனை நாட்களுக்குக் கருப்புப்பூனைகள் காக்க முடியும்!

மணி

படிப்பகம்

www.padippakam.com

## விடுதலைப் போரும் திராவிட இயக்கமும்

# “ஒரு கம்யூனிச துரோகியின் மரணசாசனம்”

④

*(சென்ற இதழின் தொடர்ச்சி)*

**1952** —முதலாவது பொதுத் தேர்தலில் சென்னை மாநிலத்தின் எதிர்க்கட்சியாகப் போலிக் கம்யூனிஸ்டுக் கட்சி இருந்தது. திருவாளர் பி. ராமமூர்த்தி எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். ஐந்தாண்டுகளில் கழுதையாய் இருந்த போலிக் கம்யூனிஸ்டுக் கட்சி கட்டெறும்பானது.

1949 —இல் தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் எட்டே ஆண்டுகளில் மாநில எதிர்க்கட்சியானது. ஓட்டுப் பொறுக்குவதோடு திமுக-வின் பின்னே சீட்டுப் பிச்சையெடுக்கும் கட்சியாக சிறுத்துப் போனது, போலிக் கம்யூனிஸ்டுக் கட்சி.

இந்த வீழ்ச்சிக்கான காரணத்தை கம்யூனிச இயக்கத்தின் தவறுகளுக்குள் பிரதானமாகத் தேடவில்லை, ராமமூர்த்தி. கம்யூனிச இயக்கத் தலைமையின் துரோகம் மற்றும் திராவிட இயக்கம் பற்றிய அதன் தவறான அணுகுமுறை ஆகியவையே வீழ்ச்சிக்கான பிரதான காரணம் என்று அவர் கருதவில்லை. இந்தப் பிரதான காரணத்தை மழுப்பி விட்டு, வீழ்ச்சிக்குத் தலைமையேற்ற பொறுப்பைத் தட்டிக் கழித்து விட்டு வேறு காரணங்களைத் தேடித் திரிகிறார், திரிபுவாதி ராமமூர்த்தி.

அண்ணாத்துரையின் ''பணத்தோட்டம்'' என்ற நூலில் காணும் இரண்டு வாதங்களை எடுத்து வைத்துக் கொண்டு மிக மிக விரிவான முறையில் அம்பலப்படுத்துகிறார்,

திராவிட இயக்கத்தினர் தாங்களே உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி என்றும், ''திராவிட சோசலிசப் பூங்கா''வை ஏற்படுத்துவதே தமது லட்சியம் என்றும் இன்னமும் பீற்றிக் கொள்கின்றனர். ஆனால் திராவிட இயக்கத்தின் சமூகப் பொருளாதாரத் தத்துவமாகக் கூறப்படும் அண்ணாதுரையின் ''பணத்தோட்டம்'', பின்வரும் கருத்தை சாரம்சமாக முன்வைக்கிறது.

''உற்பத்திப் பொருட்களை வாங்கும் பொதுமக்கள் கொடுக்கும் விலைதான் தொழிலாளிக்கும் முதலாளிக்கும் முறையே உபரியாகவும் லாபமாகவும் போய்ச் சேருகிறது. அதைப் பங்கு போட்டுக் கொள்வதில் தொழிலாளி, முதலாளி ஆகிய இரு சாரருக்கும் இடையிலே ஏற்படும் சச்சரவில் தலையிட்டுத் தீர்த்து வைக்கும் உரிமை பொதுமக்களுக்கு வேண்டும். இந்த உரிமையைப் பொதுமக்கள் உணரவும், உணர்ந்து நியாயம் கூறவும், தகராறுகளைத் தீர்க்க முன்வருமாறும் பொதுமக்களை அழைக்கும் பணியினைத் திராவிடர் கழகம் செய்கிறது. தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையே ஓர் அன்புத் தொடர்பு ஏற்படுத்தும் ஓர் அரிய காரியம் அது''. (பணத்தோட்டம்)

அண்ணாதுரையின் இந்தக் கண்ணோட்டம் பொதுவுடமைத் தத்துவத்துக்கு மாறானது; எதிரானது; வர்க்க சமரசக் கொள்கைதான்' அதன் அடிப்படை; முதலாளித்துவச் சுரண்டல் என்ற அமைப்பைப் பாதுகாக்கும் கட்சிகளுக்கும் அண்ணாதுரை திராவிடர் இயக்கத்துக்குச் சொல்லிக் கொடுக்கும் தத்துவத்துக்கும் இடையே எந்தவித்தியாசத்தையும் காண முடியாது என்று சரியாகவே சுட்டிக் காட்டுகிறார், ராமமூர்த்தி.

அதேபோல இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஏற்படும் எதிர்கால பொருளாதார வளர்ச்சி பற்றி, ''பணப் பெருக்கத்தின் வேகம் குறைந்து வருகிறது. வரும் ஆண்டுகளில் பணப்பெருக்கம் என்பது பழங்கதை ஆகிவிடும்; இலாபம் என்பது தேடவேண்டிய அளவு அரிதாகிவிடும்'' என்று அறுதியிட்டு, நம்பிக்கையோடு அண்ணாதுரையின் ஆருடம் பொய்த்துப் போனதையும் ராமமூர்த்தி சுட்டிக் காடடுகிறார்.

''வர்க்க சமரசத்தைக் கொள்கையாகக் கொண்ட'' கட்சி தன்னைத்தான் உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி என்று உரிமை பாராட்டிக் கொண்டு வளர்ந்தது. சர்வ முட்டாள்தனமான பொருளாதார கண்ணோட்டமுடையவர் ''பேரறிஞர்'' ஆனார். எட்டாண்டுகளில் அவர்கள் பிரதான எதிர்க்கட்சியினர் ஆனார்கள். அதற்கு ராமமூர்த்தி கூறும் காரணங்கள் என்ன?

''வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது'' என்ற கோஷம் பிரதான கோஷமான சமயத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் அரசியல் சுதந்திரம் அடைந்ததோடு மழுங்கி விட்டது. அதற்குக் காரணம் ஆட்சியில் இருந்த காங்கிரசு கட்சி ஏகாதிபத்திய நாடுகளையும், பன்னாட்டு முதலாளிகளையும், தொழில் வளர்ச்சிக்கு நம்பியிருந்ததுதான். அதே சமயத்தில் தொழில் வளர்ச்சியில் மிகுந்த ஏற்றத்தாழ்வாக இருந்தது ஒரு பிரத்தியட்ச உண்மை. தி.மு.க.வுக்கு தமிழ்நாட்டில் செல்வாக்கு வளர ஆரம்பித்தது. அந்த இயக்கத்தைச் சார்ந்தவர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சென்னை ராஜதானியிலாவது நீடித்து நிலைத்திருக்க வேண்டும் என்று கோரிய வரலாற்றை மக்கள் மறக்கத் துவங்கினர்.

''சுதந்திரத்திற்கு முன்னர் 8 மாதங்களும், சுதந்திரம் பெற்ற பிறகு நான்கு ஆண்டுகளும், கம்யூனிஸ்டு கட்சியும் வெகுஜன ஸ்தாபனங்களும் செயல்பட முடியாதிருந்த நிலைமையில் (கம்யூனிஸ்டு) கட்சி ஏடு வெளியிட முடியாத நிலையில், திராவிட முன்னேற்றக் கழகம், ''வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது,'' ''வடநாட்டு ஆதிக்கம்'', ''இந்தி ஏகாதிபத்தியம்'' முதலிய கோஷங்களை முன்வைத்து திராவிட நாட்டுப் பிரச்சாரத்தை வலுவாக நடத்தத்துவங்கிது. அதே சமயத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியின் மீது கட்டவிழ்த்து விடப் பட்டிருந்த கடும் அடக்கு முறையை வன்மையாகக் கண்டித்தும் பிரச்சாரம் செய்தது. அரிசி முதலிய அத்யாவசிய பண்டங்களின் விலையேற்றத்தையும் நெசவாளர்களுக்கு ஏற்பட்ட நூல் பஞ்சத்தையும் முன்வைத்து காங்கிரஸ் ஆட்சிக்கு எதிராக பிரச்சாரம் செய்தது.

''அதே சமயத்தில், 'சமதர்மம்', 'சோசலிசம்' போன்ற கோஷங்களைப் பொதுவாகப் பிரச்சாரம் செய்தது. இவைகளின் விளைவாக 1952 தேர்தலுக்குள், தேர்தல் சமயத்தில், தமிழ்நாட்டில் தி.மு.க.வுக்கு ஓரளவு செல்வாக்கு வளர்ந்தது'' (ராமமூர்த்தி நூல், பக்.362,366)

''தி.மு.க.வோ இந்தக் காலத்தில்தான் ''தெற்குத் தேய்கிறது'', என்ற கோஷத்தைப் பலமாகக் கிளப்பியது. மேலே கூறியவாறு இந்தக் கோஷம் தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் முதலாளிகளின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய உதவிகரமாக இருந்தது மட்டுமல்ல'', தமிழ்நாட்டில் தொழில்கள் வளரவும் இது உதவியது.

''இந்தச் சூழ்நிலையில் தமிழ்நாட்டு தொழில் முதலாளிகள் இதற்கு முன்பு சுதந்திர போராட்ட காலத்தில் காங்கிரசை ஆதரித்தவர்கள். தி.மு.க.வுக்கும் ஆதரவு தர முன் வந்ததும் வியப்பேதும் இல்லை.''

**ரணதிவே தலைமையிலான அரைவேக்காட்டுத் தனமான புரட்சிக்கு ஆயிரக்கணக்கான அணிகளைப் பலிகொடுத்தது. மாபெரும் தெலிங்கானா புரட்சியைக்காட்டிக் கொடுத்தது. 5,000 புரட்சியாளர்களைப் பலி கொடுத்தது: அதன்பிறகு தற்போதைய நாடாளுமன்ற ஜனநாயகத்தை ஏற்று தேசிய நீரோட்டத்தில் கலப்பதாக தலைமை எழுதிக் கொடுத்து சரணடைந்தது: நாற்காலி சுகங்கான நாடாளுமன்றப்பன்றித் தொழுவத்தில் படுத்துப் புரள்வது-இவைதான் கம்யூனிச இயக்கத்தின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாக இருந்தன என்பதை மூடி மறைக்கிறார் ராமமூர்த்தி.**

படிப்பகம்

www.padippakam.com

''காங்கிரசை எதிர்த்து 1952- சட்டமன்றத் தேர்தலில் கமயூனிஸ்டுக் கட்சி முதல் எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்த போதிலும், விவசாயமே முக்கியமான தொழிலாக இருந்த தமிழ்நாட்டில், அது தொழிலாளிகளைத் தொழிற்சங்கங்களில் திரட்டி அவர்களுடைய போராட்டங்களிலேயே பிரதான கவனத்தைச் செலுத்தியது. இதனால், தஞ்சை மாவட்டத்தின் கீழ்பகுதியையும், சிதம்பரம் தாலுகாவில் சில பகுதிகளையும் தவிர, அதற்கு கிராம மக்களிடையே செல்வாக்கு வளரவில்லை. அம்மக்களிடையே பிடிப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படவில்லை.

தி.மு.க.வுக்கோ முதலாளிகளிடமிருந்து கிடைத்த ஆதரவைப் பயன்படுத்தி பல வார ஏடுகள், மாத ஏடுகள், நாளேடுகள் ஆகியவற்றை துவக்கி தன்னுடைய பிரச்சாரத்தை முடுக்கி விடுவது சாத்தியமாயிற்று.

அந்தக் கட்சியின் இந்தப் பிரச்சாரத்தில் அதன் அடிப்படையான தத்துவார்த்தத்தில் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் இருந்த மாணவர்கள் மயங்கி கிராமங்கள் தோறும் அதை பரப்பிக் கொண்டிருந்தனர்.

இதற்கு உதவியாக கிராம மக்களுக்கிருந்த பொருளாதாரப் பிரச்சினைகளையும் அது முன்வைத்து தீவிரப் பிரச்சாரம் செய்து வந்தது. ஆனால் கிராம மக்கள் வரிச்சுமையாலும், விலைவாசிக் கொடுமையாலும், கடன் சுமையாலும், நிலச்சுவன்தாரர்களின் சுரண்டலினாலும் படும் அவஸ்தையிலிருந்து அவர்கள் மீள்வதற்கு அவர்களின் பல்வேறு பகுதியினரை ஸ்தாபன ரீதியாகத் திரட்டி எந்தப் போராட்டத்தையும் அது நடத்தவில்லை. ஆயினும் கம்யூனிஸ்ட் கட்சி மேற்கூறிய திட்டுதிட்டான சில பிரதேசங்களைத் தவிர மற்ற பகுதிகளில் விவசாய, விவசாயத் தொழிலாளர்களுடைய போராட்டங்களையும், இயக்கத்தையும் நடத்தாததால் அந்தப் பிரதேசங்கள் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு சூன்யப் பிரதேசங்களாக இருந்தன. இங்கெல்லாம் தி.மு.க. தலைவர்கள் கல்லூரிகளிலிருந்தும் பள்ளிகளிலிருந்தும் வெளியேறிய கிராமப்புறத்து மாணவர்களும் காங்கிரஸ் ஆட்சிதான் அவர்களுடைய வறுமைக்கும் துன்ப துயரங்களுக்கும் காரணம் என்ற பிரச்சாரத்தை முடுக்கி விட்டு, அவர்களின் நம்பிக்கையை பெறுவதில் வெற்றி பெற்றனர்.



ராமமூர்த்தி உட்பட போலிக் கம்யூனிஸ்டுகள் 1930களில் கட்சி தடை செய்யப்பட்ட போது தலைமறைவாக ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஆயுதப் போராட்டத்தைத் தயாரித்து நடத்தவில்லை. காங்கிரசு கட்சிக்குள் புகுந்து கொண்டு ``முற்போக்கான'' தீர்மானங்கள் நிறைவேற்றும்படி கெஞ்சிக் கொண்டிருந்தனர். குறிப்பாக ராமமூர்த்தி போன்றவர்கள் ``அரசியல் மாமா'' வேலை.பார்த்துக் கொண்டிருந்தனர். இந்த ``அரசியல் மாமா'' வேலை பார்த்த சம்பவங்களைப் பெருமைக்குரிய சாதனைகளாகத் தமது நூலில் ராமமூர்த்தி பீற்றிக் கொள்கிறார்.

மூன்றாவது தொழிலாளர்களின் பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக கம்யூனிஸ்ட் தலைவர்களும், ஊழியர்களும் போராடிய போதிலும் காங்கிரஸ் கட்சி கடைப் பிடித்து வந்த நிலம் சம்பந்தமான கோரிக்கைகள், வரி, நிதிக் கொள்கைகள், முதலாளித்து முறையில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு அயல்நாட்டு முதலாளிகளோடு தொடர்ந்து கூட்டுச் சேர்வது, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் அமெரிக்க ஆதிக்கத்திலிருந்த உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம், முதலிய அமைப்புகளிடமிருந்து கடனை வாங்குவது போன்ற கொள்கைகளை விளக்கி, அதன் விளைவுகளைப் பற்றி எச்சரிக்கை செய்து மக்களைத் திரட்டவில்லை. இந்த அடிப்படையில் தி.மு.க.வின் அடிப்படை அரசியல் தத்துவார்த்தத்தை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யவில்லை. இவைகளெல்லம் தி.மு.க. வளருவதற்கு உதவியாக இருந்த மிகவும் முக்கிய காரணங்களாகும்'' (பக்.369,370)

தி.மு.க.வின் வளர்ச்சிக்கு ராமமூர்த்தி கூறும் பிரதான, காரணங்கள் இவை.

போலிக்கம்யூனிஸ்டுக் கட்சியின் வீழ்ச்சிக்கும், தி.மு.க.வின் வளர்ச்சிக்குமான காரணங்களைத் தொகுக்கும் ராமமூர்த்தி ஒரு கம்யூனிஸ்டுக்கே உரிய நேர்மையோடும் சுய விமர்சனத்தோடும் முன் வந்தாரா? இல்லை. மாறாக போலிக் கம்யூனிசத் தலைமையின் துரோகத்தனத்தை மூடி மறைக்கும் முயற்சியை முக்கியமாக செய்துள்ளார்.

◆ 1952 தேர்தலில் கம்யூனிஸ்டு கட்சி பிரதான எதிர்க்கட்சியாயிருந்த போதிலும், விவசாயமே முக்கியமான தொழிலாயிருந்த தமிழ்நாட்டில், அது தொழிலாளர்களைத் தொழிற் சங்கங்களில் திரட்டி அவர்களுடைய போராட்டங்களிலேயே பிரதானக் கவனத்தைச் செலுத்தியது. காவிரி வடிகால் பிரதேசம் தவிர மற்ற பகுதிகளில் விவசாய, விவசாயத் தொழிலாளர்களுடைய போராட்டங்களையும் இயக்கத்தையும் நடத்ததாதால் அந்தப் பகுதிகள் கம்யூனிச இயக்கத்திற்கு சூன்யப் பிரதேசங்களாக இருந்தன.

◆ தொழிலாளர்களின் பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக கம்யூனிஸ்டுத் தலைவர்களும், ஊழியர்களும் போராடிய போதிலும் காங்கிரசு கட்சியின் நிலப்பிரபுத்துவ ஏகாதிபத்திய சார்புக் கொள்கைகளை விளக்கி, அதன் விளைவுகளைப் பற்றி எச்சரிக்கை செய்து மக்களைத் திரட்டவில்லை. அந்த அடிப்படையில் தி.மு.க.வின் அடிப்படைத் தத்துவத்தை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யவில்லை.

இவை போலிக் கம்யூனிஸ்டுகளின் வீழ்ச்சிக்கும், தி.மு.கவின் வளர்ச்சிக்கும் ராமூர்த்தி கூறும் இரண்டாம்பட்ச காரணங்கள்.

இந்தக் காலக் கூட்டத்தில் போலிக் கம்யூனிஸ்டு தலைமை செய்த இரண்டு குற்றங்களை திருவாளர் ராமமூர்த்தி மூடி மறைத்து விட்டார்.

1948 இல் ராமமூர்த்தியின் சகபாடியும், தற்போது அவரது கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினராயும் உள்ள மாபெரும் பாட்டாளி வர்க்கத் துரோகி பி.டி ரணதிவே கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராய் இருந்தார். அவரது வழிகாட்டுதலின படி இந்தியாவில் உடனடியாகப் புரட்சி செய்து, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான தருணம் வந்து விட்டது என்று தீர்மானிக்கப்பட்டது. அதன்படி நாடு தழுவிய அளவில் தொழிற்சாலைகளில் பொது வேலை நிறுத்தமும், நகரங்களில் பேரெழுச்சியும் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்த படு முட்டாள்தனமான யுத்த தந்திரத்தை அமுல் நடத்தப் போய் கருச்சிதைவு ஏற்பட்டு நாடு முழுவதுமிருந்த ஆயிரக்கணக்கான கம்யூனிசப் புரட்சியாளர்கள் ''ஜனநாயக சோசலிச நாயகன், சமாதானக் காவலன்'' என்று போலிக் கம்யூனிஸ்டுகள் புகழும் நேருவின் அரசால் படுகொலை செய்யப்பட்டனர். பல்லாயிரக் கணக்கான புரட்சியாளர்கள் சிறையிலடைக்கப்பட்டனர்.

1948-51 ஆகிய மூன்றாண்டுகளில் ஆந்திரா - தெலுங்கானா மாபெரும் ஆயுதப் புரட்சியைக் கண்டது. 3000 கிராமங்களில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியது கம்யூனிசப் புரட்சியாளர்களின் தலைமையிலான செஞ்சேனை. 60,000 இந்திய இராணுவ வீரர்களை ஏவி அதை நேரு அரசு அடக்கி ஒடுக்கியபோது போலிக் கம்யூனிஸ்டு தலைமை காட்டிக் கொடுத்து துரோகமிழைத்தது. 50,000 கம்யூனிசப் புரட்சியாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

ரணதிவே தலைமையிலான அரைவேக்காட்டுத்தனமான புரட்சிக்கு ஆயிரக்கணக்கான அணிகளைப் பலி கொடுத்தது. மாபெரும் தெலுங்கானா புரட்சியைக் காட்டிக் கொடுத்து, 5000 புரட்சியாளர்களைப் பலி கொடுத்தது; அதன்பிறகு தற்போதைய நாடாளுமன்ற ஜனநாயகத்தை ஏற்று தேசிய



படிப்பகம்

www.padippakam.com

நீரோட்டத்தில் கலப்பதற்க தலைமை எழு திக் கொடுத்து சரணடைந்தது; நாற்காலி சுகம் காண்பதற்காக நாடாளுமன்றப் பன் றித் தொழுவத்திற்குப் போய்ப் படுத்து புரள் வது - இவைதான் கம்யூனிச இயக்கத்தின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாக இருந் தன என்பதை மூடி மறைக்கிறார், ராம மூர்த்தி.

கட்சியும், வெகுஜன அமைப்புகளும், வெளிப்படையாக இயங்குவதற்கும், கட்சி ஏடுகள் வெளியிடவும் வாய்ப்புகள் இருந் தால் வேகமான வளர்ச்சிக்கு உதவும் என் பது சரிதான்! ஆனால் அவை தலைம றைவாக இயங்க வேண்டிய நிர்பந்தம் ஏற்ப டுமாயின் அதற்கும் கம்யூனிஸ்டு கட்சி தயா ராய் இருக்க வேண்டும். அந்த சூழ்நிலைய லும் வளர முடியும்; அதற்குத்தான் முயற் சிக்க வேண்டும்.

ஆனால் ராமமூர்த்தி உட்பட போலிக் கம்யூனிஸ்டுகள் செய்தது என்ன? 1930 களில் கட்சி தடை செய்யப்பட்ட போது தலைமைறைவாக ஏகாதிபத்தியதிற்கு எதி ரான ஆயுதப் போராட்டத்திற்கு தயாரித்து நடத்தவில்லை. காங்கிரசு கட்சிகள் புகுந்து கொண்டு ''முற்போக்கான'' தீர்மானங்கள் நிறைவேற்றும்படி கெஞ்சிக் கொண்டிருந்த னர். குறிப்பாக ராமமூர்த்தி போன்றவர்கள் ''அரசியல் மாமா'' வேலை பார்த்துக் கொண்டிருந்தனர். ''அரசியல் மாமா'' வேலைபார்த்த சம்பவங்களைப் பெருமைக் குரிய சாதனைகளாகத் தமது நூலில் அவர் பீற்றிக் கொள்கிறார்.

1946 -52 கால கட்டத்தில் கட்சி தடை செய்யப் பட்டிருந்த போதும் ரணதிவே தலைமையில் நடந்த அரை வேக்காட்டுத் தனமான புரட்சிக்குத் தயாரிப்பதாகச் சொல் லிக் கொண்டு தொழிலாளர் - விவசா யிகளை ஏய்த்துத் தலைமறைவாகத் திரிந்த னர். தஞ்சை, மதுரை, கோவை, சேலம் தோழர்களின் தியாகத்தைக் காட்டி அவர்க ளுக்குத் தலைமறைவுத் தலைமை கொடுத்த தாகப் பீற்றிக் கொண்டு, பிறகு ஒட்டுப் பொறுக்கினர்.

கிராமப்புற - விவசாயிகளைப் புறக ணித்து, ஒரு தலைப் பட்சமாக தொழிற்சங்க இயக்கங்களுக்கு மட்டுமே அழுத்தம் கொடுத்தது; தொழிலாளர் மத்தியிலும் அர சியல் இயக்கங்களைப் புறக்கணித்து, பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக மட் டுமே போராடியது - இவ்விரு காரணங்கள் கம்யூனிஸ்டு கட்சிவளராததற்கும், தி.மு.க. வளர்ந்ததற்குமான காரணங்கள் என்று கூறும் போது கூட ராமமூர்த்தி சிரத்தை யோடு உணர்வு பூர்வமாக, நேர்மையோடு இதை ஒப்புக் கொள்ளவில்லை. வேறு வழி யின்றி ஒப்புக்குத்தான் கூறுகிறார்.

ஏனெனில், ராமமூர்த்தி தலைமையில் பங்கேற்ற போலிக் கம்யூனிஸ்டு கட்சியின் நடைமுறை இன்றுவரை தொழிற்சங்கவாத, பொருளாதாரவாத சகதிக்குள் மூழ்கித் திளைப்பதுதான்; மன்னிக்கவும். கேரளா, மேற்கு வங்கம், திபுரா போன்ற வாய்ப்பு டைய மாநிலங்களில் இதையும் கைவிட்டு நாற்காலி சுகங்கான நாடாளுமன்ற சாக்க டைக்குள் விழுந்து புரளுகிறார்கள்!

கம்யூனிஸ்டு கட்சியின் வீழ்ச்சிக்கும், தி.மு.க.வின் வளர்ச்சிக்குமான மேற்கண்ட காரணங்களை கட்சிக்குப்புதிதாக வந்த யாரோ ஒருவரோ, மூலையிலுள்ள ஏதோ ஒரு ஊழியரோ கூறவில்லை. சாவதற்கு சில மாதங்கள்வரை தலைமைப் பொறுப்பிலி ருந்தவர் கூறுகிறார். ஏதோ இயற்கையாக, ஏதோ ஒரு அருபமான சக்தி அல்லது அஃறி ணையான பொருள் செய்து விட்ட ''கவனக் குறைவு'' போல சித்தரிக்கிறார், துரோகி யின் முதல் வரிசையில் நின்றவர்.

அது மட்டுமல்ல; டி.வி.எஸ். முதலாளி யால் தொழிற்சங்கத் தலைவராக்கப்பட்டு சாகும் வரை, அவருடைய கட்சியின் தொழறசங்கப் பிரிவுக்கு அகில இந்தியத் தலைவராக இருந்தவர். அவரது கட்சி அரசி யலைப் புறக்கணித்து தொழிற்சங்க வாதத் துக்குள் மூழ்கிக் கிடக்கிறது என்றால் அதற் கான தலையாய பொறுப்பேற்கவேண்டிய வர்களில் ஒருவர்தானே இந்த ராமமூர்த்தி!

ராமமூர்த்தி உள்ளிட்ட போலிக் கம்யூ னிஸ்டுகளின் இந்தத் துரோகத் தனத்துக்கு காரணம், அடிப்படையிலேயே அவர்கள் கம்யூனிஸ்டுகள் அல்ல. தொழிற்சங்கப் பிழைப்புவாதத்தையே மார்க்சிய - லெனி யத்துக்கு மாறான முதலாளித்துவ தத்துவத் தையே - அடிப்படையாக கொண்டவர்கள் தான். இதற்கான சான்றுக்கு வேறு எங்கே யும் போக வேண்டியதில்லை. ராமமூர்த்தி யின் இதே நூலில் ஆதாரம் இருக்கிறது. தொழிலாளிகள் வர்க்க உணர்வு பெற்று அர சியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் வளர்ச் சிப் போக்கு பற்றிப் பின்வருமாறு ராம மூர்த்தி எழுதுகிறார்.

''கூலி உயர்வுக்காக, போனசுக்காக இது போன்ற சில பொருளாதார கோரிக்கைக ளுக்காக ஒரு தொழிற்சாலையிலுள்ள தொழலாளிகள் சங்கம் அமைத்து ஒன்றுப் பட்டு போராடுகின்றனர். இது வர்க்கப் போராட்டத்தின் ஆரம்ப கட்டம். பிறகு ஒரே தொழிலில் ஈடுபட்டுள்ள பல தொழிற் சாலைகளைச் சேர்ந்த தொழிலாளிகள் ஒன் றுபட்டு, மாநில ரீதியாகவும் தேசிய ரீதியாக வும் போராடுகின்றனர். இது இந்த வர்க்கப் போராட்டத்தில் அடுத்தக் கட்டங்கள். ஒரு நாடு பூராவுமுள்ள தொழிலாளிகள் பொது வேலை நிறுத்தத்தில் இறங்குகின்றனர். இது இன்னும் ஒருபடி மேலான வர்க்கப் போராட்டத்தின் ஒரு கட்டம்.

இந்தப் போராட்டங்களில், அமைதியை யும் ஒழுங்கையும் நிலைநாட்டுவது என்ற பேரால், போலீஸ் முதலாளிகளுக்கு சாதகமாக போராடும் தொழிலாளிகள் மீது ஏவி விடப்படுகிறது. அப்பொழுது தொழி லாளிகளுக்குத் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள சட்டங்கள் வேண்டுமென்ற உணர்வு ஏற்படுகிறது. அதற்காக அவர்கள் போராடுகின்றனர். இது வர்க்கப் போராட் டத்தின் அடுத்த கட்டம். இவைகளெல்லாம் முதலாளித்துவ சமூதாய அமைப்பை மாற் றும் போராட்டங்களல்ல; அந்த அமைப்புக் குள்ளேயே சுரண்டலின் அளவைக் குறைப் பதற்கான போராட்டங்கள்.

இப்படிபட்ட போராட்டங்கள் மூலம் அரசு என்பது சுரண்டும் வர்க்கங்களின் பிடி யிலுள்ள தொழிலாளிகளை அடக்க சுரண் டல் முறையைப் பாதுக்காக்கும் பலாத்கா ரத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்பு என்பதை சுரண்டப்படுவோர் காண்கிறார்கள். அதற்குப் பிறகு அரசு இயந் திரத்தை சுரண்டும் வர்க்கங்களின் கையிலி ருந்து பிடுங்கி, அந்த அரசியல் அதிகாரத் தைக் கொண்டு உடமை வர்க்கங்களுக்குச் சொந்தமான உற்பத்தி சாதனங்களை சமூக உடமையாக்கி, அவற்றை நிர்வகிப்பதற்குத் தகுந்த புதிய அரசு இயந்திரத்தை சிருஷ்டிக் கும் பாதையில் போகிறார்கள். இது தான் வர்க்கப் போராட்டத்தின் உச்சக் கட்டம். இது வெற்றியடைவதற்காகவே சோசலிசப் புரட்சி ஏற்படுகிறது'' (ராமமூர்த்தி நூல், பக்.305 306)

முதலாளிக்கும், அரசுக்கும் எதிரான

## பக்தியில் மேழ்கி பாராளுமன் கம்யூனிஸ்டு

பஞ்சாப் பிரச்சினைக்குத் தீர்வாக, மதத்துக்கும் அரசியலுக்கும் உறவே கூடாது என்று ஊருக்கு உபதேசம் செய்த 'மார்க் சிஸ்டுகள்' இன்று பட்டையடித்துக் கொண்டு கேரளத்திலுள்ள குருவாயூர் கோவில் நிர்வாகக் கமிட்டியில் போய் உட் கார்ந்து கொண்டு சந்தி சிரிக்கிறார்கள்.

திருப்பதிக்கு அடுத்தபடியாக ஆண்டுக்கு 8 கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய, மருத்துவமனை, கல்லூரி போன்ற நிறுவ னங்களையும் கொண்ட வசதியான சாமி யைக் கொண்டதுதான் குருவாயூர் கோவில். இக் கோவில் நிர்வாகக் கமிட்டித் தலைவராக இருந்த காங்கிரஸ் எம்.எல்.ஏ. மோகன கிருஷ்ணனின் பதவிக்காலம் சமீ பத்தில் முடிவடைந்ததும் ஆளும் 'மார்க் சிஸ்டு'களுக்கு மிகவும் வாய்ப்பாக அமைந் தது. பிற கோவில்களைப் போலல்லாமல் நிர்வாகக் கமிட்டியிலுள்ள 9 பேரில் 5 பேரை நியமிக்க அரசுக்குள்ள உரிமையைப் பயன்படுத்தி தங்களது கட்சிக்காரர்களை யும் கூட்டணிக்கட்சி விசுவாசிகளையும் உறுப்பினர்களாக நியமித்தார்கள். கோட் டையிலிருந்து கோவில் வரை எல்லா இடங்களிலும் 'மார்க்சிஸ்டுகள்' இருந்தால் தானே கட்சி வளரும்! புரட்சி நடக்கும்!?

இதை எதிர்த்து இந்துக்கள் கேரள உயர் நீதி மன்றத்தில் ஒரு மனுதாக்கல் செய்தனர். அதில், ''அறநிலையத் துறை மந்திரி விசுவ நாத மேனன் ஒரு மார்க்சிஸ்டு; கடவுள் நம் பிக்கையில்லாதவர். அவர் நிர்வாகக் கமிட் டிக்கு உறுப்பினர்களை நியமிப்பது கோவில் விதிமுறைகளுக்கு எதிரானது''



படிப்பகம்

www.padippakam.com

என்று குறிப்பிட்டிருந்தனர். பின்னர் உயர்நீதிமன்றம், 19 பேர் கொண்ட இடதுசாரி ஜனநாயகக் கூட்டணி மந்திரி சபையில் 15 பேராக உள்ள இந்துக்களில், கடவுள் நம்பிக்கை உடைய ஜனதா தலைவரும் கல்வி மந்திரியுமான கே. சந்திர சேகரனை அழைத்து கமிட்டி உறுப்பினர்களை நியமிக்க கோரியது. ஆனால் அவரோ, 'மார்க்சிஸ்டுகள்' நியமித்த உறுப்பினர்களையே தாமும் ஆதரிப்பதாகக் கூறி நழுவிக் கொண்டார்.

சந்திரசேகரன் இப்படிச்செய்வதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. கூட்டணியிலுள்ள கட்சிகள் பொதுத்துறை, கூட்டுறவுத் துறை, வாரியங்கள், கோவில் நிர்வாகம் என்று பொதுச் சொத்துக்களையும் அரசாங்க சன்மானங்களையும் பரஸ்பரம் பகிர்ந்து கொண்டு சூறையாடுவது என்பது அவர்களிடையே நிலவும் எழுதப்படாத ஒப்பந்தம். அதன்படி குருவாயூர் கோவில் நிர்வாகத்தை மார்க்சிஸ்டுகளுக்கு விட்டுக் கொடுப்பது என்ற முடிவுப்படி அவரும் ஒதுங்கிக் கொண்டு விட்டார்.

இதற்கிடையே வலது 'கம்யூனிஸ்ட்' பிரமுகர் ராமகிருஷ்ணன் தன்னை கமிட்டியில் உறுப்பினராக்க பேரம் பேசினார். ஆனால் 'மார்க்சிஸ்டுகள்' கடைசி நேரத்தில் காலை வாரிவிட்ட ஆத்திரத்தில், 'மார்க்சிஸ்டுகள்' தனக்களித்த பிச்சையான சுற்றுலா வாரியத் தலைவர் பொறுப்பிலிருந்து விலகி விட்டார்.

இந்தக் கேலிக் கூத்துகளுக்குப் பிறகு, 'மார்க்சிஸ்டு'களின் ஆசிரியர் சங்கத் தலைவரான பேராசிரியர் நாராயணன் நிர்வாகக் கமிட்டித் தலைவராக நியமிக்கப்பட்டார். அவரும் பக்திப் பெருக்கோடு பட்டையடித்துக் கொண்டு "நான் கடவுளை நம்பும் மார்க்சியவாதி" என்று பெருமையோடு குறிப்பிடுகிறார்.

இவராவது பரவாயில்லை; கிறிஸ்துவரான ஜாக்கோப் தம்பி என்பவரை கோவில் நிர்வாக கமிட்டி உறுப்பினராக நியமித்தது என்ன நியாயம் என்று இந்துக்கள் எகிறிக் குதித்தனர் நரியைப் பரியாக்கிய கதையாக



"நான் கடவுளை நம்பும் மார்க்சிஸ்டு!" - குருவாயூர் கோயிலின் நிர்வாகக் கமிட்டி தலைவர் நாராயணன்.

கிறிஸ்துவரானாலும் இந்து கோயிலுக்குச் சென்று வழிபடும் மார்க்சியவாதி ஜாக்கோப் தம்பி - குருவாயூர் கோவில் நிர்வாகக் குழு உறுப்பினர்

பாசிஸ்டுகளுக்கே சிவப்புச் சாயம் பூசி முற்போக்கு சக்தி என்று ஆதரிக்கும் 'மார்க்சிஸ்டு'களுக்கு இது ஒரு பொருட்டா? "ஜாக்கோப் தம்பி ஒரு அரிஜன இந்து. அவர் கோட்டயம் இந்து கோவிலுக்கு அடிக்கடி சென்று வழிபடுவர்" என்று தனது கட்சிக்காரருக்காக சப்பைகட்டு கட்டியது 'மார்க்சிஸ்ட்' அரசு. ஆனால் இந்துக்கள் ஜாக்கோப் தம்பியின் பூர்வீகத்தைத் தோண்டி, அவர் குடும்பம் கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்ததுதான் என்று ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தினர். ஆனாலும் என்ன? "ராஜீவ் காந்தி ஒரு பார்சிக்காரர்; பிரும்மானந்த ரெட்டி ஒரு கிறிஸ்துவர். இவர்களெல்லாம் இந்துக் கோவிலுக்குப் போவதில்லையா?" என்று அறிவார்ந்த விளக்கம் கொடுக்கின்றனர் ஆளும் 'மார்க்சிஸ்டுகள்'!

என்ன செய்வது? புரட்சியை அடகு வைத்துவிட்டு ஓட்டுப் பொறுக்க வந்தாகிவிட்டது. பொதுச் சொத்துக்களையும் அரசாங்க சன்மானங்களையும் சலுகைகளையும் சூறையாட வாய்ப்பு கிடைக்கும்போது மார்க்சியமாவது வெங்காயமாவது என்று நாலாந்தர ஓட்டுக் கட்சியாக மாறிவிட்டனர் 'மார்க்சிஸ்டுகள்'. எப்படியோ சீரழிந்து போகட்டும். ஆனால் எதற்காக செங்கொடியையும் கம்யூனிஸ்டு லேபிளையும் இந்தக் கழிசடைகள் பயன்படுத்துகிறார்கள்?

— மணி

தமது தொழிற்சங்கக் கோரிக்கைகளுக்கான போராட்டங்களைப் படிப்படையாக உயர்ந்த கட்டத்திற்கு வளர்த்துச் செல்வதன் மூலம் தொழிலாளர்கள் வர்க்க உணர்வும் அரசியல் உணர்வும் பெற்று புரட்சிக்குத் தயாராகிறார்கள் என்கிறார் ராமமூர்த்தி. மேலெழுந்து வாரியாகப் பார்க்கும் போது சரியானதாக தர்க்க ரீதியானதாகத் தோன்றும் இந்தக் கருத்து உண்மையில் முதலாளித்துவ தத்துவ அடிப்படையிலானது மார்க்சிய - லெனினிய அணுகுமுறைக்கு மாறானது; எதிரானது.

"தொழிலாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்கும் இடையிலான தொழில் ரீதியிலான போராட்டங்களை மூட்டும் தொடர்ந்து நடத்துவதனால், அதையே படிப்படியாக உயர்ந்த கட்டத்துக்கு எடுத்துச் செல்வதனால் தொழிலாளிக்கு அரசியல் உணர்வு வரவே முடியாது; அப்படிச் செய்வதனால், தொழிலாளிக்கு சுயநல உணர்வு அல்லது முதலாளித்துவ தத்துவ உணர்வுதான் வரமுடியும். தொழிற்சங்கக் கோரிக்கைகளோடு, கம்யூனிஸ்டு கட்சியைப் பொறுத்தவரை அதை விட முக்கியமாக, பிற சமூக அரசியல், பொருளாதார கலாச்சாரத் துறைகளிலான போராட்டங்களும், தொழிலாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்படும் பிற பகுதி மக்களது அரசியல் சமூக, பொருளதார, கலாச்சாரத்துறைகளிலான போராட்டங்களும் அக்கம் பக்கமாக ஒரே சமயத்தில் நடத்துவதன் மூலமே தொழிலாளிகள் அரசியல் உணர்வு பெறமுடியும்" என்பதுதான் மார்க்சிய லெனினிய அணுகுமுறை.

ஆகவே, கம்யூனிச இயக்கத்தின் வீழ்ச்சிக்கும் தி.மு.க. வின் வளர்ச்சிக்கும் முக்கியமான காரணங்கள்: போலிக் கம்யூனிஸ்டுகளின் அரை வேக்காட்டுத் தனமான புரட்சித் திட்டத்தை அமுலாக்க முயன்று கருச்சிதைவு ஏற்பட்டது. மாபெரும் தெலுங்கானா புரட்சியைக் காட்டிக் கொடுத்து தலைமை துரோமிழைத்தது. சட்ட பூர்வக் கட்சியாக இயங்கி நாற்காலி சுகத்தை அனுபவிப்பதற்காக நாடாளுமன்ற சாக்கடைக்குள் கட்சியை இழுத்துப் போட்டது. தொழிலாளி விவசாயி இயக்கத்தைப் புரட்சிகரமான முறையில் கட்டி அமைப்பதற்குப் பதில் தொழிற்சங்கப் பிழைப்பு வாதத்துக்குள் தள்ளியது ஆகியவையாகும்.

இதோடு, தி.மு.க. உட்பட திராவிடக் கட்சிகள் தமிழக மக்கள் மத்தியில் தொடர்ந்து செல்வாக்கு வகிப்பதற்கு மற்றுமொரு முக்கியமான காரணம், தேசிய இனப் பிரச்சினையில் மார்க்சிய-லெனினிய அணுகுமுறையை வைப்பதற்குப் பதில் போலிக் கம்யூனிஸ்டுகள் தேசிய நீரோட்டத்துடன் கலந்து, தேசிய இன ஒடுக்குமுறைக் கொள்கையும், ஓட்டுப் பொறுக்கும் சந்தர்ப்ப வாத தேர்தல் கூட்டு என்ற கொள்கையும் கடைப்பிடிப்பதாகும். இதுபற்றி விரிவாக அடுத்த இதழில் பார்ப்போம்!

தொடரும்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ். மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.
அச்சிடுபவர்: எம் கே ... பிரேம் பிரஸ், 107-எ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை-600 094.

www.padippakam.com




# இதுதான் இன்றைய இந்தியா

இதோ, முகமெல்லாம் பல்லாக பூரித்துப் போய் மேடையில் அமர்ந்திருக்கும் 'தலைவர்'களைக் கவனியுங்கள் தம்பதி சமேதராக வந்திருக்கும் ஜனாதிபதி, நேரத்தைப் பொன்னாக மதிக்கும் தமிழக கவர்னர் அலெக்சாண்டர், 'பாரி' சங்கிலித் தொடர் நிறுவனத்தின் தலைவர் — தரகு முதலாளி ஏ.எம்.எம். அருணாச்சலம். இவர்கள் எல்லோரும் கூட்டாக ஒன்று சேர்ந்து 'பாரி' நிறுவனத்தின் 200வது ஆண்டு விழாவைக் கோலாகலமாக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

சென்னை ஆட்டோ ஓட்டுனர்கள், ஓட்டல் தொழிலாளர்கள் தங்கள் போராட்டத்தின்போது கவர்னரிடம் மனு கொடுக்கச் சென்றபோது காணாமல் போனவர், தற்போது நியாயமான சம்பள உயர்வு கோரி மறியல் போராட்டம் நடத்தும் ஆசிரியர் சங்கத்தை அழைத்துப் பேசக்கூட நேரம் இல்லாமல் தவிப்பவர், தங்கள் கட்சியின் சார்பாக மனு கொடுக்க வந்த 'மார்க்சிஸ்டு' கட்சியின் முன்னாள் சட்டசபைத் தலைவரான உமாநாத் மற்றும் அவருடன் வந்தவர்களை அவசர வேலையைக் காரணங் காட்டி நிற்கவைத்தே பேசி திருப்பியனுப்ப எத்தணித்த 'கடமைவீரர்' — இப்படி தறிக்கெட்டு திரிகிறாரே என யாரும் 'மகா'' அலெக்சாண்டரைக் கேள்வி கேட்க முடியாது!

200 ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலேய காலனியாதிக்க வாதிகளின் துணையுடன் இந்தியாவில் நுழைந்த 20 வயதே நிரம்பிய ஜெ.டபிள்யூ. டேர் என்ற வர்த்தகரால் துவக்கப்பட்டது பாரி நிறுவனம்.

இன்று நாட்டிலேயே அதிகமாக சர்க்கரை உற்பத்தி செய்யும் பல நிறுவனங்களின் தனிப்பெரும் நிறுவனமாக வளர்ந்துள்ளது.

'82ம் ஆண்டில் இந்நிறுவனத்தின் தலைவராகப் பொறுப்பேற்று அதன் பங்குகளையும் விலைக்கு வாங்கிய டி.ஐ. சைக்கிள்ஸ் நிறுவனத்தின் முதலாளியான அருணாச்சலம் 'பாரி'யை தலைகீழாக நவீனப்படுத்தினார். ஈட்டுத் தொகையை காட்டி 2,600 தொழிலாளர்களை கட்டாயப்படுத்தி வேலையிலிருந்து நீக்கி மீதமிருந்த 3,700 தொழிலாளர்கள் மீது அவ்வேலையை திணித்தது, நிர்வாகம். அதுமட்டுமல்ல நாளொன்றுக்கு 4,000 டன்னாக இருந்த சர்க்கரை உற்பத்தியை 5,000 டன்னாக உயர்த்தி மேலும் தொழிலாளர்களை கசககி பிழிகிறது.

இதோ, இங்கே பாருங்கள், வேர்த்து விறுவிறுக்க நடை பயணம் கிளம்பிவிட்டார் கவர்னர் அலெக்சாண்டர். துணை ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா உடன்வர, காங்கிரசு கட்சியின் தமிழக தலைவர் மூப்பனார்ஜி, தங்க பாலு படைசூழ, ராஜீவ் தண்டியாத்திரை நடத்தியது மாதிரி கவர்னர் அலெக்சாண்டரும் வேதாரண்யம் உப்பு சத்தியாகிரக பயணம் மேற்கொண்டார்.

அரசே இவ்விழாவை அதிகாரபூர்வமாக நடத்தும் என ஆணை பிறப்பித்து அதை அமுல்படுத்தியும் காட்டினார். உப்பு சத்தியாகிரக யாத்திரைக்கு உடன்வர உண்மையான தியாகிகள் கிடைக்காததால் தேசீய சாரணர் படையிலிருந்து 100 பேரையும், 'நேருயுவ கேந்திரா' என்ற கூலிக்கு மாரடிக்கும் காங்கிரசு சேவாதள தொண்டர்களையும் உடன் அழைத்துக் கொண்டார். பலத்த போலீசு பாதுகாப்புடன், சென்னை வானொலி நிலையத்தாரையும் இணைத்துக் கொண்டார். வேதாரண்ய யாத்திரையைப் பெரிதுபடுத்தி, காங்கிரசு தேச பக்தர்களையும், தியாகிகளையும் தமிழக மக்களுக்கு நினைவுபடுத்தினார். வரும் தேர்தலில் காங்கிரசு பக்கம் மக்களை கவர்ந்து இழுக்க இப்படி மாடாய் உழைக்கிறார்: நாயாய அலைகிறார்.

இப்படித்தான், ஆந்திர மாநிலத்து காங்கிரசு கவர்னர் குமுத்பென் ஜோஷி உட்பட, எல்லா மாநிலத்தின் கவர்னர்களும், குறிப்பாக எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களில் காங்கிரசு கட்சிக்கும், உள்ளூர் தரகு முதலாளிகளுக்கும், பண்ணைபிரபுகளுக்கும், விசுவாச ஊழியம் செய்கிறார்கள் கவர்னர் 'பெருமக்கள்'.

கவர்னர் பதவி, குடியரசு தலைவர் பதவி புனிதமானது; அரசியலுக்கு அப்பாற்பட்டது; நடுநிலையானது என மக்களிடம் ஏய்த்துக்கொண்டே, ஓட்டு பொறுக்கி கட்சிகளின் நாலாந்தர பிரச்சாரகர்கள் பாணியில், மத்திய அரசின் ஆட்சியில் இருக்கும் ஓட்டுகட்சிகளுக்கு எடுபிடி வேலை செய்கிறார்கள், இந்த பொதுமக்களின் சேவகர்கள். உழைக்கும் மக்கள், பிரச்சினைகள் என்று வந்தாலோ, காததூரம் ஓடுவது, விடாமல் துரத்துபவர்களை போலீசு, இராணுவ, அதிகாரவர்க்க அரசு எந்திரத்தை ஏவி வெறி கொண்டு தாக்குகிறார்கள்.

மக்களுக்கு வேண்டாத பெரும் சுமையான இந்த ஓட்டுண்ணி கூட்டத்தை மொத்தமாக ஒழித்துக்கட்டுவது எப்போது?



படிப்பகம்